பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

தெளிவான
வானிலை
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# உதயன்

சுடர்: 29 கதிர்: 255 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 23, வெள்ளி 08.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

# வெண்மையாக்கும் கிறீம்களால் ஆபத்து

## போலிகள் விற்பனை செய்யப்படுவதால் சரும நோய்கள் ஏற்படும் என எச்சரிக்கை; இதுவரையில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக.8
யாழ்.மாவட்டத்தின் நகரப் பகுதிகளில் போலி முகப்பூச்சுக்கள் (கிறீம்) விற்பனை செய்யப்படுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த யாழ். மாவட்ட அரச அதிபர், இது தொடர்பில் இரு விற்பனை முகவர்கள் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்,
யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக, காலாவதியான மருந்துப் பொருள்கள் அதிகளவில் விற்பனை செய்து வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு எதிராக நீதிமன்றங்கள் ஊடாக கடுமையான நடவடிக்கைகள்

22 ஆம் பக்கம் பார்க்க



## பொலிஸின் வீட்டிலேயே திருடியவன் சிக்கினான்

யாழ்ப்பாணம், ஓக.8
பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரது வீட்டிலேயே திருட முற்பட்ட திருடன், வீட்டின் உட்கூரை உடைந்ததால் வகையாக மாட்டிக் கொண்டான். இந்தச் சம்பவம் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த திங்கட் கிழமை நடந்துள்ளது.
குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் அன்றைய தினம் கடமைக்குச் சென்றுவிட்டார். அதனால் அவரது மகள் மற்றும் குழந்தை ஆகியோர் வெளிக் கதவைப் பூட்டி விட்டு உள்ளே இருந்துள்ளனர். வெளிக் கதவு பூட்டியிருந்ததை அடுத்து திருடுவதற்கு திட்டமிட்ட திருடன், வீட்டின் பின்புறமாக வீட்டின் கூரை மீதேறி இரண்டு ஓடுகளைக் கழற்றிவிட்டு உள்ளே இறங்கியுள்ளான். அவனது போதாத காலம், உள்கூரை (லெவல்சீற்) அவனது கால் பட்டு உடைந்து விட்டது.

22 ஆம் பக்கம் பார்க்க

## கோரப்பட்டது மன்னிப்பு



ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, ஓக.8
இந்தியப் பிரதமர் மோடியையும், தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் கிண்டல் செய்து, பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் வெளியான கட்டுரைக்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மன்னிப்புக் கோரப்பட்டது என்று தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ்.
பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட கட்டுரையால், இந்தியாவுடனான உறவுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகளால் நேற்றுக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது. அதற்குப் பதிலளித்து உரையாற்றுகையிலேயே வெளிவிவகார அமைச்

22 ஆம் பக்கம் பார்க்க

## போர்க்குற்ற உள்ளக விசாரணைகள் இன்று ஆரம்பமாகிறது மன்னாரில்

யாழ்ப்பாணம், ஓக. 8
இலங்கையின் உள்ளக போர்க் குற்ற விசாரணையின் பகிரங்க அமர்வு இன்று மன்னார் மாவட்டத்தில் ஆரம்பமாகவுள்ளது. 65 அழைக்கப்பட்ட சாட்சிகள் இன்றைய அமர்வில் சாட்சியமளிக்கவுள்ளதுடன், போர்க் குற்றம் தொடர்பில், அழைக்கப்படாதவர்களும் சாட்சியமளிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் காணாமற் போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியால் ஆணைக்குழு அமைக்கப்பட்டது. வடக்கு - கிழக்கில்

22 ஆம் பக்கம் பார்க்க

## மக்கள் போராட்டம் குறித்து விளக்கம் கோரப்பட்டுள்ளது

### ஜனாதிபதி செயலகத்தால் கோப்பாய் பிரதேச செயலகத்திடம்

யாழ்ப்பாணம், ஓக.8
கடந்த ஜூன் மாதம் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக மீள்குடியமர்வை வலியுறுத்தி நடத்தப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டம் தொடர்பில் யாழ். மாவட்ட செயலகத்திடம் ஜனாதிபதி செயலகம் கடிதம் மூலம் விளக்கம் கோரியுள்ளது என்று தெரியவருகின்றது.
வளலாய் மக்கள், தமது காணிகள் சுவீகரிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த ஜூன் மாதம் 16 ஆம் திகதி கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாகப் போராட்டம் நடத்தியிருந்தனர். 224 குடும்பங்களுக்குச் சொந்தமான 240 ஏக்கர் காணிகளையே, வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை குடியமர்த்துவதற்காக சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனை எதிர்த்தே பொதுமக்கள் மற்றும்அரசியல்வாதிகள்இணைந்து கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.
போராட்டத்தின் முடிவில், தமது சொந்த நிலத்தில் குடியமர்வதற்கு அனுமதிக்க வேண்டும் எனக் கோரி ஜனாதிப

22 ஆம் பக்கம் பார்க்க

## ஆதனங்களின் பெறுமதியை குறைத்துக்காட்ட வேண்டாம்

### நொத்தாரிசுகளுக்கு யாழ்.மாவட்ட காணிப் பதிவாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.8
காணி (ஆதனங்கள்) உரிமை மாற்றம் செய்யப்படுகின்ற போது, ஆதனத்தின் தற்போதைய பெறுமதியைக் குறைத்துக் குறிப்பிட்டு ஆவணங்களை அத்தாட்சிப்படுத்துவது அவதானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள யாழ்.மாவட்ட காணிப் பதிவாளர், இது தொடர்பில் ஏற்பட்ட பெறுமதிக் குறைவும் அதற்கான தண்டமும் அறவீடு செய்யப்பட வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் நொத்தாரிசுகளை எச்சரித்துள்ளார்.
யாழ்.மாவட்ட காணிப் பதிவாளரால் நொத்தாரிசுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

22 ஆம் பக்கம் பார்க்க



ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய கூட்டமொன்று நேற்று ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சித் தலைமையகமான சிறிகோத்தாவில் நடந்தது. அதில் ஐ.தே.க. தலைமைக் குழுவின் தலைவர் கரு ஜெயசூரியவும் கலந்துகொண்டார். (ற)

## ஒன்றுகூடுகின்ற உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்

### வலியுறுத்துகின்றது ஐ.நா.

யாழ்ப்பாணம், ஓக.8
அமைதியாக ஒன்று கூடுவதற்கான உரிமை இலங்கையில் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது ஐக்கிய நாடுகள் சபை.
கொழும்பில் கடந்த திங்கட் கிழமை வடக்கு - கிழக்கைச் சேர்ந்த காணாமற் போனோரின் குடும்பத்தினர் பங்கேற்ற கலந்துரையாடல் நிகழ்வு பௌத்த பிக்குகளைக் கொண்ட குழுவால் குழப்பப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் மேற்கு

22 ஆம் பக்கம் பார்க்க

## நடப்பவை பற்றி எவருக்கும் தகவல் கொடுக்கக் கூடாது

### சப்ரகமுவ தமிழ் மாணவர்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.8
சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் நடைபெறும் விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு தகவல்கள் தெரிவிக்க வேண்டாம் எனவும், அங்கு நடைபெற்ற விடயங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை ஒளிப்படம் எடுத்து ஊடகங்களுக்கு வழங்கியவர்கள் யார் என்பது தொடர்பிலும் விசாரணைகள் செய்யப்பட்டது என்று தெரிவித்துள்ளனர் அங்குள்ள தமிழ் மாணவர்கள்.
சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ் மாணவன் ஒருவன் தாக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த செவ்வாய்க் கிழமை மற்றுமொரு தமிழ் மாண

22 ஆம் பக்கம் பார்க்க

## சிறுமியைக் கடத்தி வன்புணர்வுக்குட்படுத்திய குற்றவாளிக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், ஓக.8
பதின்ம வயதுச் சிறுமி ஒருவரைக் கடத்திச் சென்று வன்புணர்புக்குட்படுத்தியவருக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது யாழ்.மேல் நீதிமன்றம். சிறுமியைக் கடத்துவதற்கு உடந்தையாக இருந்தவருக்கும் 5 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர் இன்னமும் தலைமறைவாக உள்ளதால், அவரைப் பிடிப்பதற்கான பிடியாணையையும் நீதிமன்றம் பிறப்பித்தது.

22 ஆம் பக்கம் பார்க்க

## சொந்தக் காணிகளை மீட்கும் வகையில் விசேட ஏற்பாடுகள் விரைவில்

### நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகின்றார்

கொழும்பு, ஓக.8
பயங்கரவாத நிலைமை மற்றும் ஆயுதம் தாங்கிய குழுக்களால் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டு சொந்தக் காணிகளின் ஆட்சியுரிமையை இழந்து நிற்கும் மக்கள் தங்களது காணிகளை மீட்டுக்கொள்ளக்கூடிய வகையில் ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் ஊடாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்று தெரிவித்துள்ளார் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம்.
நாடாளுமன்றில் நேற்று ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலத்தை சமர்ப்பித்து அது மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"நீண்டகாலமாக நிலவிய பயங்கர வாத நிலைமை, ஆயுதமேந்திய குழுக்களின் செயற்பாடுகளால் இடம்பெயர்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட மக்கள் ஆட்சியுரிமையை இழந்துள்ளனர். இவர்களின் நலன் கருதியே இந்தப் புதிய ஆட்சியுரிமை சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதன்படி, உரிமையாளர்கள் இல்லாத நிலையில், காணிகளை தம்வசப் படுத்தியவர்களிடமிருந்து காணிகளை மீட்டு அவற்றை உண்மையான உரிமையாளர்க

22 ஆம் பக்கம் பார்க்க

# வெளிநாட்டு தூதரகங்களிடம் மன்னிப்புக் கேட்கின்றது அரசு

## சாடுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, ஓக.8
வெளிநாட்டுத் தூதுவர்கள் நிபந்தனைகளை மீறிச் செயற்படுவார்களாயின், அவர்கள் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு அறிவித்து அவர்களை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து என எந்த நாட்டுத் தூதுவராக இருந்தாலும் அவரை நாட்டைவிட்டு வெளியேற்றுமாறு அறிவிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

பிக்குகள் குழுவினரை வைத்துக் கொண்டு வெளிநாட்டவர்களை விரட்டியடித்த அரசு, பின்னர் ஒவ்வொரு தூதரகங்களுக்கும் இரகசியமாகச் சென்று அங்குள்ளவர்களை வணங்கி மன்னிப்புக் கேட்கிறது என்றும் குற்றஞ்சாட்டினார்.

1994 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டுவரை அரசியல் பழி வாங்கல்களுக்கு உட்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியினர் தொடர்பில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் அடங்கிய கோவையை வெளியிடும் நிகழ்வு கட்சித் தலைமைகத்தில் கட்சியின் தேசியத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார் ரணில் விக்கிரமசிங்க.

"அளுத்கம தாக்குதல் சம்பவத்தால் உலகின் கவனம் இலங்கையின் பக்கம் திரும்பியுள்ளது. சில தேரர்களின் செயற்பாட்டால் இலங்கையின் பௌத்த சாசனத்திற்குப் பேரவமானம் ஏற்பட்டுள்ளது. ஏனைய சமயங்களுக்கு இலங்கையில் எந்த செயற்பாட்டையும் முன்னெடுக்க முடியாது என்ற எண்ணம் சர்வதேசத்தினரிடம் தோன்றியுள்ளது.

காணாமல்போனோரின் உறவினர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் இடையில் அண்மையில் மருதானையில் சந்திப்பொன்று இடம் பெற்றது. பிக்குகள் குழுவினர் குழப்பம் விளைவித்து இந்தச் சந்திப்பைத் தடுத்து நிறுத்தினர். காணாமல் போனோரின் உறவினர்கள் வெளிநாட்டுத் தூதுவர்களிடம் சில தகவல்களைத் தெரிவிக்க முயற்சித்தனர். அதற்கு இடமளிக்க முடியாது என இந்தச் சம்பவம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு பதிலளித்திருந்தது. எந்த சட்டத்தின் அடிப்படையில் வெளிவிகார அமைச்சு இவ்வாறு செயற்படுகிறது?

### அரசியல் பழிவாங்கல்

நாட்டில் தொடர்ச்சியாக அரசியல் பழிவாங்கல்கள் இடம் பெற்று வருகின்றன. இதை மாற்றியமைக்க வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன், 17 ஆவது திருத்தச் சட்டத்தை மீள் நடைமுறைப் படுத்த வேண்டும்."- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-சி)

# சிறுவர் நாடகத் திருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஓக.8
நல்லூர் திருவிழா காலத்தில் செயற்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' எனும் தொனிப் பொருளிலான சிறுவர் நாடகத் திருவிழா எதிர் வரும் 12 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. நல்லூர் குறுக்குத்தெரு பாணன் குளத்தடி திறந்தவெளியரங்கில் தினமும் இரவு 7 மணி தொடக்கம் 8.30 மணி வரை இந்த நாடகம் நடைபெறவுள்ளது.

சிறுவர்களுக்கான அறிவூட்டல் மற்றும் மகிழ்சியை ஏற்படுத்தும் கலகலப்பான நாடகமாக குழந்தை ம.சண்முகநாதனின் எழுத்திலும் தே.தேவானந்தின் நெறியாள்கையிலும் உருவாக்கப்பட்ட 'கூடி விளையாடு பாப்பா' எனும் நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

பாடசாலை விடுமுறைக் காலம் என்பதாலும் நல்லூர் திருவிழாக்காலம் என்பதாலும் இந்த நாடகவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனுமதி இலவசம் என்பதால் மாணவர்கள் பங்குபற்றி பயன்.பெறலாம் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ற-14)

# மாணவனை விடுக்குமாறு சப்ரகமுவவில் போராட்டம்

> பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் வவுனியாவைச் சேர்ந்த முன்னாள் போராளியான யோ.நிரோசன் என்ற மாணவன் கடந்த செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணம், ஓக.8
பயங்கரவாத தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ள சப்ரகமுவ பல்கலைக் கழக மாணவனை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, பல்கலைக் கழக வளாகம் முன்பாக மாணவர்களால் நேற்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்று திரண்டு, இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை மூன்று மணி நேரம் மேற்கொண்டுள்ளனர். சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவனான சுதர்சன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் வவுனியாவைச் சேர்ந்த முன்னாள் போராளியான யோ.நிரோசன் என்ற மாணவன் கடந்த செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட்டிருந்தார்.

நிரோசன் கொழும்பில் 4 ஆம் மாடியில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டு வரும் நிலையில், மேற்படி மாணவனுக்கும், தாக்குதல் சம்பவத்துக்கும் தொடர்பு இருக்கின்றது என்று சந்தேகிப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே, கைது செய்யப்பட்ட மாணவனுக்கும் தாக்குதல் சம்பவத்துக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை என்று தெரிவித்தும், கைது செய்யப்பட்ட மாணவனை உடனடியாக விடுதலை செய்யுமாறும் கோரி, சப்ரகமுவ பல்கலைக் கழகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.


நேற்று மதியம் 12 மணிக்கு ஆரம்பமான போராட்டம் பி.ப 3 மணி வரையில் நீடித்தது. இந்தப்போராட்டத்தில் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் சிங்கள - தமிழ் மாணவர்கள் சகலரும் கலந்து கொண்டுள்ளனர்.


அதேவேளை, மாணவன் கைது செய்யப்பட்டமை குறித்து அவரது பெற்றோரால் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. (ற-5)

---

தற்போது சிறு சிறு குச்சொழுங்கைளும் சீர்ப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் யாழ்.நகரை அண்மித்த மக்கள் நடமாட்டம் மிக்க வீதிகள் பல ஆண்டுகளாகக் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. இருபது ஆண்டுகளுக்கு முன்னர் சீர்ப்படுத்தப்பட்ட இந்த வீதிகள் தற்போது பழுதடைந்து பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றன. ஆறுகால்மடம் பின் வீதி (படங்கள் -1), ஆனைக்கோட்டை பிடாரி கோயில் வீதி (படங்கள் -2), ஆனைக்கோட்டை வராகி கோயில் வீதி (படங்கள் -3), ஆனைக்கோட்டை அடைக்கலநயாகி ஆலய வீதி (படங்கள் - 4), ஆனைக்கோட்டை காக்கைதீவு வீதி (படங்கள்-5) போன்ற வீதிகள் முற்றிலும் சேதமடைந்து பாவனைக்குதவாத நிலையில் காணப்படுகின்றன. மாணவர்கள், தொழிலாளர்கள், வேலைகளுக்குப் பயணிப்போர் எனப் பலரும் நித்தமும் இந்த வீதிகளை உபயோகிக்கின்றனர். இப்பேர்தே வீதிகளில் பயணிக்க முடியாத நிலை காணப்படும் நிலையில், மழை பொழிய ஆரம்பித்துவிட்டால் என்னாகுமோ என அங்கலாய்கின்றனர் அந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். எப்போது இந்த வீதிகளுக்கு விடிவு கிடைக்கும்?


(5)


(1)


(4)


(3)


(1)


(3)


(1)


(2)

பக்கங்கள்: இருபத்துநான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 23 வெள்ளிக்கிழமை (08.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 255

# மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இருவரை நாய் விற்பவர்களாகச் சித்திரித்து சுவரொட்டி

## கோட்டை ரயில் நிலையப் பகுதிகளில் இனந்தெரியாதோரால் ஒட்டப்பட்டன

**மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான நிமல்கா பெர்னாண்டோ மற்றும் சுனில் தென்னக்கோன் ஆகியோரை நாய் விற்பனை செய்வோராகச் சித்திரித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு அண்மைய பகுதிகளில் இனந்தெரியாதோரால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. நிமல்கா பெர்னாண்டோ மற்றும் சுனில் தென்னக்கோன் ஆகியோரது தொலைபேசி இலக்கங்களுடன், வளர்ப்பு நாய் விற்பனைக்கு என்று அச்சடிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களே கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு அண்மைய பகுதிகளில் இனந்தெரியாதோரால் ஒட்டப்பட்டுள்ளன.**

குறித்த துண்டுபிரசுரங்களில், வளர்ப்பு நாய்கள் விற்பனைக் குண்டு என்ற தலைப்புடன், உயர்தரமிக்க பெறுமதி மிக்க நிலையில் லம்ரடோ, புல்மஸ்ரிப், ரோட்வயலர், பாஸ்கவுண்ட், கிறேகரிஸ் பனியல், ஜேர்மன் ஷெப்பேர்ட், கோல்டின் றிட்றிவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதுடன் தொடர்புகொள்ளவும் என்று குறிப்பிட்டு இரு தொலைபேசி இலக்கங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதுகுறித்துக் கூறிய நிமல்கா பெர்னாண்டோ, "இன்று (நேற்று) காலையில் எனது தொலைபேசிக்கு புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் இருந்து வந்த அழைப்பில் வளர்புநாய் விற்பனை குறித்த சுவரொட்டி தொடர்பில் வினவப்பட்டது. பேசியவர் பொலிஸ் நிலையத்தின் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். அத

(21ஆம் பக்கம் பார்க்க)



## பெற்றோர் கவனவீனம்; திருடராக மாறிய சிறார்கள்

யாழ்ப்பாணம், ஓக. 8

பெற்றோரின் உரிய கவனிப்பு இன்மையால் சிறார்கள் குடும்ப நல உத்தியோகத்தரின் அலுவலகத்தை உடைத்துப் பொருள்களைத் திருடியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. குறித்த இரண்டு சிறுவர்களும் தற்போது நீதிமன்ற உத்தரவுக்கமைய இல்லம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுவர்கள் இருவரும், புத்தூர் வாதரவத்தையிலுள்ள குடும்பநல உத்தியோகத்தரின் அலுவலத்தை உடைத்து 5 கதவுத்திறப்புகள் மற்றும் அலுமினியச் சட்டி என்பனவற்றைத் திருடி இரும்புக் கடையில் 330 ரூபாவுக்கு விற்றுள்ளனர் என்று ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

அந்தப் பொருள்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். ஆயினும் அந்த அலுவலகத்திலிருந்து சுமார் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுப்பட்டு வருகின்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சிறார்கள் இருவரையும் சிறுவர் இல்லம் ஒன்றில் தங்க வைக்க உத்தரவிடப்பட்டது. குறித்த சிறார்களின் பெற்றோர் சிறார்களில் அக்கறையற்றிருந்ததாலேயே

(22ஆம் பக்கம் பார்க்க)

## உணர்வுபூர்வமான பிரச்சினையை தீர்க்க பொருத்தமான வழிமுறைகள்

கொழும்பு, ஓக.8

இலங்கையுடனான உணர்வுபூர்வமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பொருத்தமான வழிமுறைகள் கையாளப்படும் என்று தெரிவித்துள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையட் அக்பருதீன்.

டில்லியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இந்தியாவும், இலங்கையும் ஒன்று மற்றையதன் கவலைகளைத் தீர்ப்பதற்கு நிறைய வழிமுறைகளைக் கொண்டிருக்கின்றன. அவை எப்போதுமே பகிரங்கப்படுத்தப்படாதவையாக இருக்கலாம்.

இராஜதந்திரிகள் முன் கதவுகளையே பயன்படுத்துகின்றனர். ஏனையவர்களும் கூட அதனைப் பயன்படுத்துகின்றனர். எமது பாதுகாப்புக்கு அச்சு

(21ஆம் பக்கம் பார்க்க)

## கடமையைச் செய்ய விடாமல் தடுத்த மீனவர்கள் மீது வழக்கு

### கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் தாக்கல்

வலிதென்மேற்கு,ஓக.8

தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்திச் சட்டவிரோதமான முறையில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களைப் பிடிப்பதற்குச் சென்ற கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளைக் கடமையைச் செய்யவிடாமல் தடுத்து நிறுத்தியது மல்லாமல் அவர்களைச் சுற்றி வளைத்து பிடிக்க முற்பட்ட 25 மீனவர்களுக்கு எதிராக திணைக்கள அதிகாரிகள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள்.

கிளிநொச்சி மாவட்டம் கிளாலி சங்குப்பிட்டிக்கடல் நீரேரியில் கடந்த மாதம் 22 ஆம் திகதி தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்திச் சட்டவிரோதமான முறையில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சாவகச்சேரியைச் சேர்ந்த மீனவர்களை கையும் மெய்யுமாக பிடிப்பதற்கு காலை 6.00 மணியளவில் இரு வள்ளங்களில் சென்ற கிளிநொச்சி மாவட்டக் கடற்றொழலில் திணைக்கள அதிகாரிகளைக் கடமை செய்ய விடாமல் தடுத்து நிறுத்திய ஆறு வள்ளங்களில் வந்த மீனவர்கள், அதிகாரிகளை பொல்லு

(22ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பிராயில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஓக.8

உரும்பிராய் தெற்கு பகுதியில் உள்ள வீடொன்றில் 15 லட்சம் பெறுமதியான நகைகள் மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. குறித்த

(22ஆம் பக்கம் பார்க்க)

## தங்கூசி வலையில் மீன்பிடி 20 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஓக. 8

தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்த நால்வருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது நீதிமன்றம்.

அல்லைப்பிட்டி கடலில் வைத்து குறித்த நால்வரும் வலைகள் மற்றும் 58 கிலோகிராம் மீனுடன் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்தொழில் திணைக்களத்தினரால் பிடிக்கப்பட்டு ஊர்காவற்துறை நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

அவர்கள் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மீன் மற்றும் வலை என்பனவற்றை அழிக்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டது.

(ற-4)

## சுகாதார உணவு சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டும்

### யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.8

நல்லூர் உற்சவ காலத்தில் சுகாதார உணவுச் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளுக்கு ஏற்ப வியாபார நிலையங்கள் செயற்பட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.

குறிப்பாக உணவுப் பண்டங்களை விற்பனை செய்யும் விற்பனை நிலையங்கள் அவற்றை இறுக்கமாகக் கடைப்பிடிக்க

(22ஆம் பக்கம் பார்க்க)

## சிறைச்சாலை உத்தியோகத்தரை அவமதித்தவர் சிறையிலடைப்பு

யாழ்ப்பாணம், ஓக.8

திருட்டுச் சம்பவம் தொடர்பில் கைதான சந்தேக நபர் ஒருவர், நீதிமன்றத்துக்குள் சிறைச்சாலை உத்தியோகத்தர்களை அவமதித்த குற்றத்துக்காக ஒரு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

குறித்த நபர் மற்றும் அவரது மனைவி ஆகியோர் நயினாதீவில் இடம்பெற்ற திருவிழாவில் நகைகள் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் விளக்கமறியலில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டபோதும் அவர்களை எவரும் பிணையில் எடுக்க முன்வரவில்லை. ஆதனால் அவர்கள் தொடர்ந்து விளக்கமறியலில் உள்ளனர்.

ஊர்காவற்துறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின் குமார் முன்னிலையில் குறித்த

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் மாணவர்களுடைய கல்விச் செலவை பொறுப்பேற்கும் பிரான்ஸ் தமிழ்ப் பாடசாலை

### வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 8

யாழ்.மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட ஆயிரம் மாணவ மாணவியரின், ஆரம்ப கல்வியிலிருந்து உயர்கல்வி வரைக்குமான கல்விக்கான செலவுகளை பிரான்ஸிலுள்ள புலம்பெயர் தமிழ் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பொறுப்பெடுப்பதற்குச் சம்மதித்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம்.

கடந்த மாதம் ஐரோப்பிய நாடுகளுக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணத்தின் போதே மேற்படி உறுதிமொழி தனக்கு வழங்கப்பட்டது என்று அவர் தெரிவித்துள்ளார்.

"பிரான்ஸிலுள்ள பாடசாலை ஒன்றின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களோடு புலம்பெயர் அமைப்பு ஒன்றின் உதவியுடன் கலந்துரையாடல் நடத்தினேன். அந்தக் கலந்துரையாடலின் போது, யாழ். மாவட்டத்தில் கல்வியில் பெரும் வீழ்ச்சி காணப்படுகிறது. வறுமை கோட்டிற்குள் உள்ள குடும்பங்களின் மாணவ, மாணவிகள் பலர் திறமைசாலிகளாக இருந்தும் அவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் புத்தகப்பை, காலணிகள், பாதவுறைகள் போன்ற அடிப்படை தேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றார்கள். அதன் காரணமாக அவர்கள் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டு கல்வி நிலையிலும் பின்தங்கி வருகின்றனர் என்று தெரிவித்திருந்தேன்.

அந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுமாறு விடுத்த வேண்டுகோளை பாடசாலை நிர்வாகம் ஏற்றுக் கொண்

(22ஆம் பக்கம் பார்க்க)

# யெகோவா மாநாடு யாழ்.துரையப்பாவில்

யெகோவாவின் சாட்சிகளின் வருடாந்தமாநாடு'கடவுளுடைய அரசாங்கத்தை முதலில் நாடுங்கள்!' என்ற தலைப்பில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெறும். இந்த மூன்று நாள்களும் நிகழ்ச்சிகள் காலை 9.20 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணிக்கு முடிவடையும். வெள்ளிக் கிழமை மாலை 'பிசாசுக்கு இடம் கொடுக்காதீர்கள்' என்ற நாடகமும், சனிக்கிழமை மாலை 'யெகோவா ஒருவரே உண்மையான கடவுள்' என்ற ஒடியோ நாடகமும் இடம்பெறவுள்ளது.

மண்டல மாநாட்டின் இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.20 இற்கு 'உலகை ஆளத் தகுதியானவர் யார்?' என்ற தலைப்பில் 30 நிமிடங்களுக்கு பைபிள் சார்ந்த விசேட சொற்பொழிவு வழங்கப்படுவதோடு மாநாட்டின் உச்சக் கட்டமாக 'ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை' என்ற பைபிள் சார்ந்த நாடகமும் இடம்பெறவுள்ளது. (ஓ)

# மன்னார் அஞ்சல் அத்தியட்சகராக நியமனம்

மன்னார், ஓக.8

மன்னார் பிரதேச அஞ்சல் அத்தியட்சகராக ஐ.சின்னப்பு கடந்த மாத பிற்பகுதியில் நியமிக்கப்பட்டுள்ளார். வடபிராந்திய அஞ்சல் திணைக்கள பிராந்திய நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இவர் புதிய நியமனத்தைப் பெற்றுள்ளார். முன்னரும் இவர் மன்னார் பிரதேச அஞ்சல் அத்தியட்சகராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-122)

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)
DAWN OF THE PLANET OF THE APES 3D
Platinum 3D 10.30am, 2.30pm, 6.30pm
N.லிங்குசாமி வழங்கும்
மஞ்சப்பை
N.ராகவன்
Silver 10.15am, 2.15pm, 6.15pm
KICK
(இந்தி) ஆங்கில மொழிபெயர்ப்புடன்
Bronze 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## கோயில் உதவியாளர் தேவை

இணுவில் திருப்பதி வேங்கடேஸ்வரர் ஆலயத்திற்கு ஆச்சாரமுள்ள, கோயில் வேலை தெரிந்த, அண்மையில் வசிக்கின்ற உதவியாளர் தேவை. அனுபவமுள்ளவர்கள் எதிர்வரும் 09,10 சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் 10 மணிவரையும் சுயவிவரக்கோவையுடன் நேரில் சமுகம் தரவும். கே.கே.எஸ் வீதி, இணுவில், மருதனார்மடம்.

தொடர்பு: 077 490 4100

(50649) (12.3.6)

## ஸ்ரீ ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் ம்ருதிகா பிருந்தாவனம் நல்லூர் யாழ்ப்பாணம்.

தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்திருக்கும் **சங்கீத வித்துவான் கலைமாமணி ஆண்டாள் கோயில் சிவகுமார் குழுவினரது இசை ஆராதனை இன்று (08.08.2014) வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணிக்கு இடம்பெறும்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தர்மகர்த்தா ச. சிவசிதம்பரம் குடும்பம்.

(50647) (45.3)

## தவறவிடப்பட்டுள்ளது

Laptop bag ஒன்று நாவாந்துறைக்கும் பத்திரிசிரியார் வீதிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

077 440 0610, 021 222 8499 (50863) (45.3)

## வீடு வாடகைக்கு

யாழ்.நகரிலிருந்து ½ கி.மீ. தூரத்தில் 72, மாட்டீன் றோட்டில் சகல வசதிகளுமுடைய வீடு வாகனத்தரிப்பிடத்துடன் வாடகைக்குண்டு. அறைகள் மாணவர்களுக்கும், வேலைபுரியும் பெண்களுக்கும் உண்டு. (உணவு உட்பட)

தொடர்பு: 078 617 3033

(50655) (12.3.6)

## வியாபார விஸ்தரிப்பு உத்தியோகத்தர் தேவை

**(பெண்கள் மட்டும்)**

**தகைமை:** G.C.E. (O/L)

**மேலதிகதகைமை:** அழகுக்கலையில் ஈடுபாடும் சம்பாதிக்கும் தேவையும், ஆர்வமும் உள்ளவர்கள்.

**வயதெல்லை:** 18-25 வரை.

**காலம்:** 09.08.2014 (சனிக்கிழமை)
10.08.2014 (ஞாயிற்றுக்கிழமை)

**நேரம்:** இருநாள்களும் 9A.m- 12 P.m, 2P.m - 5P.m

கொடுப்பனவுகள் குறித்து நேர்முகத் தேர்வில் பேசித்தீர்மானிக்கலாம்.

Myura Fashion manthir, 71, Nallur Cross Road, Jaffna.
T.P. 077 524 2852/ 021 568 8645

## தென்மராட்சி கல்வி வலயம்

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தும்

### முழுநிலா நாள் கலை விழா – 2014

**காலம்** : 2014.08.10 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணி
**இடம்** : தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபம், சாவகச்சேரி.

தலைவர்
**திரு. சு. கிருஷ்ணகுமார்**
(வலயக் கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி)

பிரதம விருந்தினர்
**கௌரவ த. குருகுலராசா**
(அமைச்சர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்)

சிறப்பு விருந்தினர்
**உயர்திரு. சி. சத்தியசீலன்**
(செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்)

பண்பாட்டு கோல உடையினைத் தரித்து கலைவிழாதன்னில் கலந்து மகிழ்ந்திட உங்களை அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

(சி.15371) (45.6.3)

சாவகச்சேரி. தென்மராட்சி கல்வி வலயச் சமூகம்.

## அரசாங்க அறிவித்தல்

### பகிரங்க ஏலவிற்பனை - 2014

### மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், கணனிகள், பிரிண்டர்கள், தட்டச்சுப்பொறிகள், ரயர்கள், போட்டோப்பிரதி இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்சார உபகரணங்கள், குளிரூட்டிகள் தொலைக்காட்சி போன்ற பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலவிற்பனையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மாவட்டச் செயலகம் மற்றும் உரிய பிரதேச செயலகங்களின் களஞ்சியக் கிளைகளுடன் தொடர்பு கொண்டு ஏலவிற்பனை நடைபெறவுள்ள நாளுக்கு முன்வரும் அலுவலக நாளில் மட்டும் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை பொருள்களை பார்வையிடலாம். ஏலவிற்பனையில் பொருள்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏலவிற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் (பொது 172) பெற்று அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு முன்னர் பொருள்களை அவ்விடங்களில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

| இல | அலுவலகம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | பிரதேச செயலகம் நல்லூர் | 18.08.2014 திங்கட்கிழமை | மு.ப 10.00 | பி.செ.நல்லூர் |
| 02 | பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் | 18.08.2014 திங்கட்கிழமை | மு.ப 11.00 | பி.செ.யாழ்ப்பாணம |
| 03 | பிரதேச செயலகம் காரைநகர் | 18.08.2014 திங்கட்கிழமை | மு.ப 10.00 | பி.செ. காரைநகர் |
| 04 | பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை | 19.08.2014 செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ. ஊர்காவற்துறை |
| 05 | பிரதேச செயலகம் பருத்தித்துறை | 19.08.2014 செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ. பருத்தித்துறை |
| 06 | பிரதேச செயலகம் சாவகச்சேரி | 20.08.2014 புதன்கிழமை | மு.ப 11.00 | பி.செ. சாவகச்சேரி |
| 07 | பிரதேச செயலகம் கோப்பாய் | 20.08.2014 புதன்கிழமை | மு.ப 10.00 | பி.செ. கோப்பாய் |
| 08 | பிரதேச செயலகம் கரவெட்டி | 20.08.2014 புதன்கிழமை | மு.ப 10.00 | பி.செ. கரவெட்டி |
| 09 | பிரதேச செயலகம் மருதங்கேணி | 20.08.2014 புதன்கிழமை | மு.ப 11.00 | பி.செ. மருதங்கேணி |
| 10 | பிரதேச செயலகம் வேலணை | 20.08.2014 புதன்கிழமை | மு.ப 10.00 | பி.செ. வேலணை |
| 11 | மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் | 21.08.2014 வியாழக்கிழமை | மு.ப 10.00 | நாவற்குழி களஞ்சியசாலை |

**சுந்தரம் அருமைநாயகம்,**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(சி15372) (12.3.6)

## 15.08.2014 உதயனில்.....

திருமணத் திருநாளுடன் தொடர்புடைய

- திருமண மண்டபங்கள்
- திருமண அழைப்பிதழ் காட்சியறைகள்
- நகையகங்கள்
- வீடியோ அன்ட் போட்டோ ஸ்தாபனங்கள்
- அலங்கரிப்பு நிலையங்கள்
- புடைவையகங்கள்

இன்னும் பல விவரங்கள் அடங்கிய

**மாங்கல்யம் சிறப்பிதழை**

எதிர்பாருங்கள்.

உங்கள் விளம்பரங்களும், இச்சிறப்பிதழில் இடம்பெற வேண்டுமா?

உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

021 567 6700, 078 284 5009

# இலவச கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக.8

அருள் கல்வி வட்டத்தால் நடத்தப்படும் க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான (2014) இலவசக் கருத்தரங்கு பின்வரும் திகதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் இடம்பெறவுள்ளது.

இலவசக் கருத்தரங்கு நடைபெறும் இடமும் திகதியும்:-

ஊர்காவற்றுறை பிர தேச செயலகத்தில் இன்று வெள்ளி காலை 8.30- மாலை 5 மணி வரை (இருபாலாரும்)

9 ஆம் திகதி சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (தொழில்நுட்பக் கல்லூரியில்சனி காலை 8 மணி தொடக்கம்- மாலை 5 மணி வரை (இருபாலாரும்)

10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் காலை 6மணி தொடக்கம் மாலை 5 மணிவரை (மாணவிகள் மட்டும்)

11 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் காலை 6 மணி தொடக் கம் மாலை 5 மணி வரை (ஆண் மாணவர்கள் மட்டும்)

12 ஆம் திகதி செவ்வாய்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் காலை 6 மணி தொடக்கம்- மாலை 5 மணி வரை (இரு பாலாரும்)

13 ஆம் திகதி புதன்கிழமை உருத்திரபுரம் தமிழ் மகா வித்தியாலயத்தில்காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை (இரு பாலாரும்)

14 ஆம் திகதி வியாழக்கிழமை கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை.

15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் ஆகாஸ் ஹோட்டேல் மண்டபத்தில் காலை 8 மணி தொடக்கம்- மாலை 5 மணி வரை (இருபாலாரும்)

# மத்தியஸ்தர் சபை அமர்வுகள் நாவாந்துறையில்

யாழ்ப்பாணம்,ஒக.8

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவு மத்தியஸ்தர் சபையின் அமர்வுகள் ஞாயிற்றுக் கிழமை தோறும் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெறும்.

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகள் நடைபெறுவதால் ஓகஸ்ட் மாதத்துக்கான அமர்வுகள் நாவாந்துறை றோ.க. பாடசாலையில் நடைபெறும் என்று தலைவர் வி.ஸ்ரீ சக்திவேல் அறிவித்துள்ளார். (வ-11)

# நல்லூர் ஆலயச் சூழலில்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் திருவிழாக் காலத்தில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் சமய சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு-

'திருவாசகம் எனும் தேன்' என்ற தலைப்பில் சைவப்புலவர் பு.சந்திரவேலின் சிறப்புச் சொற்பொழிவும், திருநெல்வேலி சிவயோகர் அறநெறிப் பாடசாலை, புத்தூர் கன்னியர் ஸ்ரீ ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, நிற்சாமம் ஸ்ரீ ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஓ-ரி-7)

* * *

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங் கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6.45 மணிக்கு-

செல்வி கீர்த்திகா சண்முகரட்ணம் (வீணை), கே.நந்தகுமார் (மிருதங்கம்) ஆகியோரின் வீணை இசையும், செல்வன் ஷயன் சண்முகரட்ணம் (பாட்டு), செல்வி ஆருஜா சண்முகரட்ணம்(வயலின்), கே நந்தகுமார் (மிருதங்கம்) ஆகியோரின் இசையரங்கமும் இடம் பெறவுள்ளன. (ஓ-ரி)

# சமய சந்நிதிகளில்

பூநகரி, ஒக.8

பூநகரி, வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

இதேவேளை 12 ஆம் திகதி சகடைத் தேர் வெள்ளோட்ட விழாவும் கலைஞர் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளன. (க)

* * *

கிளிநொச்சி, ஒக.8

வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் 19 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன.

ஆஞ்சநேயர் உற்சவம் 21 ஆம் திகதி வியாழக் கிழமை இடம்பெறும். (க)

* * *

தீவகம், ஒக.8

நயினாதீவு, இரட்டங்காலி ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமான் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 31 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும், மறுநாள் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன.

பூங்காவனத் திருவிழா 11 ஆம் திகதி திங்கட் கிழமை இடம்பெறவுள்ளது. (க)

# வரலக்ஷ்மி பூசை

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகியம்மன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு வரலக்ஷ்மி விரத விசேட பூசைகள் இடம்பெற்று காப்பு வழங்கலும் இடம் பெறும். (ஓ)


# கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா

வடமராட்சி, ஒக.8

வல்லை மு.ஆ.சுமனின் 'முகாரி பாடும் முகங்கள்' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.15 மணியளவில் யா/வல்லை அ.மி.த.க.பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ச.விஸ்வரூபன் தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன் பிரதம விருந்தினராகவும், பண்டிதர் சைவப் புலவர் பொன்.சுகந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

முதலாவது பிரதியை எழுத்தாளர் வல்லை ந.அனந்தராஜ் பெற்றுக் கொள்வார். (க)



ஏழாம் நாள் திருவிழா

## ஆறுதலைத் தாருமையா...!

பல்லவி

ஆறுமுக மானவனே அலங்கார நல்லூர் முருகா
ஆறுதலைத் தாரும் ஐயா! அமிழ்தான தமிழ் முருகா

அனுபல்லவி

நாறுமலர்க் கடம்பணிந்தாய் யாமிருக்கப் பயமேன் என்றாய்
நந்தமிழர் குலங்காக்க வேலெடுத்து வருக ஐயா!

சரணம்

மாயோன் மருகனே வள்ளிமண வாளனே
சேயோன் முருகனே செந்தமிழின் காவலனே
தூயவனாந் தும்பிமுகன் தம்பியே துயர்களைவாய்
மாயசூரன் தனையழித்த வேலவனே சரணம் ஐயா!

*நா.நல்லதம்பி*

## வரங்கள் பல தந்திடுவான்

நல்லைக்கு வாருங்கள் கந்தப்பெருமானை வணங்குங்கள்
நலங்கள் பல தந்திடுவான் நன்மைகள் பல செய்திடுவான்
எல்லையில்லா புகழ் கொண்டவன் ஏற்றங்கள் பல பெற்றவன்
வல்லமை பெற்றவன் கொடுஞ்சூரனை அழித்தவன்
தொல்லை வினைகளை அகற்றுபவன் துயரங்களை போக்குபவன்
தேவர்களைக் காத்தவன் தேவசேனாதிபதி ஆனவன்
இல்லை என்னாது அருள் தருபவன் வள்ளி, தெய்வானை மணாளன்
வரலாற்றுப் பெருமை பெற்றவன் வரங்கள் பல தந்திடுவான்

*சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம்.*



## மயிலேறி வருவாயா கந்தா!

நல்லூரில் வீற்றிருந்து
நல்லாட்சி புரிபவனே
அடியவர்கள் துயர்கள் தீர்க்கும்
அலங்காரக் கந்தனே
ஆனைமுகனின் தம்பியே
அசுரர்களை அழித்து
தேவர்களை
சிறை மீட்டுக் காத்திட்ட கந்தா
எம் இனத்தவர்களைக் காக்க
இப்போதே மயிலேறி
வருவாயா
மால் மருகனே!

*நயினை விசு- இராசநாயகம்*







## வீடு விற்பனைக்கு

யாழ்.சுண்டுக்குளியில் 1½ பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: இல.16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.077 614 6434

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் 2 பரப்பு 11¼ குழியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 614 6434

## உடனடி வேலைவாய்ப்பு


தனியார் உயர் கல்வி நிறுவனத்தில் பின்வரும் பணி நிலைகள் உடனடியாக நிரப்பப்பட உள்ளன. சுய விவரக்கோவையுடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்

1)சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்
2)அலுவலக உதவியாளர்(clerk)

நேர்முகத்தேர்வு - 8,9,10-August-2014
தினசரி 10 am-12.30 pm

Knowledge Universe
No 626,1/1,K.K.S Rd,Jaffna.
021-3208342 kugroup.info
KU Education





இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில் திட்டத்துக்காக ஒரு தொகை நன்கொடையை அமெரிக்காவில் பணியாற்றும் இலங்கையைச் சேர்ந்த மருத்துவரான காமினி குணவர்தன என்பவர் வழங்கியுள்ளார்.
பாதுகாப்பு அமைச்சின் சேவா வனிதா பிரிவின் தலைவி அயோமா ராஜபக்ஷவிடம் நேற்று முன்தினம் இந்த நன்கொடையை அவர் கையளித்தார்.
அதேசமயம் விசேட தேவையுடைய படை வீரரான சார்ஜன் ராஜபக்ஷவுக்கு பூரணமாகக் கட்டி முடிக்கப்படாத அவரது வீட்டை கட்டிமுடிக்கும் முகமாக சேவா வனிதா பிரிவின் தலைவி அயோமா ராஜபக்ஷவினால் நிதியுதவி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (ஒ-10)

# சீனா, ரஷ்யாவைச் சமாளிக்கவே மஹிந்தவின் ஆலோசனைக்குழு

## சபையில் ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு,ஓக.8
சர்வதேச நிபுணர்களின் பங்களிப்புடன் உள்ளக விசாரணைப் பொறி முறையை ஆரம்பிக்காவிட்டால் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கை மீதான ஆதரவு விலக்கிக்கொள்ளப் படும் என சீனா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் கூறியதையடுத்தே அவற் றைச் சமாளிப்பதற்காக காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு மூவரடங்கிய சர்வதேச நிபுணர்கள் குழாம் நியமிக்கப் பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்றுமுன்தினம் சபையில் சுட்டிக்காட்டினார்.




அனைத்துலகசமூகத்தின் கோரிக் கைகள் தொடர்பில் இலங்கை அரசு மௌனம் காத்ததன் எதிரொலியாக தற்போது சர்வதேச விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும், இதனைத் தடுத்து நிறுத்துவது இனி கடினம் என்றும் அவர் குறிப்பிட்டார்.
நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வெளிநாட்டுச்சேவைகள் தொடர்பானசபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத் தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-
உள்நாட்டு விசாரணைகளை ஆரம்பிக்குமாறு 2011, 2012, 2013 ஆகிய வருடங்களில் இலங்கையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.
இது குறித்து உரிய நடவடிக்கைகள் உள்நாட்டில் இடம் பெறாததன் காரணமாகவே இன்று சர்வதேச விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
அத்துடன், இத்தகைய விசாரணைக்கு நாடாளுமன்றத்தினூடாக எதிர்ப்பை வெளியிட்ட இலங்கை அரசு, காணாமற்போனோர் பற்றிய குழுவுக்குசர்வதேச ஆலோசனைச் சபையை அமைக்க நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றதா? அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டதா?
ஏன் இவ்வாறானதொரு குழு திடீரென நியமிக்கப்பட்டது என்பது எமக்குத் தெரியும். அதாவது, உள்ளக விசாரணையை இலங்கை அரசு சர்வதேச நிபுணர்களின் பங்களிப்புடன் ஆரம்பிக்காவிட்டால், இலங்கைத் தொடர்பில் மனித உரிமைகள் பேரவையால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கை பாதுகாப்புச் சபைக்கு வரும் பட்சத்தில், அதன்போது இலங்கைக்கு ஆதரவளிக் கப்படமாட்டாது என சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் கூறியதை அடுத்தே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.
அதேவேளை, ஐ.நா. குழுவுக்கு சாட்சியமளிக்கக்கூடாது என சாட்சியாளர்கள் மிரட்டப் பட்டுள்ளனர்.
அப்படியானால், அரசு நியமித்த குழுவுக்கும் இது பொருந்துமா? தற்போதைய வெளிவிவகார அமைச்சர் அம்பாந்தோட்டைக்குச் சென்று தான் வெளிவிவகார விடயங்கள் பற்றிப் பேசுகின்றார். அதுமட்டுமல்ல, டில்லியைவிட முக்கியமான தமிழகத்தை இவர்கள் பகைத்துக்கொண்டுள்ளனர் - என்றார். (ஒ)

# கண்டிப் பெரஹெரவுக்கான விசேட ரயில் சேவை ஆரம்பம்

கொழும்பு,ஓக.8
கண்டி எசல பெரஹெரவைப் பார்க்கச் செல்லும் மக்களின் வசதி கருதி நேற்றுமுன்தினம் முதல் விசேட ரயில் சேவையொன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இந்தச் சேவை எதிர் வரும் 11ஆம் திகதிவரை நடத்தப்படுமென ரயில்வே திணைக்களத்தின் போக்குவரத்து அதிகாரி எல்.ஏ.ஆர். ரத்னாயக்க தெரிவித்தார்.
அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்த விவரங்கள் வருமாறு:-
நேற்றுமுன்தினம் காலை 9.50 இற்கு கொழும்பு கோட்டையிலிருந்து கண்டிக்கு முதலாவது ரயில் புறப்பட்டது. இது எதிர்வரும் 10ஆம் திகதிவரை சேவையைத் தொடரும்.
மாத்தளையிலிருந்து பிற்பகல் 3.30இற்கும் இரவு 8.45இற் கும் கண்டிக்கான இரு ரயில் சேவைகள் நடைபெறுகின்றன. 11ஆம் திகதி காலை 7.10இற்கு கொழும்பு கோட்டையிலிருந்து கண்டிக்கு ரயில் சேவை யொன்று நடத்தப்படும். (ஒ)

# தமிழ்ச் சமூகத்தினருக்குச் சாதகமான போக்கில் வெளிநாட்டு இராஜதந்திரிகள்

## இலங்கை வெளிவிவகார அமைச்சு குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.8
வெளிநாட்டு இராஜதந்திரிகள் தமிழ்ச் சமூகத்தினருக்கு சாத கமான விதத்தில் நடந்து கொள் கின்றனர் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு குற்றஞ்சாட்டியுள்ளது.
மன எழுச்சியை ஏற்படுத்தக் கூடிய உள்ளூர் நிகழ்வுகளில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் கலந்துகொள்ளும் போது, உள்ளூர் உணர்வுகளைக் கருத்தில்கொள்ள வேண்டும் என்றும் வெளிவிவகார அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.
இராஜதந்திர வட்டாரங்களின் சில பிரிவினர், குறிப்பிட்ட சமூகத்தினர் அல்லது மதத் தினர் ஏற்பாடு செய்யும் நிகழ்வுகளில் உணர்வுபூர்வ மான விதத் தில் இணைந்து கொள்கின்றனர் என்றும் அமைச்சு சாடியுள்ளது.
கடந்த திங்கட்கிழமை கொழும் பில் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் உள்ளிட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் கலந்து கொண்ட காணாமற்போனோரின் உறவுகளுடனான கூட்டம் சந்திப்புக்குள் பிக்குகளுடன் வந்த குண்டர் குழு ஒன்று குழப்பம் ஏற்படுத்தியிருந்தது.
இதுகுறித்து அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளன.
இந்த நிலையில் இலங்கை வெளிவிவகார அமைச்சு தனது விளக்கத்தை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-
வடபகுதியைச் சேர்ந்த காணமற்போனவர்களின் குடும்பத் தினரை அழைத்து மனித உரிமை நிலையத் தின் வாழ்வ தற்கான உரிமை அமைப்பு சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது என்றும், காணாமற் போனவர்களின் பெற்றோர்களின் கூட்டமைப்பு என்ற இன்னொரு அமைப்பு அந்தக் கூட்டத்தில் தாமும் பங்கு கொள்ள இடமளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது என்றும், இதைத் தொடர்ந்து உருவான வாக்குவாதம் காரணமாகப் பதற்றமான சூழ்நிலை உருவானது என்றும், சட்ட நடைமுறை அதிகாரிகள் அதனை கட்டுப்படுத்தினர் என்றும், இந்தக் கூட்டத்தில் மேற்குலகின் தூதரகங்களைச் சேர்ந்த தூதுவர் கள் பலர் பங்குகொண்டிருந்தனர் என்றும் தகவல்கள் தெரிவிக் கின்றன. கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்று கூடுவதற்கான சுதந்தி ரத்தை அமைச்சு அங்கீகரிக்கின்றது.
அதேவேளை, இராஜதந்திர வட்டாரங்களின் சில பிரிவினர், குறிப்பிட்ட சமூகத்தினர் அல்லது மதத்தினர் ஏற்பாடு செய்த நிகழ்வுகளில் உணர்வுபூர்வமாகக் கலந்து கொள்வதால் மற்றவர்களிடத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.
அத்துடன் நாட்டின் உணர்வு பூர்வமான தருணத்தில் பதற்றமான நிலைமை உருவாவதற்கும் சமூகங்கள் மத்தியில் நம்பிக்கையீனம் உருவாவதற்கும் காரணமாக அமைந்துள்ளது - என்றுள்ளது. (ஒ)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் பொ.விஜயகுமாரன்
அவர்களின் அன்புத் தந்தை
**கணபதிப்பிள்ளை பொன்னம்பலம்**
அவர்கள் 05.08.2014 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரடைகிறோம். அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலை சமூகம்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
(சி15367) (12.3.0)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும், முன்னாள் பழைய மாணவ சங்கத் தலைவியும் துடிப்பான நீண்டகால நிருவாகக் குழு உறுப்பினருமான
**திருமதி மங்கையர்க்கரசி ராஜாராம்**
(முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் - விஞ்ஞானம், தொண்டமானாறு வெளிக்கள நிலைய முன்னாள் இணைப்பாளர்)
அவர்கள் 05.08.2014 அன்று இறைபதம் அடைந்த செய்திகேட்டு பாடசாலைச் சமூகம் துயரடைகின்றது. அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (சி. 15366) (45.6.3)
பாடசாலைச் சமூகம், யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி**
**சிவபாலாம்பிகை சுந்தரலிங்கம்**



தோற்றம்
22.04.1942
மறைவு
19.07.2005
திதி: ஆடி பூர்வபக்க திரயோதசி (08.08.2014)
ஒன்பதாண்டுகள் கடந்தாலும்
ஆறாது எம் துயரம்
அணையாது உமது நினைவு
ஆ.சுந்தரலிங்கம்
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)
85, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0094212228005
077 742 0240
(50548)(4.6.3)
உமது மறைவால் வாடும்
கணவர், வளர்ப்பு மகன் சஞ்சீவன்,
சகோதரர், சகோதரிகள்,
பெறாமக்கள், மருமக்கள்,
மைத்துனிமார், மைத்துனர்மார்.

## 19ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**தம்பிராஜா கனகரட்ணராஜா**



வையத்துள் அறிமுகம்
19.01.1935
தெய்வத்துள் சங்கமம்
08.08.1995
திதி: திரயோதசி (08.08.2014)
பாசத்தின் திருவுவமாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கு எல்லாம் அன்பு காட்டி அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
பத்தொன்பது ஆண்டுகள் அல்ல எத்தனை
ஆண்டுகள் தான் சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் மாறாதையா!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, மைத்துனர்கள்,
மைத்துனிகள், சகோதரிகள், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சந்தையடி,
மானிப்பாய்.

# இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையே கெய்ரோவில் பேச்சுக்கு ஏற்பாடு

## போர் நிறுத்தத்தை நீடிப்பதற்கும் முயற்சி

காஸா, ஓக. 8

காஸாவில் செவ்வாய்க் கிழமை அறிவிக்கப்பட்ட 3 நாள்கள் போர் நிறுத் தம் புதன்கிழமையும் தொடர்ந்தது. இந் நிலையில், இரு தரப்பினரிடையே சமரசத்தை ஏற்படுத்த எகிப்திய தலைநகர் கெய்ரோவில் மும்முரமாக பேச்சு நடைபெற்று வருகிறது.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கு மிடையே சமரசம் ஏற்படுத்தும் முயற்சியில் எகிப்து அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இருதரப்பு அமைதி உடன்பாட்டை எட்டுவதற்காக, கெய்ரோவில் இஸ்ரே லிய- பலஸ்தீனிய பிரதிநிதிகளிடம் எகிப்து அதிகாரிகள் பேச்சு நடத்தி வருகின்றனர்.



**ஜோன்ஹெரி வலியுறுத்தல்:**

இதனிடையே, இஸ்ரேலுக்கும்- பலஸ்தீனத்துக்கும் இடையிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காண விரிவான பேச்சை மேற்கொள்வதற்கு இந்தப் போர் நிறுத்தத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் ஹெரி வலியுறுத்தியுள்ளார்.

ஒரு மாத காலமாக காஸா பகுதியில் நடைபெற்றுவரும் இஸ்ரேல் தாக்குதலில் 1,900 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

அதை எதிர்த்து, ஹமாஸ் தீவிரவாதிகள் நிகழ்த்திய தாக்குதல்களில் 67 இஸ்ரேலியர்கள் பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில், இரண்டு நாள்களாக ஏற்பட்டுள்ள அமைதி இருதரப்பு மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேலின் தீவிர தாக்குதலுக்கு அஞ்சி ஐ.நா. முகாம்களில் பதுங்கியிருந்த பலஸ்தீனர்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

கடந்த ஆறு ஆண்டுகளில் இஸ்ரேல்- பலஸ்தீனம் இடையே ஏற்பட்டுள்ள மூன்றாவது மிகப்பெரிய மோதல் இதுவாகும்.

முந்தைய மோதல் சம்பவங்களின் போது, பேச்சுகள் மூலம் போர் நிறுத்த ஒப்பந்தங்கள் ஏற்பட்டாலும், அவற்றால் ஏற்பட்ட அமைதி ஒரு சில மாதங்களுக்கு மட்டுமே நீடித்தமை நினைவு கூரத்தக்கது.

**தண்ணீரின்றி மக்கள் அவதி**

இஸ்ரேல் தாக்குதல்கள் ஓய்ந்திருந்தாலும், குடிதண்ணீர், உணவு, தங்குமிடம் ஆகிய அடிப்படை வசதிகளைப் பெறுவது பலஸ்தீனர்களுக்கு மாபெரும் சவாலாக உள்ளது.

தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவும் காஸாவில், நாளொன்றுக்கு 2 முதல் 4 மணி நேரம் வரையே மின்சாரம் வழங்கப்படுகிறது.

ஐ.நா. நிவாரண மற்றும் பணிகள் அமைப்பு (யு.என்.ஆர்.டபிள்யூ.ஏ.) தனக்குச் சொந்தமான பாடசாலைக் கட்டடங்களில் 2.7 லட்சம் மக்களை பாதுகாப்பாக தங்க வைத்துள்ளது.

நான்கு வாரங்களாக தொடர்ந்த இந்தப் போரால், காஸாவில், வசிக் கும் 5.2 லட்சம் பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

10,000 இற்கும் மேலான வீடுகள் சேதமடைந்துள்ளன என ஐ.நா. தெரிவித்துள்ளது. (த)



இஸ்ரேலியப் படைகளால் அழிக்கப்பட்ட ஹமாஸ் இயக்கத்தின் சுரங்கங்களை ஆர்வத்துடன் பார்வையிடும் பலஸ்தீனச் சிறுவர்கள். (த)

### கோடீஸ்வரர்கள் அதிகளவில் வாழும் நகரங்களில் லண்டனுக்கு முதலிடம்



பிரிட்டிஷ் தலைநகரான லண்டன் அதிக எண்ணிக்கையிலான கோடீஸ்வரர்களைக் கொண்ட ஒரு நகராக உருவாகியிருக்கிறது என்று ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

இந்த ஆய்வு தென்னாபிரிக்காவிலிருந்து இயங்கும் ஆலோசனை நிறுவனம் ஒன்றால் நடத்தப்பட்டிருக்கிறது.


லண்டன் மக்கள் எண்ணிக்கையில் மூன்று சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் ஒரு மில்லியன் டொலர்களுக்கும் மேலான நிகர சொத்துகளை வைத்திருக்கிறார்கள் என அந்த ஆய்வு குறிப்பிடுகிறது.

லண்டன் ஒரு சர்வதேச நகரம் என்ற வகையிலும், ஐரோப்பாவின் முக்கியநிதித்துறைமையம் என்ற வகையிலும், உலகெங்கிலுமுள்ள பணக்காரர்களை வெகுவாக ஈர்த்துள்ளது என இந்த ஆலோசனை நிறுவனம் தெரிவிக்கிறது.

ஆனால் கோடீஸ்வரர்கள் அதிகள வில் உள்ள நகராக லண்டன் இருக்கிறது என்றாலும், மிகப்பெரும் கோடீஸ்வரர்கள் உள்ள நகரங்கள் பட்டியலில், லண்டன் மூன்றாவது இடத்தையே வகிக்கிறது. ஹொங்கொங், நியூயோர்க் ஆகிய நகரங்கள் முதல் இரண்டு இடங்களில் இருக்கின்றன.

இந்தப் பட்டியல் குறைந்தது 10 மிலியன் டொலர்கள் நிகர சொத்து வைத்திருப்பவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலானது. (த)

### எகிப்தில் மோர்சி ஆதரவாளர்கள் 12 பேருக்கு சாவுத் தண்டனை



கெய்ரோ, ஓக.8

எகிப்தில் பொலிஸ்துறை அதிகாரி கொலை வழக்கில் முன்னாள் ஜனாதிபதி மோர்சியின் ஆதரவாளர்கள் 12 பேருக்கு சாவுத் தண்டனையும், 19 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதித்து நீதிமன்றம் புதன்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

எகிப்திய தலைநகர் கெய்ரோவை அடுத்த கேர்தசா நகரில் பதுங்கியி ருந்த மோர்சியின் ஆதரவாளர்கள் மீது பாதுகாப்புப் படையினர் கடந்த ஆண்டு தாக்குதல் நடத்தினர். அப்போது தீவிரவாதி ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ்துறை அதிகாரி நபில் ஃபாரக் உயிரிழந்தார்.

இது தொடர்பாக எகிப்திய பொலிஸார், மோர்சி ஆதரவாளர்கள் 23 பேர் மீது வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், மோர்சியின் ஆதரவாளர்கள் 12 பேருக்கு சாவுத் தண்டனையும், 19 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தது. குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் மட்டும் விடுவிக்கப்பட்டார். (த)

## மேற்கத்தேய நாடுகளின் பொருள்கள் இறக்குமதிக்குக் கட்டுப்பாடு

### பொருளாதாரத் தடைக்கு ரஷ்யா பதிலடி

மாஸ்கோ, ஓக.8

ரஷ்யா மீது மேலைநாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைக்கு பதிலடி கொடுக்கும் விதமாக, அந்நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்குக் கட்டுப்பாடு விதித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி மாளிகை புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிவிப்பில்,



ரஷ்யா மீது தடை விதித்துள்ள நாடுகளிலிருந்து பெறப்படும் இறக்குமதிப் பொருள்களுக்கு ஓராண்டு காலம் தடையோ அல்லது கட்டுப்பாடோ விதிக்கப்படும்' எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதேசமயம், ரஷ்ய ஜனாதிபதி மாளிகையின் அறிவிப்பில், எந்தவொரு மேலைநாட் டின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. எனினும், ரஷ்ய அதிகாரிகளுக்கு அந்த நாடுகளின் பெயர்கள் வாய்மொழி உத்தரவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன என தெரிய வருகிறது.

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா தலையிடுவதாகக் குற்றஞ்சாட்டி, அதன் மீது ஐரோப்பிய ஒன்றிய அமைப்பு நாடுகளும், அமெரிக்காவும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. இதற்குப் பதிலடியாகவே ரஷ்யா தற்போது இந்த நட வடிக்கையை எடுத்துள்ளது. (த)

## ராஜீவ் கொலையாளிகளுக்கு தூக்கை உறுதிப்படுத்த முயற்சி

புதுடில்லி, ஓக.8

ராஜீவ் கொலை வழக்கிலில் சாவுத் தண்டனை விதிக்கப் பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் மூவரும் தங்கள் தண்டனையைக் குறைக்கும்படி ஜனாதிபதியிடம் கருணை மனு கொடுத்தனர். அந்தக் கருணை மனு மீது 11 ஆண்டுகளாக எந்த முடிவும் எடுக்கப் படவில்லை. இதையடுத்து இந்தக் காலதாமதத்தைக் காரணம்காட்டி குற்றஞ் சுமத் தப்பட்ட 3 பேரும் மேல்நீதி மன்றில் மனு செய்தனர்.

அந்த மனுவை ஏற்றுக் கொண்ட மேல்நீதிமன்றம் கடந்த ஏப்ரல் மாதம் தீர்ப்பு வழங்கியபோது, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய 3 பேரின் சாவுத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து உத்தரவிட்டது. அதோடு அவர்களை விடுவிப்பது பற்றி மாநில அரசு முடிவுசெய்துகொள்ளலாம் என்றும் அறிவித்தது. இதனால் ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் அனைவரும் விடுதலை ஆவார்கள் என்று எதிர்பார்க்கப் பட்டது.

இந்த நிலையில், அப்போதைய காங்கிரஸ் அரசு மேல்நீதிமன்றில் அவசரம், அவசரமாக மனுச்செய்து ராஜீவ் கொலையாளிகள் விடுதலை செய்யப் படுவதற்கு இடைக்காலத் தடை பெற்றது.

இதற்கிடையே புதிதாகப் பொறுப் பேற்றுள்ள பிரதமர் மோடி தலைமை யிலான மத்திய அரசு ராஜீவ் கொலையாளிகள் விடயத்தில் என்ன கொள்கை முடிவு எடுக்கும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.

இந்நிலையில், நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசும் ராஜீவ் கொலைக் கைதிகளுக்குத் சாவுத் தண்டனை பெற்றுக் கொடுக்க தீவிரமாக இருப்பது தெரிய வந்துள்ளது.

# சாவுத் தண்டனையை இல்லாது செய்யுங்கள்

## ராமதாஸ் வலியுறுத்தினார்

சென்னை, ஓக.8

சாவுத் தண்டனையை ஒழித்து ஆசிய கண்டத்துக்கு இந்தியா வழிகாட்ட வேண்டும் என்று பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் வலியுறுத்தினார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துமூலம் பதிலளித்துள்ள மத்திய உள்துறை இணை அமைச்சர் கிரண் ரிஜு, இந்தியாவில் சாவுத் தண்டனையை ஒழிக்கும் திட்டம் எதுவும் இல்லை எனத் தெரிவித்துள்ளார். மத்திய அமைச்சரின் இந்தப் பதில் மனிதநேய ஆர்வலர்களிடையே அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. சாவுத் தண்டனையை ஒழிக்க வேண்டும் என்ற முழக்கம் இந்தியாவில் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக எழுப்பப்பட்டு வருகிறது.


ராமதாஸ்

குற்றவாளிகளுக்கு வழங்கப் படும் தண்டனை அவர்களைத் திருத்துவதாக இருக்க வேண்டுமே தவிர, உயிரைப் பறிப்பதாக இருக்கக் கூடாது. இந்தியா விடுதலையடைந்த பின்னர் இதுவரை நூற்றுக்கும் அதிகமானோருக்குத் சாவுத் தண்டனை வழங்கப் பட்டுள்ளது. ஆனாலும், குற்றங்களின் எண்ணிக்கை குறையவில்லை. சாவுத் தண்டனை விதிப்பதால் எந்தப் பயனும் ஏற்படவில்லை என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் இருக்க முடியாது.

உலகில் 140 நாடுகளில் சாவுத் தண்டனை ஒழிக்கப்பட்டு விட்டது. காந்தியின் வழியில் நடக்க வேண்டிய இந்திய அரசு, செய்ய வேண்டிய முதல் கடமை சாவுத் தண்டனையை ஒழிப்பதுதான். எனவே, சாவுத் தண்டனையை ஒழித்து ஆசியக் கண்டத்துக்கு இந்தியா வழி காட்ட வேண்டும்.

உலக அளவில் சாவுத் தண்டனையை ஒழிக்கும் நோக்கத்துடன் ஐ.நா. பொதுச் சபையில் வரும் நவம்பரில் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களிக்க வேண்டும் என மேலும் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

# 9 மாத கர்ப்பிணிப் பெண் நீந்திக் கடந்தார் ஆற்றை

## மருத்துவ வசதி இல்லாமையால் இந்த நிலை


ஆற்றை நீந்திக் கடந்த கர்ப்பிணிப் பெண்

கர்நாடகா, ஓக.8

கர்நாடக மாநிலத்தில் கிராமம் ஒன்றில் மருத்துவ வசதி இல்லாததால், ஒன்பது மாத கர்ப்பிணிப் பெண் ஒருவர், மருத்துவமனையை அடைய, கிருஷ்ணா நதியை நீந்தி கடந்திருக்கிறார். எல்லாவா என்ற இந்த 22 வயதுப் பெண், கர்நாடகா மாநிலத்தின் தலைநகர் பெங்களூருவின் வடக்கே சுமார் 400 கிலோமீற்றர் தொலைவில் உள்ள யாட்கிர் மாவட்டத்தில் அமைந்திருக்கும், நீலகந்த ராயன்கடே என்ற தீவுக் கிராமம் ஒன்றைச் சேர்ந்தவர். இவருக்கு நீச்சல் தெரியாது. ஊரில் மருத்துவ வசதி இல்லை. அருகில் மருத்துவ மனை இருக்கும் இடம் ஆற்றுக்கு அப்பால் இருக்கிறது.

ஆறு சூழ்ந்த தீவாக இருக்கும் இந்தக் கிராமத்தில் இருந்து ஆற்றைக்கடந்து செல்ல ஒரு மர மிதவைதான் இருக்கிறது. அது ஆறு பெருக்கெடுத்து சீற்றத்துடன் ஓடும் காலங்களில் இயங்குவதில்லை.

இந்த நிலையில்,வீட்டில் பிள்ளை பெறக்கூடாது, மருத்துவ மனையிலேதான் தனது பிரசவம் நடக்க வேண்டும் என்ற உறுதியுடன், இவர் , காய்ந்த பூசணிக்காய்கள் மற்றும் சுரைக்காய்கள் போன்ற காய்களை மிதவைகளாக தனது உடலைச் சுற்றிக் கட்டிக் கொண்டு ,ஆற்றை கடக்க துணிந்திருக்கிறார்.

இவரது தந்தை, சகோதரர், லக்ஷமணன் மற்றும் உறவினர்கள் சிலர் இவருடன் முன்னும் பின்னும் பாதுகாப்பாக ஆற்றில் நீந்தியிருக்கின்றனர். முன்னே அவரது சகோதரர் நீந்திச் செல்ல, அவரது பிற உறவினர்கள் அவரது பின்னால் சென்றிருக்கின்றனர். உலர்ந்த பூசணிக்காயை ஒரு கயிற்றால் பிணைத்து, அந்தக் கயிறை சகோதரர் பிடித்துக்கொள்ள, காய்களை இவர் பற்றிக்கொண்டு நீந்தியிருக்கிறார்.

சுமார் அரை கிலோ மீற்றர் அகலம் உள்ள இந்த கிருஷ்ணா நதியில் இப்போது 12 அடியிலிருந்து 14 அடி வரை தண்ணீர் ஓடுகிறது. இந்த ஆற்றின் பாதி தூரத்தில் நீர்ச்சுழல் அதிகம் இருந்ததால் , அவர்கள் மேலும் ஆற்றின் கீழ்ப்பகுதிக்கு இழுத்து செல்லப்பட்டு, மொத்தமாகக் கடக்க வேண்டிய தொலைவு ஒரு கிலோ மீற்றராகியது.

ஒரு வழியாக அந்தக்கரையில் உள்ள கெக்கேரா என்ற கிராமத்தில் அமைந்திருக்கும் அரசு மருத்துவ மையத்தை அடைந்த இவர்களைப் பரிசோதித்த அரசு மருத்துவர் டாக்டர் வீணா இவர் நலமுடன் இருப்பதாகவும் ஆனால் களைத்திருப்பதால் ஒரு உறவினர் வீட்டில் தங்கி ஓய்வெடுத்து வருவதாகவும் கூறினார். அவருக்கு குழந்தை பிறக்க இன்னும் 20 அல்லது 25 நாள்களாகலாம் என்றும் அவர் கூறினார். இதுவரை தனது அனுபவத்தில் இது போல ஒரு கர்ப்பிணிப் பெண் இவ்வாறு ஆற்றை நீந்திக் கடந்ததை தான் கண்டதில்லை என்று கூறிய வீணா எல்லாவாவின் துணிச்சலைப் பாராட்டினார். (த)

# வேட்டிக்குத் தடை விதித்தால் சிறை

சென்னை, ஓக.8

சென்னையில் தமிழ்நாடு கிரிக்கெட் கழகத்தில் உள்ள மன்றத்துக்கு வேட்டி அணிந்து சென்ற நீதிபதிகள், வழக்கறிஞர்களை உள்ளே அனுமதிக்க மறுத்த விவகாரம் தமிழ் நாடு முழுவதும் பெரும் கண்டனத்துக்கு உள்ளானது.

இந்த பிரச்சினை குறித்து சட்டமன்றத்தில் அனைத்து கட்சியினரும் கேள்வி எழுப்பினர். அப்போது, விளக்கம் அளித்த முதலமைச்சர் ஜெயலலிதா, வேட்டி அணிந்து செல்பவர்களை அனுமதிக்கும் வகையில் இந்தக் கூட்டத் தொடரிலேயே சட்டத்திருத்தம் கொண்டு வரப்படும் என்றார். அதன்படி, சட்டப்பேரவையில் அந்த புதிய சட்ட மசோதாவை நேற்று முன்தினம் புதன்கிழமை கேள்வி நேரம் முடிந்ததும் முதலமைச்சர் ஜெயலலிதா தாக்கல் செய்தார்.

அந்த சட்ட முன்வரைவில் கூறியிருப்பதாவது:-

சில சங்கங்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் அல்லது மேலாண்மையின் கீழ் உள்ள பொது இடங்களுக்குள் தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் வேட்டியை அல்லது எந்த ஓர் இந்திய பாரம்பரிய உடையை அணிந்துவரும் நபர்களை அவர்கள் மேற்கத்திய பாணியிலான உடையை அல்லது ஆடையை அணிந்திருக்கவில்லை என்கின்ற காரணங்களின் அடிப்படையில் அவர்களுக்கு உள்ளே நுழைய அனுமதி மறுக்கப்படுவதாக அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டு உள்ளது. இந்த பிரச்சினைகளை நிரந்தரமாகத் தீர்க்கும் பொருட்டு நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே இதற்குத் தேவையான சட்டமுன் வரைவு தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப் படும் என்று கடந்த மாதம் 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிவிப்பைச் செயற்படுத்துவதற்கு மேற்கூறப்பட்டுள்ள காரணங்களுக்காக புதிய சட்டம் இயற்றலாம் என்று அரசு முடிவு எடுத்து உள்ளது. இந்தச் சட்ட முன்வரைவு மேற்சொன்ன முடிவுக்கு செயல் வடிவம் கொடுக்க உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

மேலும், இந்த சட்ட முன்வரைவின் விவரங்களும், சட்ட விதிகளும் விளக்கப்பட்டு உள்ளன. அதன் விவரம் வருமாறு:-

ஒவ்வொரு இந்திய குடி மகனும் நமது தொன்மையான சிறப்பு மிக்க பன்முக கூட்டு பண்பாட்டின் மதிப்பினை உணர்ந்து அதனை பாதுகாப்பது அடிப்படை கடமை ஆகும். ஆகவே பொது இடங்களுக்கு வருகை தரும் நபர்களை அவர்கள் அணிந்திருக்கும் உடை மேற்கத்திய கலாசாரத்தின் அடிப்படையில் இல்லை என்றகாரணத்துக்காக உள்ளே நுழைய அனுமதி மறுத்து விதிக்கப்பட்டிருக்கும் தடையானது கடந்த கால ஆங்கிலேயே பேரரசின் ஆதிக்க செயல் இன்னும் தொடர்ந்து கொண்டிருப்பதையே குறிக்கிறது. நமது பண்பாடு பழக்கவழக்கங்கள் மற்றும் தொன்மையான பாரம்பரியம் ஆகியவற்றை பாதுகாக்கும் நோக்கில் பொது இடங்களுக்கு தமிழர் பண்பாட்டினை பிரதிபலிக்கும் வேட்டி, அல்லது வேறு எந்த ஒரு இந்திய பாரம்பரிய உடையை அணிந்து வருபவர்களை நுழைய அனுமதி மறுக்கும் வகையில் விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்குவது என அரசு முடிவு செய்து உள்ளது. (த)

# அரச உயரதிகாரிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் விதி சட்ட விரோதமல்ல

## உச்ச நீதிமன்றம் தெரிவிப்பு

ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகும் அரச உயரதிகாரிகள் மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிராக உரிய அனுமதியின்றி நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்ற விதி சட்ட விரோத மானதல்ல என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தில் வழக்குரைஞர் மன்சூர் அலிகான் என்பவர் தொடர்ந்த பொதுநல வழக்கில் ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகும் அரச உயரதிகாரிகள் மக்கள் பிரதிநிதிகள் மீது விசாரணை நடத்துவதற்கு ஊழல் தடுப்புச் சட்டத்தின் 19ஆவது பிரிவு தடையாக உள்ளது.

ஆதலால் அந்தச் சட்டப் பிரிவை நீக்கியும், ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து அரசியல்வாதிகள், எம்.எல்.ஏக்கள், எம்.பி.க்கள், அரச உயரதிகாரிகளுக்கு எதிராக விசாரணை நடத்தவும் உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

இதுதொடர்பான வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதி எஸ். தாக்குர் தலைமையிலான அமர்வு கூறுகையில், ஊழல் விவகாரத்தில் சகிப்புத் தன்மை கூடாது என்பதில் நீதிமன்றம் உறுதியாக உள்ளது.

# கோத்தா மீது அமெரிக்காவால் வழக்குத் தொடுக்க முடியாது

## சவால் விடுகிறது இலங்கை


ருவான் வணிகசூரிய

கொழும்பு.ஓக.8
"இலங்கையின் இறுதிப்போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்குத் தொடர அமெரிக்காவால் முடியாது" என இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.
பாதுகாப்பு அமைச்சின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த ஊடகவியலாளர் சந்திப்புக்குப் பின்னர், "இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்" என அமெரிக்க ஆங்கில ஊடகமொன்று அண்மையில் செய்தி வெளியிட்டுள்ளமை குறித்து வினவியபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
ஒரு நபரை கைதுசெய்ய அல்லது விசாரணைக்குட்படுத்த வேண்டுமெனில் விசாரணை செய்யும் தரப்பிடம் அந்நபருக்கு எதிரான ஆதாரங்கள் மற்றும் சாட்சியங்கள் இருத்தல் அவசியமாகும்.
அதை விடுத்து ஒருநபரை எந்தவித ஆதாரங்களுமின்றி கைது செய்வதானது சட்டத்துக்குப் புறம்பான காரியமாகும்.
அதே போல்தான், இந்த விவகாரமும் காணப்படுகிறது. கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனில் அவருக்கெதிராக சாட்சியங்களும், ஆதாரங்களும் நிச்சயமாக இருக்க வேண்டும்.
ஆகவே, அமெரிக்காவால் இவருக்கெதிராக வழக்குத் தொடர முடியாது" என்றார்.
அதேவேளை, இந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது, பாதுகாப்பு இணையத்தளத்தில் வெளியான இந்தியாவுக்கு எதிரானது என்ற சர்ச்சையை ஏற்படுத்திய கட்டுரைக் குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு, அந்தக் கட்டுரையில் பிரசுரிக்கப்பட்டுள்ள கிராப் பிக்ஸ் படமே சர்ச்சைக்குரியதென்றும், அந்தக்கட்டுரையானது மீனவர் மற்றும் இனப்பிரச்சினை போன்ற வழமையான பிரச்சினைகளையே பதிவு செய்துள்ளதாகவும் அவர் பதிலளித்தார்.
மேலும், இந்த விவகாரம் குறித்து பாதுகாப்பு அமைச்சு விசாரணைகளைத் தற்போது மேற்கொள்வதாகவும் அவர் இதன்போது சுட்டிக் காட்டினார். (ஓ)

## பிக்குகளை கட்டிவிட்டு ஓலைச் சுவடிகள் கொள்ளை

கொழும்பு.ஓக.8
கல்தொட - புகுல்யாய சுதர்ஸன ரஜமஹா விகாரையிலுள்ள ஐந்து பிக்குகளின் கை கால்களை கட்டிவிட்டு, சிலர் அங்கிருந்த ஓலைச் சுவடிகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.
நேற்று இரவு அந்த விகாரைக்குச் சென்ற எட்டுப் பேர் இந்த கொள்ளையில் ஈடுபட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இருப்பினும் சம்பவத்தில் எந்தவொரு பிக்குவுக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் தெரிகிறது.
சம்பவம் தொடர்பில் இதுவரை எந்தவொரு சந்தேகநபரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கல்தொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-10)

# 'மனிதப் படுகொலை' என்ற பதத்தை டுவிட்டரில் இலங்கை நீக்கியது ஏன்?

## காஸா தொடர்பான பதிவு தொடர்பில் கூட்டமைப்பு கேள்வி


எம்.ஏ. சுமந்திரன்

கொழும்பு.ஓக.8
"காஸா தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்ட 'டுவிட்டரில்' முதலில் குறிப் பிடப்பட்டிருந்த 'மனிதப் படுகொலை' என்ற பதம் பின்னர் நீக்கப்பட்டதேன்"
- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ. சுமந்திரன் கேள்வி எழுப்பினார்.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெளிநாட்டு சேவைகள் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.
அவர் மேலும் கூறியவை வருமாறு:-
இஸ்ரேல் - காஸா தொடர்பில் இலங்கை இரட்டை நிலைப்பாட்டில் உள்ளது.
பலஸ்தீனத்தின் நண்பர்களெனக் கூறும் இலங்கை, இஸ்ரேலுக்கு எதிரான தனது நிலைப்பாட்டை இன்னமும் ஏன் தெரிவிக்கவில்லை?
இலங்கை வெளிவிவகார அமைச்சினால் காஸா தொடர்பில் வெளியிடப்பட்ட 'டுவிட்டரில்', காஸாவில் இடம் பெறும் மனிதப் படுகொலைகள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.
பின்னர் திருத்தம் என்ற அறிவிப்போடு வெளியிடப்பட்ட இரண்டாவது 'டுவிட்டரில்' அந்த மனிதப் படுகொலை என்ற பதம் நீக்கப்பட்டிருந்தது. இதற்கான காரணம் என்ன?
இஸ்ரேல் - காஸா பிரச்சினையில் இருதரப்பிலும் தவறுகள் உள்ளன. இருதரப்பிலுமே குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்படுகின்றன.
எந்த நாட்டில் சர்வதேச சட்டம் மீறப்பட்டாலும் அங்கே சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.
இதற்கு இலங்கை என்றாலும், காஸா என்றாலும் ஒன்றுதான். எனவே, இஸ்ரேல் - காஸா பிரச்சினையில் சர்வதேச விசாரணை அவசியம்.
இதேவேளை- பாதுகாப்பு அமைச்சு இணையத் தளத்தில் வெளியிட்டிருந்த ஜெயலலிதா - மோடி தொடர்பான கட்டுரை தொடர்பிலும் இங்கு குறிப்பிடவேண்டும்.
ஒருநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் உரியவர்களின் அனுமதியின்றி எவருமே எதனையும் பிரசுரிக்க முடியாது. உரியவர்கள் அனுமதித்தால் மட்டுமே பிரசுரிக்க முடியும்- என்றார். (ஓ)



தேசிய நல்லிணக்கம் புரிந்துணர்வு மன்றம் வெளியிட்ட 'ஒரே நாடு ஒரே மக்கள்' என்ற சிறு நூலின் வெளியீட்டு விழா பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. சப்ரகமுவ பல்கலைக்கழக வேந்தர் சங்கைக்குரிய பேராசிரியர் கும்புறுகமுவே வஜிரநாயக்க தேரர், முன்னாள் சபாநாயகர் எம்.எச்.முஹமட் ஆகியோரின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரா, தேரரிடம் நூலைக் கையளிக்கிறார். (ஓ-10)

# சர்வாதிகாரிகளை பாதுகாப்பதில் சிறந்த நிபுணர்களே ஆலோசனைக் குழுவில்

## மங்கள எம்.பி. குற்றச்சாட்டு


மங்கள சமரவீர

கொழும்பு.ஓக.8
போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனிதப் படுகொலைகளில் ஈடுபட்ட சர்வதிகாரத் தலைவர்களைப் பாதுகாப்பதில் நிபுணத்துவம் பெற்ற வர்கள் இலங்கையில் காணாமற் போனோர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு ஆலோசனை களை வழங்குவதற்காக அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டினார்.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெளிவிவகார சேவைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-
மனித உரிமைகள் சபையால் இலங்கையில் விசாரணைகளை நடத்துவதற்காக சர்வதேச விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்ட நிலையில், இலங்கை அரசு உள்நாட்டு விசாரணைகளை மேற்கொள்வதற் காக சர்வதேச நிபுணர்களை உள்ளடக்கிய மூவரடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளது.
இக்குழுவில் டெஸ்மன்ட் டி சில்வா, கெப்ரிளைஸ், டாக்டர் கிரேன் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தான் உள்ளூரில் விசார ணைகளை மேற்கொள்ளவுள்ள காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு ஆலோசனை களையும் வழிகாட்டுதல்களையும் வழங்கவுள்ளனர்.
இந்த மூவரடங்கிய குழுவினரின் பின்னணியைப் ஆராய்வோமானால்,
இந்தக்குழுவின் தலைவராக உள்ளவர் டெஸ்மன்ட் டிசில்வா. இவர்இராணுவப்போரில்40ஆயிரம் தமிழ் மக்கள் படு கொலை செய்யப்பட்டதைநியாயப்படுத்தியவர். புலிகளின் பிடியிலிருந்து 3 லட்சம் தமிழர் களை விடுவிப்பதற்காக 40 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டமை தவறல்ல எனக் கூறியவர்.
அதுமட்டுமன்றி, பிரிட்டனில் இடம்பெற்ற படுகொலையொன்று தொடர்பாக இவர் மூடிமறைப்புகளை மேற்கொண் டவர். இலங்கையின் தவறுகளையும் மூடிமறைக்க தொடர்ந்து பாடுபடுபவர்.
அடுத்தவர், கெப்ரிளைஸ். இவர் சர்வாதிகாரத் தலைவர்களை பாதுகாப்பதில் நிபுணத்துவம் பெற்ற சட்ட நிபுணர். லிபியாவில் இடம்பெற்ற போரில் போர்க்குற்றச் சாட்டுக்கு உள்ளான லிபிய ஜனாதிபதி கேணல் கடாபி இவரைத் தொடர்பு கொண்டுள்ளார். கடாபியையும் அவரது மகனையும் பாதுகாப்பதாக இவர் உறுதி வழங்கியிருந்த போதிலும் அதற்குள் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது.
அடுத்தவர் டாக்டர் கிரேன். 2010 ஆம் ஆண்டில் இந்தியாவில் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் 156 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை நியாயப்படுத்தியவர். இந்தப்படுகொலையுடன் தொடர்புபட்ட ஆட்சியாளரைப் பாதுகாத்து பழியை சாதாரண இராணுவத்தினர் மீது சுமத்தியவர்.
எனவே, தற்போது இலங்கை அரசால் நியமிக்கப்பட்டுள்ள இந்த மூவரும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனிதப் படுகொலைகளைப் புரிந்தவர்களைப் பாதுகாத்தவர்கள். இவ்வாறான ஆட்சியாளர் களைப் பாதுகாத்து பழியை சாதாரண இராணுவத்தினரின் மீது சுமத்தியவர்கள். இதனால் இலங்கையிலும் இரா ணுவத்தினருக்கு எதிரான சூழ்ச்சி ஒன்று இடம்பெறுவதாகத் தோன்றுகின்றது. உத்தரவிட்டவர்கள் பாது காக்கப்பட்டு சாதாரணமானவர்கள் மீது பழி சுமத்தப்படப் போகின்றது.
இந்த மூன்று நிபுணர்களும் நாட்டைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்படவில்லை. ஒரு குடும்பத்தைப் பாதுகாக்கவே நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குடும்பத்துக்காக சட்டங்கள் கூட மாற்றப்படுகின்றன - என்றார். (ஓ)

# சாப்பிடுவதற்கு முன் கடவுளை நினைப்பவர்களுக்கு சலுகை

## அமெரிக்க உணவகத்தில்



அமெரிக்காவில் வடக்கு கரோலினா மாகாணத்தில் உள்ள உணவகம் ஒன்று, தனது வாடிக்கையாளர்களுக்கு வித்தியாசமான சலுகையை அளிக்கிறது. இந்த உணவகத்தில் சாப்பிடும் முன்பு பிரார்த்தனை செய்பவர்களுக்கு பில்லில் 15 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. இது குறித்து உணவக ஊழியர் கூறுகையில். இதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை.

கடந்த 4 ஆண்டுகளாக நாங்கள் வாடிக்கையாளர்களுக்கு இந்த சலுகையை அளித்து வருகிறோம் என்றார். இது குறித்து உணவக உரிமையாளர் மேரிஹாக்லண்ட் கூறுகையில், இதனை நாம் ஒரு கொள்கையாகக் கடைப் பிடிக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் உணவு அருந்தும் முன் கடவுளை நினைப் பவர்களுக்கு ஒரு பரிசாக இந்த சலுகையை வழங்குகிறோம் என்றார்.

# தண்ணீரில் தோல் சுருங்கக் காரணம்



நாம் தண்ணீரில் (குறிப்பாக குழந்தைகள்) அதிக நேரம் விளையாடும் போது அவர்களின் தோல் சுருக்கங்களுடன் காணப்படும். அதற்குக் காரணம் எமது தோலும் தண்ணீரை உறிஞ்சுகிறது என்று நினைத் திருப்போம். ஆனால் அது தவறு. எமது அடுத்த செயலுக்கான முன்னேற் பாடாகச் செயற்படுவதால் இவ்வாறு சுருக்கங்கள் ஏற்படுகிறது. அதாவது ஈரமான சூழலில் எம்மால் முடிந்தவரை தாக்குப்பிடிக்க இந்த சுருக்கங்கள் உண்டாக்கப் படுகின்றன. அதனால் தான் முடிந்தவரை கைகள், கால்கள் என உடலின் அனைத்து ஈரமான பகுதிகளிலும் சுருக்கங்கள் ஏற் படுத்தப்படுகின்றன.

நரம்புகளில் பிரச்சினையுள்ள ஒரு சில நோயாளிகளுக்கு இத்தகைய சுருக்கங்கள் நீண்ட நேரம் நீரில் நின்றாலும் ஏற்படுவதில்லை என்று ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். நீண்ட நேரம் தண்ணீரில் நிற்கும்போது தோன்றும் சுருக்கங்கள் முதலில் நீரின் மூலமே ஆரம்பித்து வைக்கப்படுகின்றது. பின்பு தோலுக்கு அடியில் உள்ள இரத்த நாளங்கள் மற்றும் நரம்புகளின் இணைப்பு வரை முன்னேறிச் சென்று தோலுக்கு அடியில் உள்ள நீரின் அளவைக் குறைக்கிறது. இத்தகைய உடல் செயற்பாடுகள்தான், சுருக்கங்கள் மேலும் பரவுவதற்குக் கார ணமாக அமைகின்றன.

# தத்ரூபமாக சிற்பங்களை செதுக்கிய சிற்பியின் கைவண்ணம்



சுவிஸில் நபர் ஒருவர் வித்தியாசமான சிற்பங்களை மிக அழகான முறையில் செதுக்குகிறார்.

சுவிஸின் சொலோதுன் மாகாணத்தைச் சேர்ந்த பெலிக்ஸ் சிம்மர்மான் (வயது- 32) என்ற சிற்பி பலவிதமான படைப்புகளை தனது சிற்பக் கலையால் செதுக்கியுள்ளார். மர நாற்காலிகள் மற்றும் உள்துறை வடிவமைப்பு சிற்பங்களை இவர், தான் நடத்தி வரும் நிறுவனத்தில் விற் பனை செய்கிறார். இதுகுறித்து அவர் கூறுகையில், தச்சுத் தொழிலை முக்கியமாக செய்து வரும் நான் சிற்பங்கள் செதுக்குவதை பொழுது போக்காக கொண்டுள்ளேன். கழுகு, ஓநாய், ஆந்தை போன்ற மிருகங்கள் எனக்கு எளிதாகச் செதுக்க வருபவை என்றும் தெரிவித்துள்ளார். அவரது இந்த அருமையான படைப்புகள் வரும் 31 ஆம் திகதி பார்வையாளர்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

# பொம்மைகளைச் சேகரிப்பதில் ஆர்வம் காட்டும் ஸ்ருதிஹாசன்



தமிழ், தெலுங்கு, ஹிந்தி என அமோகமாக நடித்துக் கொண்டிருக்கும் நடிகை ஸ்ருதிஹாசன். இவர் தற்போது ஹரி இயக்கத்தில் விஷாலுடன் பூஜை படத்தில் நடித்து வருகிறார். பிரபலங்கள் அனைவரும் தங்கள் ஓய்வு நேரங்களில் ஏதேனும் பொருள்களை வாங்கிச் சேகரிப்பார்கள். இசையமைப்பாளர் யுவன் அதிகமாகக் கைக் கடிகாரங்கள் வாங்கிச் சேமிப்பாராம். அதேபோல் நடிகை ஸ்ருதி படத்தில் வரும் சாகச ஹீரோக்களின் பொம்மைகளைச் சேகரிப்பதில் ஆர்வமுடையவராம்.

# சத்தீஸ்கரில் வாழும் 732 வயதான பெண்மணி

சத்தீஸ்கரின் தொழிலாளர் நலத்துறை, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ், சமூக ஆர்வலர் ஒருவருக்கு அளித்திருக்கும் தகவல்கள் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சஞ்சய் அகர்வால் என்ற சமூக ஆர்வலருக்கு அந்தத்துறையினர் அளித்துள்ள தகவலில், கடந்த ஆண்டு அந்த மாநிலத்தின் சைக்கிள் விநியோக திட்டத்தின்படி, ராய்பூரில் வசிக்கும் பூஷ்பா சஹூ என்பவருக்கு 732 வயது என்றும், அவர்தான் உலகிலேயே மிகவும் வயதான பெண்மணி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அவருக்கு இந்தத் திட்டத்தின்படி, சைக்கிள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இந்தத்திட்டம் குறித்து சஞ்சய் அகர்வாலுக்கு கிடைத்துள்ள தகவலின்படி, ராய்பூர் மாவட்டத்தில், 100-732 வரையிலான வயதுடைய 7000 பெண்மணிகள், அந்த மாநில அரசின் பெண்கள் நலத் திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதுகுறித்து ராய்பூரின் தொழிலாளர் ஆணையர் ஜிதின் குமார் கூறுகையில், இது மென்பொருளில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நடந்தது. மேலும், நாம் தரவு பதிவு சேவைகளை வெளியில் கொடுத் துச் செய்வதால், ஒருவருக்கு மட்டும் இதுபோன்ற தவறான தகவல் சென்றிருக்க வாய்ப்புள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# தனிமை உங்களை நெருங்காதிருக்க....

'தான்' என்ற அகம்பாவத்தை மையமாக வைத்துக் கொண்டு, உங்களை ஆணவத்துடன் வளர்த்துக் கொண்டுவிட்டால், நீங்கள் சுயநலம் படைத்த ஒருவராக ஓங்கிவிடுவீர்கள். மற்ற எல்லோரும் உங்களிடமிருந்து கத்தரித்துக் கொண்டு போய்விடுவார்கள். ஆண்டுகள் செல்லச் செல்ல நீங்கள் தனிமையில் ஒதுக்கி விடப்படுவீர்கள். வாழ்க்கையில் அந்தத் தனிமை தரும் 'வெறுமை' உங்க ளைச் சூழந்து கொள்ளும். உங்களுடைய சுயநலத்தில், உங்களைச் சுற்றி ஒரு பெரிய சுவரை எழுப்பி உங்களை மறைத்துக் கொண்டு விட்டீர்கள்: உங்களை மற்றவர்களுடன் இணைக்கும் பாலங்களை அல்லவோ நீங்கள் கட்டியிருக்க வேண்டும்? பிறரிடம் இனிமையாகப் பழகி நட்புக் கொள்ளுதல், தாராளமாக வழங்கும் பண்பு, பிறருடைய இன்ப துன்பங்களுக்காக அன்பர்களிடம் பரிவுகொண்டு அக்கறை கொள்ளுதல், இவற்றைப் பழக்கத்தில் வளர்த்துக் கொள்ளுங்கள். அதன்பின் தனிமை உங்களை எக்காலத்திலும், எந்த இடத்திலும் நெருங்கவே நெருங்காது.

ஞானக்கதிர்

கையடக்க தொலைபேசி
மலிவு விற்பனை



30% வரை விலைக்கழிவு
சிங்ககிரி காட்சியறை
யாழ்ப்பாணம்
ஆகஸ்ட் 7 முதல் 9 வரை
C05749
சிங்ககிரி (பிரைவட்) லிமிடட்.
சம்கங் பிளாசா: # 515, டாலி வீதி, கொழும்பு 10.
துரித அழைப்பு: 011 5 413 413 / 011 4 413 413
இணையதளம்: www.singhagiri.lk
துரித அழைப்பு: 021 2 220 984
SAMSUNG
SINGHAGIRI

# சிப் மற்றும் பின்கார்ட்களை வாசிக்கப் புதிய கருவி



ஸ்வைப் கார்ட், சைன் கார்ட் உட்பட்ட பின்காட்களையும், சிப்களையும் வாசிப்பதற்கு ஸ்குயர் றீடர் என்ற புதிய கருவி அறிமுகம் செய்யப்படவுள்ளது.

பிரித்தானியாவில் பாவனையிலுள்ள பின்கார்ட்களை கருத்தில் கொண்டு எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்தக்கருவி அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இது தற்போது பாவனையிலுள்ள றீடர்களை விடவும் பாதுகாப்பு மிக்கதாகவும், கொடுக்கல் வாங்கல்களை மேலும் இலகுவாக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.




# வாடிக்கையாளருக்கு அதிரடிச் சலுகை தரும் அமேஷான்

ஒன்லைனில் பலவகையான பொருள்களை விற்பதில் சிறந்த தளமாக திகழும் அமேஷான், தனது வாடிக்கையாளர்களுக்கு அதிரடிச் சலுகை ஒன்றை வழங்க முன்வந்துள்ளது.

அதாவது பிரதான வாடிக்கையாளர்கள் கொள்வனவு செய்த பொருள்கள் தாமதமாக அவர்களது வீட்டுக்கு சென்றடையுமாயின் குறித்த வாடிக்கையாளர்ளை திருப்திப்படுத்துவதற்காக ஒரு டொலர் பெறுமதியான காணொலி கிரடிட்டை அமேஷன் வழங்கவுள்ளது.

இதன்மூலம் அவர்கள் தொலைக்காட்சி தொடர்களையோ, அல்லது திரைப்படங்களையோ தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

பிரதான வாடிக்கையாளர்கள் கொள்வனவு செய்த பொருள்கள் தாமதமாக அவர்களது வீட்டுக்குச் சென்றடையுமாயின், குறித்த வாடிக்கையாளர்ளைத் திருப்திப்படுத்துவதற்காக ஒரு டொலா பெறுமதியான வீடியோ கிரடிட் வழங்கப்படவுள்ளது.

# ஐ போன் 6 தொடர்பில் புதிய தகவல்

அப்பிள் நிறுவனத்தின் புதிய ஸ்மார்ட் கைப்பேசி தொடர்பில் தொடர்ச்சியாக பல சுவாரஸ்யமான தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

கைப்பேசிப் பிரியர்களிடம் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்தக் கைப் பேசியின் அறிமுகம் தொடர்பாகவும் புதிய புதிய தகவல்கள் வெளியாகின்றன.

இதன்படி இது எதிர்வரும் செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் அறி முகப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது ஒக்டோபர் மாதம் 14ம் திகதி அறிமுகம் செய்யப்படவுள்ளது என மற்றுமொரு தகவல் வெளியாகியுள்ளது.

இந்தப்புதிய கைப்பேசியானது 4.7 அங்குல அளவு, 5.5 அங்குல அளவுடைய திரைகளுடன் 64 பிற்அப்பிள் ஏ8 புறொசெஸ்ஸருடன் iOS 8 இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்தப்புதிய கைப்பேசியானது 4.7 அங்குல அளவு. 5.5 அங்குல அளவுடைய திரைகளுடன் பிற் அப்பின் ஏ8 புறொசெஸ்ஸருடன் iOS 8 இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# குறைந்த விலையில் அறிமுகமாகும் ஸ்மார்ட் பேண்ட்

றேசர் நிறுவனம் தனது றேசர் நாபு (Razer Nabu) எனும் புதிய ஸ்மார்ட் பேண்ட்டை எதிர்வரும் இரு மாதங் களுக்குள் அறிமுகப்படுத்தவுள்ளது.

முதன்முறையாக அமெரிக்காவில் அறிமுகப் படுத்தப் படவுள்ள இதன் விலை 100 டொலர்கள் என றேசர் நிறுவனத்தின் தலைமை அதிகாரி தெரிவித் துள்ளார்.

அன்ரோயிட் மற்றும் ஐ.ஓ.எஸ். சாதனங்களுடன் இணைத்து பயன்படுத்தக்கூடிய இந்தச்சாதனத்தில் டுவிற்றர், கூகுல் மப், இன்ஸ்றாக்ராம் மற்றும் பேஸ்புக் அப்பிளிக்கேஷன்கள் காணப்படுகின்றன.

இது 128 X 32 பிக்ஸல் அளவுடையதும் ஓ.எல்.டி. தொழில் நுட்பத்தை உடையதுமான திரையை கொண்டுள்ளது.

இதிலுள்ள மின்கலம் ஒருமுறை சார்ஜ் செய்த பின்னர் 5 தொடக்கம் 7 நாள்கள் வரை பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்றது.





கூகுளின் பிந்திய இயங்குதளப்பதிப்பான அன்ரோய்- 4.4 இல் இயங்கக்கூடிய நபி ஜேஆர் ரப்லட் என்ற குழந்தைகளுக்கான புதிய ரப்லட் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

270 டொலர்கள் பெறுமதியான இந்த ரப்லட்டில் ரிக்ரா 3 புரொஸெஸர் பிரதான நினைவகமாக 2 ஜிபி நினைவகம் மற்றும் சேமிப்பு நினைவகமாக 16 ஜிபி தரப்பட்டுள்ளது.

மேலும் 8 அங்குல அளவு, 1920 X 1200 பிக்ஸல் அளவுடைய தொடுதிரையைக் கொண்டுள்ள இந்த ரப்லட்டில் 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 2 மெகாபிக்சல்களை உடைய காணொலி அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பனவும் தரப்பட்டுள்ளன.

# அறிமுகமாகின்றது குழந்தைகளுக்கான நவீன ரக ரப்லட்

# விண்டோஸ் போன்களுக்கான பி.பி.எம். அப்பிளிக்கேஷன் அறிமுகம்

விண்டோஸ் போன் இயங்குதளங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் ஸ்மார்ட் கைபேசிகளுக்கான பி.பி.எம். (BBM) அப்பிளிக்கேஷனை பிளாக்பெரி நிறு வனம் அறிமுகம் செய்துள்ளது.

இந்த அப்பிளிக்கேஷன் விண் டோஸ் போன் 8 மற்றும் விண்டோஸ் போன் 8.1 ஆகிய இயங்குதளங்களில் செயற்படக் கூடியதாக இருப்பதுடன் இதனை விண்டோஸ் போன் ஸ்ரோர் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

சட்டிங், புகைப்படங்களைப் பரிமாறிக் கொள்ளல், குரல்வழித் தகவல்கள் ஆகியவை உட்பட பல அம்சங்களைக் கொண்டு இந்த அப்பிளிக்கேஷன் அன்ரோய்ட், ஐஓஎஸ். சாதனங்களுக்காக ஏற்கனவே அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் காணி சுவீகரிப்பை உடனடியாகத் தடுத்து நிறுத்தவும்

## வடமாகாண முதலமைச்சருக்கு கடிதம்

முல்லைத்தீவு, ஓக. 8
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளிவாய்க்கால் கிராமத்தில் கடற்படை முகாம் அமைப்பதற்காக பொது மக்களுக்குச் சொந்தமான சுமார் 617 ஏக்கர் காணியைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துமாறு வடமாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் ம.அன்ரனி ஜெயநாதன் வடமாகாண முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

அலுவலரின் காணிச் சுவீகரிப்புத் தொடர்பான அறிவிப்புத் தொடர்பாகப் பொதுமக்கள் ஆட்சேபம் தெரிவித்து வருகின்றனர்.

அந்தக் கடிதத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேற்படி காணியில் 90 வீதமானவை பொதுமக்களுக்குச் சொந்தமானவை.
கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலரின் காணிச் சுவீகரிப்புத் தொடர்பான அறிவிப்புத் தொடர்பாகப் பொதுமக்கள் ஆட்சேபம் தெரிவித்து வருகின்றனர்.
ஆனால் பிரதேச செயலர் விடுத்துள்ள அறிவித்தலில் காணிக்கான உரிமை கோருபவர்களை அடையாளம் காண முடியவில்லையென உண்மைக்குப் புறம்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
மேலும், பிரதேச செயலரின் காணி சுவீகரித்தல் தொடர்பான அறிவித்தலில், காணியின் அளவு தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் இந்தக் காணிகள் நிலஅளவை செய்யப்பட்டு விட்டனவா என்ற சந்தேகம் எழுகின்றது.
மேலும் காணி உரிமையாளர்களின் பெயர், விவரங்கள் முல்லைத்தீவு அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது காணியை மீட்டுத் தருமாறு கோரும் கடிதங்கள் அரச அதிபராலும், பொது மக்களாலும் பிரதேச செயலருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
இந்த நிலையில் உடனடியாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருடன் தொடர்பு கொண்டு இந்தக் காணி சுவீகரிப்பைத் தடுத்து நிறுத்தவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தண்ணீருக்கான தேவைகள் அதிகரித்துச் செல்கின்றன

### முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவிக்கிறார்

முல்லைத்தீவு, ஓக. 8
முல்லைத்தீவு மாவட்டத்தின் குடிதண்ணீர்த் தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சி காரணமாக ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் நெருக்கடி தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் 6 பிரதேச செயலர் பிரிவுகளிலும் குடிதண்ணீர் நெருக்கடி காணப்படுகின்றது.
இங்குள்ள 136 கிராம அலுவலர் பிரிவுகளில் 60 பிரிவுகளுக்கு குடிதண்ணீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றது.
வறட்சியான காலநிலையிலும் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை, நிலக்கடலை செய்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படவில்லை.
கடந்த ஆண்டு இந்த மாவட்டத்தில் 14 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. நடப்பாண்டில் ஆயிரம் ஏக்கருக்கு உட்பட்ட நிலப்பரப்பில் சிறு போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டின்கீழ் வறட்சி நிவாரணம் பெறத் தகுதியுடையவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. கணுக்கேணிக் குளத்தின் கீழான நெல் வயல்களில் அறுவடை இடம்பெற்று வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)



கிளிநொச்சி, பூநகரி மகா வித்தியாலயத்தின் உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி அரச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் மற்றும் விருந்தினர்கள் நிகழ்வு மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படும் போது... (க-18)

## சிறப்பாக இயங்கி வருகின்றது வவுனியா எரிவாயு மயானம்

### தெரிவிக்கிறார் நகரசபை செயலாளர்

வவுனியா, ஓக. 8
வவுனியா நகரசபைக்குரிய எரிவாயு மயானம் சிறப்பாக இயங்கி வருவதாக நகரசபைச் செயலாளர் தெரிவித்தார்.
சடலம் எரியூட்டுவதற்கு 10 ஆயிரம் ரூபா மாத்திரமே இந்த மயானத்தில் அறவிடப்படுகின்றது.
இதில் 5 ஆயிரம் ரூபா எரிவாயு மற்றும் மின்சாரத்துக்கெனச் செலவாகின்றது. மீதித் தொகை மயானத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வேதனமாக வழங்கப்படுகின்றது.
வவுனியா நகரசபையின் எரிவாயு மயானம் சிறப்பாகச் செயற்படவில்லையெனவும் அங்கு சடலங்களை எரியூட்டுவதற்கு அதிகளவு பணத்தை நகரசபை அறவிடுவதாகவும் சிலர் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.
இதுவரை இந்த மயானத்தில் 14 சடலங்கள் எரிவாயு மூலம் எரிக்கப்பட்டுள்ளன.
சில இந்துக்கள் தற்போதும் விறகின் உதவியுடன் சடலத்தை எரிக்கின்றனர்.
அது அவர்களுடைய பாரம்பரிய வழக்கமாக இருக்கலாம். காலப்போக்கில் விறகில் சடலத்தை எரிப்பவர்கள் எரிவாயு மூலமும் எரிப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (க-402)

## வவுனியாவில் கைக்குண்டு மீட்பு

வவுனியா, ஓக. 8
வவுனியா, இறம்பைக்குளம் ராணி மில் வீதியில் குளக் கரையில் கைக்குண்டு ஒன்று பழுதடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
நேற்று முன்தினம் நகரை அழகு படுத்தும் செயற்றிட்டத்துக்கு அமைவாக குறித்த குளம் அழகுபடுத்தப்பட்டு வருகின்றது.
துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் கைக்குண்டை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.
அங்கு வந்த பொலிஸார் கைக்குண்டை அடையாளப்படுத்தியதுடன் குண்டு செயலிழக்கும் பிரிவுக்குத் தகவல் கொடுத்துள்ளனர். (ஒ-421)




## மக்கள் பயன்படுத்தமுடியாத நிலையில் யோகபுரம் மைதானமும் கலையரங்கமும்

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள யோகபுரம் மத்தி கிராமத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானமும், கலையரங்கமும் இதுவரை புனரமைக்கப்படாமையால் மக்கள் பயன்படுத்தமுடியாத நிலையில் காணப்படுகின்றன.
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 20 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களால் இவையே பொது விளையாட்டு மைதானமாகவும், கலையரங்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் இங்கு மக்கள் மீள்குடியமர்ந்து ஐந்து ஆண்டுகள் கடந்தபோதிலும் இவற்றைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.
போரின் பின்னர் மைதானத்தில் பற்றைக் காடுகள் வளர்ந்து காணப்படுவதுடன் கலையரங்கு சேதமடைந்த நிலையில் உள்ளதையும் காணமுடிகின்றது. (க-500)

## மதுபோதையில் வாகனம் செலுத்திய நபர் கைது



மாங்குளம், ஓக. 8
மதுபோதையில் உரிய அனுமதிப்பத்திரங்கள் இல்லாது வாகனத்தைச் செலுத்திச் சென்ற படி ரக வாகனச் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், குறித்த வாகனமும், பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 9.15 மணியளவில் மாங்குளம், மல்லாவி, வெள்ளாங்குளம் வீதியில் இடம்பெற்றது.
குறித்த வீதியில் சென்று கொண்டிருந்த மேற்படி வாகனம் அதே வீதியில் சென்று கொண்டிருந்த பொலிஸாரை உரசியவாறு சென்றதாகவும், இதனையடுத்து உடனடியாக வாகனத்தைத் தடுத்து நிறுத்திய பொலிஸார் மல்லாவி பொலிஸ் நிலையத்திலிருந்து மேலதிக பொலிஸாரை வரவழைத்து குறித்த சாரதியைக் கைது செய்ததுடன் வாகனத்தையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். (க-415)

## சிதம்பரபுரத்தில் தற்காலிகமாக வாழ்பவர்களை நிரந்தரமாகக் குடியமர்த்த வேண்டும்

### வடமாகாண சுகாதார அமைச்சர் கோரிக்கை

வவுனியா, ஓக. 8
வவுனியா சிதம்பரபுரத்தில் நீண்டகாலமாகத் தற்காலிகமாக தங்கியிருப்போரை அதே இடத்தில் காணி வழங்கி நிரந்தரமாகக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
இவ்வாறு வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.
வவுனியா சிதம்பரபுரத்தில் 1990களில் இந்தியாவிலிருந்து திரும்பி வந்தவர்களுக்கான தற்காலிக நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டு கடந்த 25 வருடங்களுக்கு மேலாக மக்கள் அங்கு வாழ்ந்து வந்துள்ளனர்.
இந்த நிலையில் 2009 இல் போர் முடிவுக்கு வந்தபின்னர் தங்களின் சொந்த இடங்களில் காணிகள் உள்ளவர்கள் மீளக் குடியமர்ந்த நிலையில் 187 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் அதே பகுதியில் வாழ்ந்து வருகின்றார்கள்.
மூன்று சந்ததிகளுக்கு மேலாக வாழ்ந்துவரும் இவர்கள் இதேபகுதியில் தொழில் செய்துவருவதுடன் இவர்களது பிள்ளைகளும் அயற் கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் கல்விகற்று வருகின்றனர்.
உள்ளக கட்டுமானங்களான வீதி, பொதுநோக்கு மண்டபம், பாடசாலை, விளையாட்டு மைதானம் என்பன ஏற்கனவே அமைக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் தற்காலிக வீடுகளில் அடிப்படை வசதிகளின்றி இந்த மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.
இந்தநிலையில் இவர்களுக்கு மாவட்டத்தில் வேறெந்தப் பகுதியிலும் சொந்தமாகக் குடியேற காணிகள் இல்லாத நிலையில் வாழ்ந்துவரும் இவர்களுக்கு அவர்கள் குடியிருக்கும் காணிகளைச் சொந்தமாக வழங்கி அவர்களை அதே இடத்தில் குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் வவுனியாவில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.
நீண்ட விவாதத்துக்குப் பின்னர் இவர்களுக்கான காணி வழங்க நடவடிக்கை எடுப்பதாக அபிவிருத்திக்குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டது.
வவுனியாவின் தென் எல்லையில் அமைந்துள்ள இந்தக் கிராமத்தில் தமிழ்மக்கள் நிரந்தரமாக குடியமர்த்தப்படுவது காலத்தின் தேவையாகும் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர். (க-421)

## சாவகச்சேரி பிரதேச சபைக்கு புதிய உறுப்பினர் நியமனம்

தென்மராட்சி, ஓக.8
சாவகச்சேரி பிரதேச சபையின் புதிய உறுப்பினராக மீசாலை வடக்கைச் சேர்ந்த குகதாசன் தனுஷன் தேர்தல்கள் ஆணையாளரினால் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.
சபையின் உறுப்பினராகப் பணியாற்றிய கச்சாயைச் சேர்ந்த சி.சிறிரஞ்சன் தனது உறுப்பினர் பதவியில் இருந்து விலகி வெளிநாட்டுக்குச் சென்றதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு வாக்குகள் அடிப்படையில் முன்னிலையில் காணப்பட்ட குகதாஸன் தனுசன் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ஓ-9)

## உளவளத் துணையின் வாய்மொழி மூலப் பரீட்சை

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஓராண்டு உளவளத்துணை டிப்ளோமா பட்டத்தின் இறுதி வாய்மொழி மூலப் பரீட்சை நேற்று முதல் கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையின் அனைத்து மாகாணத்திலிருந்தும் இந்த டிப்ளோமா எழுத்து மூலப் பரீட்சைக்கு பலர் தோற்றிய போதிலும் அறுபது மாணவர்களே இந்தப் பரீட்சையில் சித்தியடைந்ததாகவும், இவர்களுக்கான வாய்மொழி மூலப் பரீட்சையே தற்போது நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-288)



வட்டு. கிழக்கு, கலட்டி வீதி, வலி.மேற்கு பிரதேச சபையின் 1.5 மில்லியன் நிதியின் மூலம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. பெரும்பாலான மாணவர்கள், மக்கள் பயணிக்கும் மிகப் பிரதான வீதியான இந்த வீதி பல வருடகாலமாக புனரமைக்கப்படாதிருந்த நிலையில் தற்போது வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. (ஓ)

# தென்மராட்சி பேக்கரிகளில் இரவிரவாக திடீர் சோதனை

## எறும்பு மொய்த்த பணிஸ்கள் அழிப்பு

தென்மராட்சி, ஓக.8
தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள அனைத்துப் பேக்கரிகளிலும் சுகாதாரத் திணைக்களத்தினரால் இரவிரவாக பரிசோதனை நடத்தப்பட்டது.
நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு 10 மணி தொடக்கம் நேற்று வியாழன் அதிகாலை வரை சாவகச்சேரி நகரசபை, பிரதேச சபை என்பவற்றின் கீழ்வரும் பகுதிகளில் இயங்கும் அனைத்துப் பேக்கரிகளிலும் திடீர் பரிசோதனை நடத்தப்பட்டது.
பரிசோதனையின்போது சுகாதாரமற்ற நிலையில் காணப்பட்ட பேக்கரிகள் அடையாளம் காணப்பட்டு, அவை 15 தினங்களுக்குள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.
இதேவேளை - உற்பத்தி செய்யப்பட்ட பணிஸ்களில் எறும்பு காணப்பட்டதால் அவை பறிமுதல் செய்து அழிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.
பேக்கரிகளில் பாண் உற்பத்தி செய்யும் வேளையில் காணப்படும் குறைபாடுகளைக் கண்டறியும் முகமாகவே இந்தத் திடீர் பரிசோதனை நடத்தப்பட்டது என்று சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ஓ-9)

## சுன்னாகம் நகரை அழகுபடுத்தும் முயற்சியில் படையினர்

வலி. வடக்கு, ஓக.8
சுன்னாகம் நகரப் பகுதியை அழகுபடுத்துவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.
இதன் ஒரு கட்டமாக சுன்னாகம் நகரப் பகுதியில் உள்ள வாத்தகர்கள் மற்றும் ஓட்டோ சங்கங்களின் பிரதிநிதிகள், ஓட்டோ சாரதிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி, சுன்னாகம் நகரை அழகுபடுத்துவது தொடர்பாக ஆலோசனைகளையும் பெற்று வருகின்றனர்.
இது தொடர்பான கலந்துரையாடல்கள் கட்டம் கட்டமாக கந்தரோடை இராணுவ முகாமில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-86)

## கசிப்பு குற்றச்சாட்டு; சந்தேக நபருக்கு ரூ.50 ஆயிரம் ரொக்கப் பிணை



தென்மராட்சி, ஓக.8
கசிப்பு வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட நபரொருவர் நீதிமன்றில் தாம் சுற்றவாளியெனத் தெரிவித்ததால் 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டார்.
சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, குற்றப் பத்திரம் வாசிக்கப்பட்ட பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவர் தாம் சுற்றவாளி எனத் தெரிவித்ததால் மேற்குறித்த பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.
மதுவரி நிலையத்தினரால் அனுமதிப் பத்திரமின்றி வீடுகளில் கள்ளு வைத்திருந்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட 11 வழக்குகளும் நேற்று முன்தினம் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அனைவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டதால் அவர்களுக்குத் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ஓ-9)

# ஆலயங்களில் அலறும் ஒலிபெருக்கிகள்; கிரகித்து படிக்க முடியாத மாணவர்

## ஜி.சீ.ஈ. பரீட்சை ஆரம்பமாகியுள்ள நிலையில்

தென்மராட்சி, ஓக.8
மாகாண அமைச்சரின் உத்தரவினால் மகிழ்ச்சியுற்ற மாணவர்கள் ஆலயங்களின் திருவிழாக் காலத்தில் ஒலிபெருக்கி பயன்படுத்துவதால் சிரமப்படுவதாக கவலை தெரிவித்தனர்.
ஆலயங்கள் உட்பட நிகழ்வுகளில் ஒலிபெருக்கி பயன்படுத்த தடை விதிப்பதாக மாகாண சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அண்மையில் அறிக்கை விட்டிருந்தார்.
இதனால் மகிழ்ச்சியடைந்த மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு ஆர்வத்துடன் படிக்க ஆரம்பித்தனர். ஆனால் பரீட்சை ஆரம்பிக்கப்பட்ட வேளையில் ஆலயங்களில் திருவிழாக்களும் தொடங்கியதால் அதிகாலை 4 மணிக்கே ஒலிபெருக்கிகள் சத்தமாக அலறத் தொடங்கி விடுகின்றன.
இவ்வாறான நிலையால் பரீட்சைக்கு கிரகித்துப் படிக்க முடியவில்லை என மாணவர்கள் கவலையுடன் தெரிவித்தனர். இது தொடர்பாக திருவிழா நடைபெறும் ஆலயங்களின் உபயகாரர்களுடன் தொடர்புகொண்டு கேட்ட போது:
மாகாண அமைச்சரின் உத்தரவு தமக்குத் தெரியும் எனவும், ஒலிபெருக்கிகள் ஆலய திருவிழாவுக்கு பயன்படுத்துவது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு விண்ணப்பித்தபோது நிபந்தனை எதுவும் குறிப்பிடாமல் அனுமதிப் பத்திரம் வழங்கியதால் ஆலயத்தில் ஒலிபெருக்கிகள் பயன்படுத்துவதாகவும் தெரிவித்தனர்.




மாணவர்களின் கல்வி வாழ்க்கையில் உயர்தரப் பரீட்சையின் முக்கியத்துவம் தெரிந்த இந்து ஆலயங்களின் திருவிழா உபயகாரர்களும், ஆலய நிர்வாகிகளும் மாணவர்களின் பரீட்சை நேரத்தை குழப்பும் வகையில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவது குறித்து சமூக நலன் விரும்பிகள் கவலை தெரிவித்தனர். (ஓ-9)

# தீவகத்தின் குடித[ண்]ணீர்ப் பிரச்சினைக்கு உள்ளூராட்சிச் சபைகள் உதவ வேண்டு[ம்]

## தீவக சமூக அமைப்புக்க[ள்] வேண்டுகோள்

வலி.வடக்கு, ஓக.8
தீவகப் பிரதேசத்தில் நிலவும் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு குடாநாட்டிலுள்ள ஏனைய உள்ளூராட்சிச் சபைகள் உதவ வேண்டுமென தீவக சமூக அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.
தீவகத்தில் தற்போது நிலவும் கடும் வறட்சியான காலநிலை காரணமாக குடிதண்ணீர்ப் பிரச்சினை பெரியளவில் காணப்படுகின்றது. தீவகத்தின் குடிதண்ணீர்த் தேவை



களைப் பூர்த்தி செய்து வந்த சாட்டியிலுள்ள கிணறும் முழுமையான அளவில் நீரை வழங்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் பல மணி நேரம் காத்திருந்தே பவுஸர்களில் நீரை நிரப்ப முடிகின்றது.
இந்த நிலையில் தீவகத்துக்கு வெளியில் உள்ள யாழ்ப்பாணம், நல்லூர், மானிப்பாய், சுன்னாகம், கோப்பாய் ஆகிய பிரதேசங்களில் இயங்கிவரும் உள்ளூராட்சிச் சபைகள் வறட்சி தணியும் வரை தினமும் இயன்ற அளவில் குடிதண்ணீரை வழங்கி உதவ வேண்டுமெனவும் அந்த அமைப்புக்கள் கேட்டுக்கொண்டுள்ளன.
இதேவேளை - வேலணைப் பிரதேச சபை எல்லைக்குள் குடிதண்ணீர்ப் பிரச்சினை காணப்படுவதாக பிரதேச சபையின் தலைவர் சின்னையா சிவராசா தெரிவித்துள்ளார்.
வேலணை சாட்டியில் உள்ள கிணற்றில் இருந்து பெறப்படும் நீரின் மூலமாக சரவணை, புங்குடுதீவு அம்பிகைநகர், நயினாதீவு, மண்டைதீவு ஆகிய இடங்களுக்கு பிரதேச சபையினதும், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியாரினதும் பவுஸர்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெற்று வந்தது.
தற்போது காணப்படும் கடும் வறட்சி காரணமாக வேறு இடங்களிலும் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.
இதனால் குடிதண்ணீருக்கான தேவையும் அதிகரித்துள்ளது. இதனை ஈடு செய்யும் வகையில் சாட்டிக் கிணற்றில் இருந்து முழு அளவில் குடிதண்ணீரைப் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.
இதனால் வேலணைப் பிரதேசத்தின் குடிதண்ணீர்த் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்வதில் பெரும் சிரமமான நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (க-[illegible])

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வறட்சியை எதிர்கொள்ளும் சூத்திரம் உடனடி அவசியம்

யாழ்ப்பாணத்துக்கு நல்ல குடிதண்ணீரை எங்கிருந்து எடுத்து வருவது என்ற சர்ச்சை நிலவுகையில் வடபகுதி என்றைக்கும் இல்லாத வகையில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளமையை எப்படி எடுத்துக்கொள்வது என்று தெரியவில்லை. அரச புள்ளிவிவரங்களின்படி வடக்கு மக்கள் தொகையின் சுமார் 50 விழுக்காட்டினர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. வடக்கில் வசிக்கும் சுமார் 2 லட்சம் குடும்பங்களில் 87ஆயிரம் குடும்பங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

நிலைமை இப்படியே போனால் இந்தத் தொகை மேலும் அதிகரிக்குமே தவிர குறையப்போவதில்லை என்பது தெளிவு. ஒக்டோபர் மாதம் வரையில் மழை வருவதற்கான சாத்தியங்களும் இல்லை என்று எதிர்வுகூறப்பட்டுள்ள நிலையில் மேலும் மேலும் சிக்கல்கள் தோன்றப் போகின்றன என்பது திண்ணம்.

யாழ்ப்பாணத்தின் தீவகப் பகுதியும், வன்னியின் பல கிராமங்களும் இந்த வறட்சியால் குடிதண்ணீருக்குக்கூட அவலப்படும் நிலைமை மோசமாகப் போகின்றன. பாதுகாப்பான குடிதண்ணீர் ஒவ்வொரு மனிதனதும் அடிப்படை உரிமை என்று ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்துகின்றபோதிலும், இங்கோ குறைந்தபட்சக் குடிதண்ணீரைக்கூட மக்களுக்கு வழங்க முடியாத நிலைதான் உள்ளது.

குடிதண்ணீரை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய உள்ளூராட்சி நிறுவனங்கள் அதற்கான வசதிகளையும், கட்டமைப்புகளையும், நிதி வளங்களையும் கொண்டிருக்காததால் அவசியமான எவையும் நடக்கவில்லை. போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டபோதும் இன்னமும்கூட அதற்கான கட்டமைப்புக்கள் ஏற்படுத்தப்படவில்லை.

மழையையும், நிலத்தடி நீரையும், சில குளங்களையும் தவிர வேறு நீர் மார்க்கங்கள் எதுவும் இல்லாத வடபகுதியில், பருவ மழை தவறுகின்ற காலப்பகுதிகளில் எல்லாம் இந்த நிலைமை தோன்றக்கூடியதுதான். ஆனாலும் அதனை எதிர்கொள்வதற்கான பொறிமுறைகள், ஏற்பாடுகள் எம்மிடம் இல்லை என்பது கவலையளிக்கிறது.

மாகாண சபையின் அமைச்சுக்கள் சில தற்காலிக ஏற்பாடுகளை மட்டும் மேற்கொள்வது நிரந்தர பயனைத் தரப்போவதில்லை. எனவே தீர்க்க தரிசனமும், தெளிவான திட்டமிடலும் கொண்ட அணுகுமுறை மூலம் வடக்கின் வறட்சியை எதிர்கொள்வதற்கான பொறிமுறை ஒன்று தயாரிக்கப்படவேண்டும். அதற்கும் மேலாக வடக்குக்கான மேலதிக நீர் மூலங்களைக் கண்டறியும் தேவையும், அவசியமும் எழுந்துள்ளன.

கடல் நீரை நன்னீராக்குவது போன்ற திட்டங்களும் ஆராயப்படக்கூடியனவே. அதே போன்று நிலத்தடி நீரின் அளவை அதிகரிப்பதற்கான நீண்ட மற்றும் குறுகிய காலத் திட்டங்களும் தயாரிக்கப்படவேண்டும்.

எனவே வடக்கு மாகாண சபை இந்த விடயத்தில் தீவிர அக்கறை செலுத்தி வினைத்திறனான திட்டங்களை உடனடியாக வகுப்பது அவசியம். அத்துடன் அந்தத் திட்டங்கள் நேர்மையாகச் செயற்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதும், உறுதிப்படுத்துவதும்கூட அவசியம்.

# காஸா போர் நிறுத்தம் சொல்லும் செய்தி என்ன?



மொத்தத்தில் போர்க்கள ரீதியில் இஸ்ரேலுக்கு வெற்றியைக் கொடுத்த இந்தப் போரின் பாதிப்புகள் முழுக்க, பலஸ்தீன மக்களால் உணரப்பட்டன. பல குடியிருப்புகள், பாடசாலைகள், மசூதிகள், இஸ்ரேலியக் குண்டு வீச்சால் தாக்கப்பட்டன. குழந்தைகள் பலர் உயிரிழந்தார்கள்.

காஸாவில் நடைபெற்று வந்த போர், கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துவிட்டது. இதன்போது இஸ்ரேல் தரப்பில் 64 இராணுவ வீரர்கள், 3 சிவிலியன்களும்,

ஹமாஸ் தரப்பில் 300 வீரர்கள், 1,600 சிவிலியன்களும் உயிரிழந்துள்ளனர்.

இப்போது இரு தரப்பும் 3 நாள் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளன. அத்துடன் எகிப்தின் அனுசரணையில் அமைதிப் பேச்சு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் போர் நிறுத்தம் தொடர வேண்டும் என்று அமெரிக்கா கோரியுள்ளது.

போர் தொடக்கத்தில் ஹமாஸிடம் 10,000 ரொக்கெட்டுகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டது. இதில் 3,000 ரொக்கெட்டுகள் இஸ்ரேல் மீது ஏவப்பட்டன. அதில் வெறும் 3 வீதம் மட்டுமே இஸ்ரேலின் இரும்பு டோமைத் தாண்டி இஸ்ரேல் உள்ளே விழுந்தன. 97 வீத ரொக்கெட்டுகள் இரும்பு டோமால் தடுக்கப்பட்டன.

மீதம் இருந்தவற்றில் 3,000 ரொக்கெட்டுகள், இஸ்ரேலிய இராணுவ எதிர்த் தாக்குதலில் அழிக்கப்பட்டன. ஹமாஸிடம் இன்னும் 3,000 ரொக்கெட்டுகள், உள்ளதாக மதிப்பிடப்படுகிறது.

2006 இல் லெபனானின் ஹிஸ்புல்லா செய்தது போல், முழு இஸ்ரேலையும் ரொக்கெட் தாக்குதலில் முடக்க வேண்டும் என ஹமாஸ் நினைத்தது.

2006 க்கு பின் 100 மில்லியன் டொலர் செலவில் இஸ்ரேலிய இராணுவத்துக்குத் தெரியாமல் 30 சுரங்கங்களை ஹமாஸ் வெட்டி இருந்தது. இதன் வழியே இஸ்ரேலிய நகரங்களில் நுழைந்து தாக்குதல் நடத்தி இஸ்ரேலிய இராணுவ வீரர்களைப் பிணைக் கைதிகளாகப் பிடிக்கவேண்டும். இஸ்ரேலிய நகரங்களில் நேரடியாக படை மூலம் தாக்க வேண்டும் என அது திட்டம் தீட்டியது.

இந்தப் பக்கம், ஹமாஸ் தாக்குதல் நடத்த, மறுபக்கம் லெபனானில் இருந்து ஹிஸ் புல்லா தாக்குதல் நடத்த வேண்டும், ஊடகங்கள், போராட்டங்கள் மூலம் மேலை நாடுகளில் வலுத்த பரப்புரை செய்வது என்று ஹமாஸ் தனது திட்டங்களை அடுக்கிக்கொண்டே போனது.

ஹமாஸ் அனுப்பிய ரொக்கெட்டுகளை இஸ்ரேலின் இரும்பு டோம் முழுமையாகத் தடுத்து முறியடித்தது.

ஹமாஸின் சுரங்கங்களை இஸ்ரேல் துல்லியமாகக் கணக்கெடுத்து வைத்திருந்தது. கடும் ரொக்கெட் தாக்குதலை மீறி, ஹமாஸால் சுரங்கங்கள் உள்ளே நுழைய முடியவில்லை. ஒரே ஒரு முறை தான் சுரங்கத்தின் வழி நுழைந்து இஸ்ரேலிய வீரர்கள் மூவரைக் கொல்ல முடிந்தது. பிணைக் கைதிகளைப் பிடிக்கும் முயற்சி வெற்றி அடையவில்லை. இறுதியில் 30 சுரங்கங்களும் முற்று, முழுக்க இஸ்ரேலால் குண்டு வைத்து அழிக்கப்பட்டன. பல சுரங்கங்கள் நாலைந்து மைல் நீளம் கொண்டவை. சுரங்கத்தை அழித்த பின்தான் காஸாவில் இருந்து இஸ்ரேலிய இராணுவம் வெளியேறும் என இஸ்ரேலிய அதிபர் பீபி நெத்தன்யாகு அறிவித்திருந்தார். இப்போது 30 சுரங்கங்களும் அழிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதனை அடுத்து இஸ்ரேலிய இராணுவமும் வெளியேறியது.

2006 இல் ஹிஸ்புல்லாவிடம் இஸ்ரேல் தோல்வி அடைந்திருந்தாலும், லெபனான் நகரங்கள் இஸ்ரேலிய குண்டு வீச்சில் தரைமட்டமாகி இருந்தன. அதனால் மீண்டும் தாக்குதலில் நுழைய, ஹிஸ்புல்லா விரும்பாமல் ஒதுங்கிவிட்டது.

பலஸ்தீன ஆதரவுப் போராட்டங்கள், உலகளாவிய முறையில் வலுவாக நடந்தன. ஆனால் இஸ்ரேலிய தரப்பும் அதைச் சரியாக எதிர்கொண்டது. வழக்கமாகப் பலஸ்தீனத்துக்கு ஆதரவு கொடுக்கும் நாடுகள், அமைப்புகள் இந்தமுறையும் ஆதரவு கொடுத்தன. இஸ்ரேலுக்கு ஆதரவு அளிக்கும் அமெரிக்கா, உறுதியாக இஸ்ரேல் பக்கம் நின்றது. ஒபாமா, இஸ்ரேலுக்கு எதிராகக் கருத்துச் சொல்லியிருந்தாலும், இறுதி யில் இஸ்ரேலிய இரும்பு டோமைப் பலப்படுத்த 300 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கினார். இந்தப் பிரேரணை அமெரிக்க காங்கிரஸில் விவாதத்துக்கு வந்தபோது செனட்டில் 100 - 0 என்ற விகிதத்திலும், காங்கிரஸில் [illegible]4 - 8 என்ற விகிதத்திலும் நிறைவேறியது.

இந்தியாவிலும் பிரிட்டனிலும் பலஸ்தீன ஆதரவு காங்கிரஸ், தொழிற் கட்சிகள் ஆட்சியில் இல்லாமல் இஸ்ரேலுடன் நல்லுறவு பூணும் பா.ஜ.க, கொன்சர்வேட்டிவ் கட்சிகள் ஆட்சியில் இருந்தன. அதனால் இந்தியப் நாடாளுமன்றத்தில் பலஸ்தீன விவகாரம் விவாதிக்கப்படாமல் தடுக்கப்பட்டது. பிரிட்டிஷ் கொன்சர்வேடிவ் கட்சியின் இஸ்ரேலிய ஆதரவைக் கண்டித்து, பிரிட்டிஷ் நாடாளுமன்ற பிரதிநிதி ஒருவர் பதவி விலகினார்.

அரபு வசந்தம், ஐ.சி.ஐ.எஸ். பீதியால் அரபு நாடுகள் பலவும் ஹமாஸுக்கு ஆதரவு கொடுக்காமல் ஒதுங்கின. இறுதியில் சமாதானப் பேச்சு நடந்தபோது, ஹமாஸின் எதிரியான பலஸ்தீன பதா அமைப்பின் தலைவர் முகமது அப்பாஸ் தலைமையில் ஒரே ஒரு ஹமாஸ் பிரதிநிதியைப் பேச்சு நடத்த, எகிப்துக்கு அனுப்பும் நிலை ஹமாஸுக்கு உருவானது.

மொத்தத்தில் போர்க்கள ரீதியில் இஸ்ரேலுக்கு வெற்றியைக் கொடுத்த இந்தப் போரின் பாதிப்புகள் முழுக்க, பலஸ்தீன மக்களால் உணரப்பட்டன. பல குடியிருப்புகள், பாடசாலைகள், மசூதிகள், இஸ்ரேலியக் குண்டுவீச்சால் தாக்கப்பட்டன. குழந்தைகள் பலர் உயிரிழந்தார்கள்.

இஸ்ரேலியத் தரப்பில் இரும்பு டோமால் போரின் விளைவுகள் மக்களைத் தாக்கவில்லை. போரை அவர்கள் தொலைக் காட்சியில் மட்டுமே பார்த்தார்கள்.

இப்போதைய போர் நிறுத்தத்தால் மகிழ்ச்சியடைபவர்கள் பலஸ்தீனர்கள்தான்.

காஸா பகுதியின் அடிப்படைக் கட்டமைப்புகள் சிதைக்கப்பட்டதால் மக்கள் அவதிக்குள்ளான சோகத்துக்கு நிவாரணம், எகிப்தில் நடைபெறும் பேச்சில் தீர்க்கப்படுமா என்பது கேள்விக் குறிதான்.

எந்தப் போரிலும் இறுதியாகத் தோற்பவர்கள் மக்கள் மட்டுமே.

இன்று வரலக்ஷ்மி விரதம் அனுஷ்டிக்கப்படுவதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.



# சௌபாக்கியங்களை அள்ளி வழங்கும் வரலக்ஷ்மி விரதம்

இ.நிஷாந்தன்

சனாதன தர்மம் எனச் சிறப்பிக்கப்படுகின்ற இந்து மதத்தினிலே இந்து மக்கள் கடைப்பிடிக்கின்ற விரத தினங்களில் அதி உன்னதமான விரதமாகக் கருதப்படுவது வரலக்ஷ்மி விரதமாகும். மகாலக்ஷ்மியின் திருவருள் பெற வேண்டி அனுஷ்டிக்கும் இந்த விரதம் ஆவணி மாதத்து பௌர்ணமிக்கு முன் வரும் வெள்ளிக்கிழமையன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. தன் அடியவர் வேண்டும் வரங்களை அளிப்பதனால் வரலக்ஷ்மி எனும் நாமம் பெறுகின்றாள் திருமகள்.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைகின்றபோது அதில் இருந்து செல்வ கலசத்துடன் தோன்றியவள் மகாலக்ஷ்மி. அவ்வாறு மகாலக்ஷ்மி தோன்றிய தினம் இன்றைய தினமேயாகும். மகாவிஷ்ணுவினுடைய இதயக் கமலத்தில் வீற்றிருப்பவளாகிய லக்ஷ்மி தேவி 16 வகை செல்வங்களுக்கும் அதிபதியாகவும் முத்தேவிகளில் ஒரு தேவியாகவும் விளங்குகின்ற சிறப்பை பெறு கின்றாள். அது மட்டுமன்றி ஆதிலக்ஷ்மி, தனலக்ஷ்மி , தான்யலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி, கஜலக்ஷ்மி, தைரியலக்ஷ்மி, வித்யாலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி எனும் அஷ்ட லக்ஷ்மிகளாக இருந்து ஸ்ரீ தேவியானவள் சகல வளங்களையும் அருளுகின்றாள்.

ஆகவே லக்ஷ்மி தேவியின் அருள் பெற வேண்டி திருமணமான சுமங்கலிப் பெண்கள் மற்றும் திருமணமாகாத கன்னிப் பெண்கள் ஆகியோர் இந்த விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்பது முறையாகும். முக்கியமாக பெண்களே இந்த விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். எனினும் ஆண்களும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கலாம். ஆண்கள் அனுஷ்டிக்கக் கூடாது என இந்த விரத விதிகளில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. இந்த விரதமானது பெரும்பாலும் விஷ்ணு ஆலயங்களில் சிறப்பாக அனுஷ்டிக்கப்படும். எனவே இந்த விரதத்தை ஆலயத்துக்குச் சென்று அனுஷ்டிப்பது சிறப்பு. அவ்வாறு ஆலயம் சென்று விரதம் அனுஷ்டிக்க முடியாதவர்கள் தம் வீடுகளில் இந்த விரதத்தை உரிய முறைப்படி அனுஷ்டிக்கலாம்.

வரலக்ஷ்மி விரதத்தின் சிறப்பை பல புராணக் கதைகள் கூறியிருக்கின்றன. அவற்றில் ஒரு கதையே இதுவாகும். பத்ரசரவஸ் எனும் மன்னன் சிறந்த விஷ்ணு பக்தனாவான். அவனுடைய மனைவி சுரந்திரிகா. இவர்களுக்கு சியாமபாமா எனும் ஒரு மகள் இருந்தாள். தம் மகள் திருமண வயதை அடைந்ததும் ஒரு சக்கரவர்த்திக்கு திருமணம் முடித்து வைத்தனர். ஒரு முறை மகாலக்ஷ்மியான வள் வரலக்ஷ்மி விரத மகிமையை கூற விரும்பி தானே ஒரு மூதாட்டியின் வடிவில் சுரசந்திரிகாவின் அரண்மனைக்கு வந்து அவளிடம் வரலக்ஷ்மி விரத சிறப்பையும் அதனால் கிடைக்கும் நன்மைகளையும் கூறி அந்த விரதத்தை அனுஷ்டிக்கும்படி வேண்டினாள்.

ஆனால் அரசியானவளோ வந்திருப்பது மகாலக்ஷ்மி என்பதை அறியாது, அவளை சாதாரண மூதாட்டியே எனக் கருதி அவள் கூறியதைக் கேளாது அவமானப்படுத்தி விரட்டினாள். மகாலக்ஷ்மி ஓர் இடத்துக்கு வருவது சாதாரண காரியமல்ல. உடனே மூதாட்டி வடிவில் வந்த லக்ஷ்மி அந்த இடம் விட்டு நீங்கினாள். அதனால் அரண்மனையின் சகல செல்வ வளங்களும் நீங்கிவிட்டது. அந்த இடம் விட்டு விலகிய மகாலக்ஷ்மி சுரசந்திரிகாவின் மகள் சியாமபாமாவின் இடத்துக்குச் சென்றாள். அவளிடமும் இந்த விரதத்தைப் பற்றிக் கூறினாள். அவளும் அந்த மூதாட்டியான லக்ஷ்மி கூறிய வரலக்ஷ்மி விரத விதிகளை உரிய முறைப்படி கேட்டு அந்த விரதத்தைக் கடைப்பிடித்தாள். அதன் விளைவாக அவளுடைய இல்லத்தில் சகல செல்வ வளங்களும் நிறைந்தன. ஆனால் அவளது பெற்றோர் அரண்மனையில் செல்வமனைத்தும் இழந்து வறுமையில் வாடினர். இதனை அறிந்த மகள் சியாமபாமா தன் தாயிடம் சென்று வீடு தேடி வந்த லக்ஷ்மியை அவமானப்படுத்தியமையாலேயே தமக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறி வரலக்ஷ்மி விரத சிறப்புக்களை தாய்க்கு எடுத்துக் கூறினாள். அதனைக் கேட்ட சுரசந்திரிகா மகாலக்ஷ்மியை மனமுருகி வேண்டி வரலக்ஷ்மி விரதத்தை முறைப்படி அனுஷ்டித்தாள். அதன் பயன், மகாலக்ஷ்மியின் கருணையால் இழந்த செல்வங்கள் அனைத்தும் கிடைக்கப் பெற்று அவள் கணவனும் ஒரு குறையுமின்றி நீண்ட காலம் ஆட்சி செய்தான் என விஷ்ணு புராணம் இந்த விரத மகிமை பற்றிக் கூறுகின்றது. எனவே திருமகளே நேரில் வந்து உபதேசித்த விரதமாக இந்த வரலக்ஷ்மி விரதம் சிறப்பு பெறுகின்றது.

எனவே இந்த விரதத்தை வீடுகளில் அனுஷ்டிப்பவர்கள், விரதத்துக்குரிய ஏற்பாடுகளை விரதத்துக்கு முதல்நாள் நிறைவேற்றி விரத நாளன்று அதிகாலையில் நீராடி வீட்டுவாசலில் அழகிய மாக்கோலம் போட்டு பூசையறையில் உள்ள மகாலக்ஷ்மிக்கு திருநீறு, குங்குமம் இட்டு, பூ, பூமாலைகள் என்பவற்றை சாற்றிக் கொள்ள வேண்டும். பின் பொங்கல், உழுத்தம் வடை, பால், சுண்டல், மோதகம், அன்னம் மற்றும் பழவகைகள் போன்ற நைவேத்தியங்கள் படையல் செய்து கொள்ளலாம். அதன் பின் மகாலக்ஷ்மிக்கு முன்பாக வாழை இலையில் நெல் அல்லது பச்சரிசியை பரப்பி அதில் கலசம்(கும்பம்) வைத்து அதனுள் மகாலக்ஷ்மியை ஆலாபனம் செய்து திரு விளக்கு ஏற்றி மகாலக்ஷ்மியின் நாமங்களைக் கூறி மலர்களால் அர்ச்சித்து மகாலக்ஷ்மி பூசையை செய்ய வேண்டும். பின் மகாலக்ஷ்மியின் அஸ்டகம், மகாலக்ஷ்மி அஸ்ரோத்திரம், மகாலக்ஷ்மி பாடல்கள் என்பவற்றைப் பாடி நோன்புக் காப்பை அணிந்து கொள்ளலாம்.

இவ்வாறு இந்த விரதத்தை அனுஷ்டிப்பதனால் பல நன்மைகள் கிடைக்கப் பெறுகின்றன. அந்த வகையில் திருமணமாகாத பெண்களுக்கு விரைவில் திருமணம் நிறைவேறும். கன்னிப் பெண்களுக்கு அவர்கள் விருப்பப்படி நல்ல வாழ்க்கைத்துணை வந்தமையும். திருமணமான பெண்களது மாங்கல்ய தோசங்கள் நீங்கி கணவனுடைய ஆயுளும் நலனும் பெருகி மாங்கல்ய பாக்கியம் நிலைத்திருக்கும். குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் உண்டாகும். நிறைவேறாத விருப்பங்கள் விரைவில் நிறைவேறும். இல்லங்களில் ஒற்றுமை நிலவி சகல செல்வங்களும் பெருகும்.

ஆகவே இத்தகைய நன்மைகளை அருளும் இந்த உயரிய வரலக்ஷ்மி விரதத்தை திருமணமான பெண்கள் மற்றும் கன்னிப்பெண்கள் என அனைவரும் உரிய முறையில் அனுஷ்டித்து பாற்கடல் அலைமேலே துயிலும் விஷ்ணுவினது இதயத் தாமரையில் வீற்றிருக்கும் ஸ்ரீ தேவியாம் மகாலக்ஷ்மியின் திருவருள் கருணை பெற்று வாழ்வில் சகல செல்வ வளங்களையும் நன்மைகளையும் பெற்று நல் வாழ்வு வாழ்வோமாக.



---

நாளை ஆதிவாசிகளின் தினமாகும். இதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.

# ஆதிவாசிகளைக் கொண்டாடுவோம்

பீ.ஏ.அந்தோனிமார்க்

பல ஆயிரக்கணக்கான ஆதிவாசிகள் உலகமெங்கும் உள்ள அடர்ந்த காடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். இலங்கையைப் பொறுத்த வரையில் பதுளை, மொனராகலை, அம்பாறை, பொலநறுவை, மாத்தறை , மட்டக்களப்பு ஆகிய ஆறு மாவட்டங்களில் உள்ள ஏறத்தாழ 60 கிராமங்களை உள்ளடக்கிய காடுகளில் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட ஆதிவாசிகள் வசிப்பதாக ஆதிவாசிகள் தொடர்பான பேச்சாளர் விமலரத்தின தெரிவித்துள்ளார். இலங்கை அரசினால் அமைக்கப்பட்டுள்ள துரித மகாவலி நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம், இங்கினியகல நீர்ப்பாசன ஆற்றுத் திட்ட ஒதுக்கீட்டுத் திட்டம், வன ஜீவராசிகளுக்கான ஒதுக்கீட்டுத் திட்டம், நெடுஞ்சாலைகளுக்கான காணி ஒதுக்கீட்டுத் திட்டம் என இப்படியான பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு காடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இன்று இலங்கையில் 29 வீதமான காடுகளே உள்ளன. இவை பெருங்காடு, பச்சிலைக்காடு, பற்றைக் காடுகள் எனப் பல வகைகள் உண்டு. இந்தக் காடுகளில் மிருகங்கள், பறவைகள், ஊர்வன ஆகியவற்றுடன் ஆதிவாசிகளும் குடியிருந்து வருகிறார்கள்.

இலங்கையிலுள்ள காடுகளில் எவரும் வாழ முடியாது என சட்டம் ஒன்று கொண்டுவரப் பட்டுள்ளது. இதனால் ஆதிவாசிகளும் வேடர்களும் இந்தக் காடுகளை விட்டு வெளியேறி அயலில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்கள் தமது பூர்வீக இடங்களில் குடியேறி வாழ்க்கையை நடத்த வேண்டுமென்று பல விண்ணப்பங்களை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளனர். உலகின் பல நாடுகளிலும் காணப்படும் ஆதிவாசிகள் காடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் வாழ்க்கை முறையைக் கவனத்தில் கொண்ட ஐக்கிய நாடுகள் சபை இவர்களை பற்றிச் சற்று சிந்திக்கும் தினமாக ஒகஸ்ட் மாதம் 9ஆம் திகதியைப் பிரகடனப்படுத்தியுள்ளது. ஐ.நா.சபையானது, வன இலாகாவுடன் இணைந்து தற்போது காடு அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதன் ஓர் அம்சமாக ஆதிவாசிகளைப் பாதுகாத்தல் என்னும் செயற்றிட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்காவிலும், அமேசன் நதி பாயும் காடுகளிலும் பெரும்தொகையான ஆதிவாசிகள் வாழ்ந்து வருகிறார்கள். இந்தக் காடு சார்ந்த உரிமைகளுக்காகவும், நில உரிமைகளுக்காகவும் இந்த ஆதிவாசிகள் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

இந்தியாவைப் பொறுத்த வரையில் அண்மையில் ஒரு லட்சம் ஆதிவாசிகளை காணவில்லை என ஒரு செய்தி வெளியாகி உள்ளது. மனித இனம் பணத்துக்காக காடு அழித்தல், மரம் வெட்டுதல், மிருகங்களை வேட்டையாடுதல், தேன் எடுத்தல் போன்றனவற்றுக்காக காடுகளினுள் நுழையும் போது இயற்கை அழிக்கப்படுவதுடன் மட்டு மல்லாமல் அந்த இயற்கையே தமது வாழ்க்கையாகக் கொண்டுள்ள பழம்குடி மக்களும் அழிக்கப்படுகிறார்கள். ஆதிவாசிகள் பழங்குடியினர் சார்ந்த பிரச்சினைகள் 2000ஆம் ஆண்டுக்கு முன்னர் வரை பெரிதாக வெளியே தெரிய வரவில்லை. அதன் பின்னர் தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள் காரணமாகவும், அதன் வெளிப்படையான விளைவாகவும் நில அபகரிப்பு நிலப் பயன்பாட்டை மாற்றுதல், பழம் குடிமக்களின் வாழ்விடங்களை ஆக்கிரமித்தல் போன்றன நடைபெற்று வருகின்றன.

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தாண்டேவாடா காட்டுப் பகுதியில் சுமார் 1,300 கிராமங்கள் இருந்தன. அதில் 644 கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அங்கிருந்த இரண்டரை லட்சம் மக்களில் 50 ஆயிரம் பேர் அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் 50 ஆயிரம் பேர் ஆந்திரா, மகாராஷ்டிரா போன்ற பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளார்கள்.

இன்னும் ஒரு லட்சம் ஆதிவாசிகளுக்கு என்ன நடந்தது, எங்கே போனார்கள் என்பது தொடர்பாக யாருக்கும் தெரியாது. ஆனால் தற்போது பழங்குடியினர் வீதிக்கு இறங்கி தங்களின் உரிமைக்காகப் போராட்டம் நடத்த ஆரம் பித்துள்ளார்கள்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: சில நேரங்களில் வெறுப்பாகப் பேசுவீர்கள். அடுத்தவர்களைக் குறை கூறுவதை நிறுத்துங்கள். விமர்சனங்களைக் கண்டு அஞ்ச வேண்டாம். சிறுசிறு அவமானங்கள் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் இரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**இடபம்**: பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்திலுள்ளவர்களிடம் மனம் விட்டுப்பேசுவீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மிதுனம்**: தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**கடகம்**: மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். உறவினர்களால் மன நிம்மதி கிடைக்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். அரசுக் காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிங்கம்**: சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**கன்னி**: நட்பு வட்டாரம் விரிவடையும். உறவினர்களின் வருகையுண்டு. பணவரவு திருப்தியைத் தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

**துலாம்**: சில தினங்களாகத் தடைப்பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.

**விருச்சிகம்**: சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக்கொண்டிருக்காதீர்கள். குடும்பத்தினரைப் பற்றி யாரிடமும் குறைவாகப் பேச வேண்டாம். மற்றவர்கள் விடயத்தில் அநாவசியமாக தலையிட வேண்டாம்.

**தனுசு**: மறைமுக விமர்சனங்களும், தாழ்வுமனப்பான்மையும் வந்து செல்லும். மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டாம். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். உத்தியோகத்தில் அலைச்சலுடன் ஆதாயம் உண்டாகும்.

**மகரம்**: வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கும்பம்**: திட்டமிட்ட காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதரவகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**மீனம்**: எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். வெளியிடங்களில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

## நாளை

**ஆடி-24 சனிக்கிழமை | 09.08.2014**

திதி: சதுர்த்தசி பி.இ.03.17 வரை
நட்சத்திரம்: உத்தராடம் - பி.இ.01.59 வரை

சுபநேரம்: 03.04-04.34 வரை
இராகுகாலம்: 09.04-10.34 வரை
பட்டினத்தடிகள் குருபூஜை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### தூயவனாக இரு

செய்பவை அனைத்தையும் வேள்வியாக, இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய். இந்த உலகில் வாழும் நீ, உலக இயல்புகளுடன் உன்னைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளாதே. தாமரையின் வேர்கள் சேற்றில் புதைந்திருப்பினும், தாமரையிலை எப்போதும் தூய்மையாகவே இருக்கிறது. அதே போல நீயும் தூயவனாக இரு. பிறர் உனக்கு என்ன செய்தாலும் அதைக் கருத்தில் கொள்ளாமல் அவர்களிடம் அன்போடு நடந்துகொள்.

குருடனால் எந்த நிறத்தையும் பார்க்க முடியாது. நம்மிடம் தீமை இல்லாமல் எப்படிப் பிறரிடம் தீமையைக் காண முடியும்? நமது உள்ளத்தில் இருப்பவற்றுடன் புறத்தில் காண்பதை ஒப்பு நோக்கி அதற்கு ஏற்ப நாம் முடிவுக்கு வருகிறோம். நாம் தூயவர்களாக இருந்தால் தூய்மையின்மையை நம்மால் காண முடியாது. தூய்மையின்மை இருக்கலாம், ஆயினும் அது நம் கண்ணுக்குத் தெரியாது. ஒவ்வோர் ஆணிலும் பெண்ணிலும் குழந்தையிலும் இறைவன் இருப்பதையே பார், அதனை உள்ளொளியால் பார். அப்படிப் பார்த்தால், இறைவனைத் தவிர வேறு எதையும் நாம் காண மாட்டோம்.

இந்த உலகத்தை விரும்பாதே; ஏனெனில், எதை நீ விரும்புகிறாயோ அது உனக்குக் கிடைக்கும். இறைவனை மட்டுமே நாடு. ஆற்றல் அதிகரிக்க அதிகரிக்க பந்தமும் அச்சமுமே அதிகரிக்கிறது. ஓர் எறும்பை விட எவ்வளவு அதிக அச்சத்தையும் துயரத்தையும் அனுபவிப்பவர்களாக இருக்கிறோம் நாம்! இவற்றிலிருந்து விடுபட்டு, இறைவனை அணுகுங்கள். படைத்தவனைப் பற்றிய சாஸ்திரத்தை நாடு; படைப்பைப் பற்றிய சாஸ்திரத்தில் சிந்தையைச் செலுத்தாதே.

## மீன் கூட புகைப்பிடிக்குமா?



பிரிட்டனில் மீன் ஒன்று தண்ணீரிலிருந்து வெளியே வந்து புகைப்பிடிப்பது போல் வெளியான காணொலி சர்ச்சையை கிளப்பியுள்ளது.

யூடியூப் மற்றும் லைவ் லீக் போன்ற காணொலி வலைத்தளங்களில் மீன் ஒன்று புகைப்பிடிப்பது போல் பதிவேற்றம் செய்யப்பட்ட காணொலிக்கு விலங்கு பிரியர்கள் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

வெப்பமண்டல வகையைச் சேர்ந்ததாகக் கூறப்படும் இந்த மீன், பலகை மீது அமர்ந்து கொண்டு வாயில் சிகரெட் வைத்து புகைப்பிடித்துள்ளது. மேலும், இந்த காணொலியை பார்த்த அனைவரும் அதிர்ச்சியில் உறைந்ததுடன், சிலரால் தவறான கருத்துகள் பகிரப்பட்டு வருவதாக குற்றஞ் சாட்டியுள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | | | 8 | | 1 |
| 2 | 4 | 3 | 1 | | | | | 6 |
| 8 | | 1 | | 3 | | 5 | 2 | |
| | | | 9 | | | 6 | 8 | 3 |
| | 6 | | | | | | 7 | |
| 3 | 2 | 8 | | | 6 | | | |
| | 8 | 5 | | 9 | | 3 | | 7 |
| 7 | | | | | 5 | 2 | 1 | 9 |
| 6 | | 2 | | | 1 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 2 | 6 | 1 | 9 | 4 | 3 | 8 |
| 9 | 6 | 8 | 3 | 4 | 7 | 2 | 5 | 1 |
| 1 | 3 | 4 | 2 | 8 | 5 | 6 | 9 | 7 |
| 5 | 7 | 9 | 4 | 2 | 8 | 1 | 6 | 3 |
| 2 | 4 | 1 | 5 | 6 | 3 | 8 | 7 | 9 |
| 3 | 8 | 6 | 9 | 7 | 1 | 5 | 2 | 4 |
| 4 | 2 | 7 | 1 | 9 | 6 | 3 | 8 | 5 |
| 6 | 9 | 5 | 8 | 3 | 4 | 7 | 1 | 2 |
| 8 | 1 | 3 | 7 | 5 | 2 | 9 | 4 | 6 |

## இன்றைய ஆட்டங்கள்



கரணவாய், ஓக.8

தும்பளை நற்கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

பி.ப. 3.30 மணிக்கு கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் கரவைச் சுடர் விளையாட்டுக்கழகம்.

பி.ப.4.30 மணிக்கு மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம். (த-108)

# பல்கலைக்கழக அணிகள் மோதும் உதைபந்தாட்டம் இன்று ஆரம்பம்

## இரு மைதானங்களில் ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஓக 08

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களுக்கிடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் காலை 7 மணிக்கு வயம்ப பல்கலைக் கழக அணியை எதிர்த்து ரஜரட்டை பல்கலைக்கழக அணியும், காலை 8.15 மணிக்கு கிழக்குப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து களனிப் பல்கலைக்கழக அணியும், முற்பகல் 9.30 மணிக்கு பேராதனை பல்கலைக்கழகத்தை எதிர்த்து ஊவா பல்கலைக்கழகஅணியும், பிற்பகல் 2 மணிக்கு வயம்ப பல்கலைக் கழகஅணியைஎதிர்த்து களனிப் பல்கலைக்கழக அணியும், பிற்பகல் 3.15 மணிக்கு கிழக்குப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து ரஜரட்டை பல் கலைக்கழக அணியும், மாலை 4.30 மணிக்கு மொறட்டுவ பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஊவா பல்கலைக் கழக அணியும் மோதவுள் ளன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் காலை 7 மணிக்கு தென்கிழக்கு பல்கலைக்கழகஅணியைஎதிர்த்து சப்ரகமுவ பல்கலைக்கழக அணியும், காலை 8.15 மணிக்குக் கொழும்பு பல் கலைக் கழக அணியை எதிர்த்து கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக அணியும், முற்பகல் 9.30 மணிக்கு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக அணியை எதிர்த்து ருகுணு பல்கலைக்கழக அணியும், பிற்பகல் 2 மணிக்கு தென்கிழக்குப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக அணியும், பிற்பகல் 3.15 மணிக்கு கொழும்பு பல்கலைக்கழக அணியை எதிர்த்து சப்ரகமுவ பல்கலைக்கழக அணியும், மாலை 4.30 மணிக்கு யாழ்ப் பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து ருகுணு பல்கலைக்கழக அணியும் மோதவுள்ளன.

சுற்றுத்தொடரின் ஆரம்ப நிகழ்வுகள் இன்று காலை 7.00 மணிக்கு நடபெறவுள்ளது. யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் போட்டிகளுக்கான ஆரம்ப நிகழ்வுக்கு யாழ்.பல்கலைக் கழக புவியியற்துறைப் பேராசிரியர் எ.சூசையானந்தனும், யாழ்ப்பாணக்கல்லூரியில் நடைபெறும் போட்டிகளுக்கான ஆரம்ப நிகழ்வுக்கு கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் பி.எஸ்.மோகனக்குமாரும் பிரதம விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமையன்று பி.ப. 4.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் இறுதிப் போட்டிக்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் தலைவரும் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதியுமான பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் வண. கலாநிதி. டீ.எஸ்.சொலமன் கலந்துகொள்ளவுள்ளார். (த)

# திக்கம் இளைஞர், நவஜீவன்ஸ் அபார ஆட்டங்களில் வெற்றி

கரணவாய், ஓக.8

விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்றன.

தும்பளை நற்கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் ஆதரவுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும், மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஆட்டம் ஆரம்பமாகி 6ஆவது நிமிடத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக வீரர் துள்ளு மிகவும் அருமையான கோல் ஒன்றைப் போட்டார். இதனை அடுத்து தன்னைச் சுதாகரித்துக் கொண்ட ஞான முருகன் அணியினர் கோல் போடுவதற்கு கடுமையாகப் போராடினர். ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரன் லஸ்ரின் கோல் ஒன்றைப் போட்டு கோல்களின் எண்ணிக்கையைச் சமப்படுத்த 1:1 என்ற கோல்கள் அடிப்படையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் மேலும் சூடு பிடித்த போதும் திக்கம் இளைஞர் அணிவீரர் துள்ளு மீண்டும் ஒரு கோலைப் போட்டு அசத்தினார். தொடர்ந்து இரு அணி வீரர்களும் கோல் எதனையும் போடாத நிலையில் 2:1 என்ற கோல்கள் அடிப்படையில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினர் வெற்றி பெற்றுள்ளனர்.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் கரவைச் சுடர் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் நவஜீவன்ஸ் அணி 6:2 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றது. இதில் நவஜீவன்ஸ் அணி சார்பாக பசீலன் 2 கோல்களையும், உஷானந் 2 கோல்களையும், சுரேஸ், பொபிநாதன் ஆகியோர் தலா ஒருகோலையும் போட்டனர். கரவைச் சுடர் சார்பாக இராசன், விஜி ஆகியோர் தலா ஒரு கோலையும் போட்டனர். (த-108)

# அச்சுவேலி கதிரொளி கிரிக்கெட்டில் வெற்றி



யாழ்ப்பாணம், ஓக .8

அமரர் சுப்பிரமணியம் தற்பரன் 31 ஆவது நாள் நினைவையொட்டி நடத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டியில் அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியனாகியது.

இறுதியாட்டத்தில் அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

அதில் கதிரொளி விளையாட்டுக் கழகம் 31 ஓட்டங்களால் வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வென்ற அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி 15 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 190 ஓட்டங்களைக் குவித்தது.

அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக்கழக அணி சார்பில் மதுஷாந் 67, துஷி 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் சார்பில் விதுஷன் மற்றும் திவா தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 191 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் 14.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 157 ஓட்டங்களையே பெற்றுக் கொண்டது.

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழக அணி சார்பில் விதுஷன் 49, டிலக் ஷன் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக் கழக அணி சார்பில் டவாத் 3 இலக்குகளையும் சாள்ஸ் மற்றும் ஜனகன் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதன்படி இப் போட்டியில் அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று அமரர் சுப்பிரமணியம் தற்பரனின் 31 ஆவது நாள் நினைவையொட்டி நடத்தப்பட்ட துடுப்பாட்ட போட்டியில் சம்பியனாகியது.

இதில் தொடர்நாயகன் விருதையும் அதிகூடிய ஓட்டத்தை பெற்றவருக்கான விருதையும் நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக்கழக வீரன் விதுசன் பெற்றுக்கொண்டார். இறுதியாட்டத்தின் ஆட்டநாயகனாக கதிரொளி விளையாட்டுக் கழக வீரன் மது தெரிவு செய்யப்பட்டார். (த)

# வலுவான நிலையில் பாகிஸ்தான்



பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது டெஸ்டின் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது இலங்கை அணி ஒரு இலக்கை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முதல்நாள் ஆட்ட நேர முடிவின் போது 4 இலக்குகளை இழந்து 261 ஓட்டங்களைப் பெற்றிருந்த பாகிஸ்தான் அணி நேற்று இரண்டாம் நாள் ஆட்டத்தில் சகல இலக்குகளையும் இழந்து 451 ஓட்டங்களைக் குவித்தது. பொறுமையுடன் சிறப்பாக ஆடிய யுனிஸ்கான் ஒரு சிக்ஸர், 15பவுண்டரிகள் உட்பட 177 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். அசாத் சபீக் 75 ஓட்டங்களையும், சர்பிரஷ் அகமட் 55 ஓட்டங்களையும், அப்துர் ரெஹ்மான் 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக தில்ருவான் பெரேரா 5 இலக்குகளையும், ரங்கண ஹேரத் 3 இலக்குகளையும், தம்மிக்க பிரசாத் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 24 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது முதலாவது இலக்குக்காக ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான உப்புல் தரங்கவை 19 ஓட்டங்களுடன் இழந்தது. பின்னர் களம்புகுந்த சங்கக்கார, கௌசல் சில்வாவுடன் இணைந்து நிதானத்துடன் ஆடினார். நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது இலங்கை அணி ஒரு இலக்கினை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கௌசல் சில்வா 38 ஓட்டங்களுடனும், சங்கக்கார 36 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர். வீழ்த்தப்பட்ட ஒரு இலக்கை யுனைட் கான் கைப்பற்றியிருந்தார்.



# சச்சின் சுயநலவாதியா?

சச்சினை சுயநலவாதி என்று அழைப்பது நியாயமற்றது என இந்திய அணியின் முன்னாள் வீரர் டிராவிட் கூறியுள்ளார்.

முன்னாள் ஜாம்பவான் சச்சின் கிரிக்கெட் அரங்கத்தில் இருந்து ஓய்வு பெற்று விட்டாலும் ரசிகர்கள் மனதில் நீங்காத இடம்பெற்றுள்ளார். இவர் கிரிக்கெட் வரலாற்றில் எண்ணற்ற சாதனைகளை படைத் துள்ளார்.

மேலும் இவர் கடந்த 2003 உலகக் கிண்ண தொடரில், மொத்தம் 673 ஓட்டங்கள் குவித்தார். இதையடுத்து, ஓர் உலகக்கிண்ண தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த முதல் வீரர் என்ற பெருமை பெற்றார்.

கிரிக்கெட்டின் கடவுளாக பார்க்கப்படும் சச்சினை பலரும் அவர் சாதனைக்காக விளையாடும் சுயநலவாதி என்று விமர்சனம் செய்தனர். ஆனால் சச்சின் அதற்கு அவரது காலகட்டத்திலே பதிலடி கொடுத்தார்.

இது பற்றி இந்திய அணியின் முன்னாள் வீரரான டிராவிட் கூறுகையில், கிரிக்கெட்டின் ஜாம்பவானான சச்சினை சுயநலவாதி என்று கூறுவது கற்பனைக்கு எட்டாத ஒன்றாகும். இதில் எந்தவித நியாயமும் கிடையாது. அவரது ஒவ்வொரு ஓட்டமும் அணிக்காகவே இருந்தது. அவரது ஒவ்வொரு இன்னிங்சும் அணியின் நலனுக்காகவே இருந்ததை நிரூபித்து இருக்கிறார்.


**கிரிக்கெட்டின் ஜாம்பவானான சச்சினைச் சுயநலவாதி என்று கூறுவது கற்பனைக்கு எட்டாத ஒன்றாகும்.**

1998 2003 ஆண்டுகள் சச்சினின் பொற்காலமாக இருந்தது. இந்தக் காலத்தில் அவர் இந்திய மண்ணிலும், வெளிநாட்டு மண்ணிலும் ஓட்டங்களைக் குவித்தார்.

அனைவரையும் ஒப்பிடும் போது சச்சின் போட்டிக்கு வித்தியாசமாக தயார் ஆவார். கடந்த 2003 உலகக் கிண்ண தொடரில், பயிற்சி யின் போது ஒரு முறை கூட அவர் வலைப் பயிற்சியில் துடுப்பாட்டம் செய்யவே இல்லை. அதற்கு பதில் பந்துகளை எறிவது, பிடிப்பது போன்ற பயிற்சியில் மட்டும் ஈடுபட்டார். இவர் இப்படி வித்தியாசமாக இருந்தது இந்திய வீரர்கள் அனைவருக்கும் வியப்பாக இருந்தது. இத்தொடர் முழுவதும் இப்படித் தான் இருந்தார்.

நாங்கள் இது குறித்து சச்சினிடம் கேட்டபோது, எனது துடுப்பாட்டம் நன்றாக இருப்பதாக உணர்கிறேன். இதனால், வலைப்பயிற்சியில் துடுப்பாட்டம் செய்து நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. ஒருவேளை இதில் சந்தேகம் ஏற்பட்டால், போட்டிகளின் போது ஓட்டங்களைக் குவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.

கடைசியில் அவர் அந்தத் தொடர் முழுவதும் சிறப்பான ஓட்டங்கள் குவிப்பை வெளிப்படுத்தி அசத்தினார் .. இவரைப்பார்த்து வளர்ந்த இந்திய தலைமுறையினர், பெரும்பாலும் கிரிக்கெட் வீரராக வரவேண்டும் என்று விரும்பினர். கடந்த 24 ஆண்டுகளாக கிரிக்கெட் விளையாடிய இவர், இந்திய கிரிக்கெட்டின் அடிப்படையைத் தான் அப்படியே மாற்றிவிட்டார் என்று பெருமையோடு கூறியுள்ளார். (த)



## மீண்டும் பயிற்சிக்கு திரும்பினார் நெய்மர்

உலக கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் காயமடைந்த பிரேசிலின் நட்சத்திர வீரர் நெய்மர், மீண்டும் பயிற்சிக்குத் திரும்பியுள்ளார். பிரேசிலில் சமீபத்தில் உலகக் கிண்ண உதைந்தாட்டத் தொடர் நடந்தது. கொலம்பிய அணிக்கு எதிரான காலிறுதிப் போட்டியில் நெய்மருக்கு முதுகெலும் பில் முறிவு ஏற்பட்டது. இதனால் தொடரை விட்டு விலகினார். பார்சிலோனா அணிக்காக விளையாடும் இவருக்கு, மருத்துவ சோதனைகள் நடந்தன. இதில் தேறியதை அடுத்து மீண்டும் அணிக்கு நெய்மர் திரும்பியுள்ளார். தற்போது சக வீரர்க ளுடன் வழக்கமான முறையில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.

## இங்கு வந்தால் தம் அடிக்கலாம்

ஜெர்மி மத்யூ என்ற வீரரை லா லிகா அணி, எங்கள் அணிக்கு வந்தால் புகைப்பிடிக்கலாம் என்று கூறி 20 மில்லியன் பவுண்ட்ஸுக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

பொதுவாக உதைபந்தாட்ட வீரர்களுக்குப் புகைப்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கும். போட்டிகளில் நீண்ட நேரம் ஓட வேண்டி இருப்பதால் மூச்சுத் திணறாமல் இருக்க இத்தகைய தடை விதிக்கப்படும். இந்நிலையில் ஜெர்மி மத்யூக்கு புகைப்பிடிக்க அனுமதியளித்து லாலிகா அணி அவரை விளையாட ஒப்பந்தம் செய்துள்ளது.



இது பற்றி ஜெர்மி மத்யூ கூறுகையில், என்னது நான் புகைப்பிடிப்பேனா? இது ஒருவரின் தனிப்பட்ட உரிமை. இதையாரும் ஆட்சேபிக்க முடியாது.

நான் ஒன்றும் மற்றவர்கள் போல் ஒரு பைக்கற் முழுவதும் புகைக்க மாட்டேன். அதே போல் எல்லா நாள்களும் புகைப்பிடிக்க மாட்டேன். இதை ஒரு விடயமாகப் பேசத் தேவையில்லை என்று கூறியுள்ளார். இவர் மட்டுமல்ல சமீபத்தில் மரியோ பலோ டெல்லி கூட மறைமுகமாகப் புகைப்பிடிக்க முயற்சித்து மாட்டிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## தவறு என்றால் தட்டிக் கேட்பேன்

தவறு செய்தால் யாராக இருந்தாலும் நான் எதிராகத் தான் இருப்பேன் என்று அணித் தலைவர் டோனி கூறியுள்ளார்.



இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

நொட்டிங்ஹாமில் நடந்த முதலாவது டெஸ்டின் 2ஆவது நாள் உணவு இடைவேளையின்போது, இந்திய துடுப்பாட்டக் காரர் ரவீந்திர ஜடேஜாவுடன் வாக்குவாதம் செய்த இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் அவரை திட்டி, தள்ளிவிட்டு அநாகரீகமாக நடந்து கொண்டார்.

இந்தச் சம்பவம் குறித்து ஐ.சி.சி., ஆணையாளர் கோர்டன் லீவிஸ் விசாரித்தார். இதில், ஜடேஜாவை மிரட்டும் வகையில் பேசியது உண்மை தான் என அண்டர்சன் ஒப்புக் கொண்டார்.

இருப்பினும். இதற்கு போதிய ஆதாரம் இல்லாததால், இருவரையும் கோர்டன் லீவிஸ் விடுவித்தார். அண்டர்சனுக்கு தடை கிடைக்கும் என எதிர்பார்த்த நிலையில், இவர் விடுவிக்கப்பட்டது, அணித் தலைவர் டோனிக்குக் கோபத்தை ஏற்படுத்தியது.

இது பற்றி அணித் தலைவர் டோனி கூறுகையில்,

இந்தச் சம்பவத்தின் போது, ஒரு சில கடினமான வார்த்தைகள் பேசியிருக்கலாம். ஆனால், இதை நாங்கள் புகாரில் குறிப்பிடவே இல்லை.

அண்டர்சன், ஜடேஜாவைத் தள்ளி விட்டார் என்பது தான் முக்கிய குற்றச்சாட்டு. இதில் ஜடேஜாவுக்கு மட்டும் அபராதம் விதித்தனர். அப்போதே, இவர் மீது ஒரு சதவீதம் கூட தவறு இல்லை எனத் தெரிவித்தேன். கடைசியில் போதிய ஆதாரம் இல்லை என்று விடுவித்தது நல்ல விடயம்.

இதில்,போட்டி நடுவர் டேவிட் பூன் பார்வையில், ஜடேஜாவின் செயல் தவறாக பட்டதால், போட்டிச் சம்பளத் தொகையின் 50 சதவீதத்தை அபராதம் விதித்தார். இது ஐ.சி.சிக்குத் தெரியாதது சற்று வித்தியாசமாகத் தான் உள்ளது.

என்னைப் பொறுத்தவரையில் தவறு செய்தால், அது யாராக இருந்தாலும் எதிராகத்தான் இருப்பேன். எனது சக வீரர் எல்லை மீறாத நிலையில், அபராதம் விதிக்கப்பட்டால், எப்படியும் அவருக்கு ஆதரவாகத்தான் இருப்பேன்.எது சரி, எது தவறு என்று எனக்குத் தெரியும். ஜடேஜா விடயத்தில் சரி என்று பட்டதை செய்தேன் என்று கூறியுள்ளார். (த)

## கடித்த சுவாரேஸுக்கு 4 மாதத் தடை எச்சில் துப்பிய எனக்கு 7 வருடமா ?

நடுவரின் சட்டையில் எச்சில் கைகளைத் துடைத்த உதைபந்தாட்ட வீரருக்கு 7 ஆண்டுகள் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மன்செஸ்டரில் ஜூனியர் அணிக்காக விளையாடும் 15 வயதான ஜேக் ஸ்கோபீல்ட் என்ற உதைபந்தாட்ட வீரருக்கு நடுவரின் சட்டையில் எச்சில் துப்பிய கைகளைத் துடைத்ததற்காக 2021 ஆம் ஆண்டு வரை விளையாடத் தடை விதிக்கப் பட்டுள்ளது.



இதனையடுத்து இத்தாலி வீரரைக் கடித்த சுவாரே ஸிக்கு 4 மாதம் தடை, எனக்கு மட்டும் 7 வருடங்களா என்று இந்தத் தீர்ப்புக்கு மேல்முறையீடு செய்யவுள் ளார் ஜேக். இது பற்றி அவர் கூறுகையில், சுவாரேஸ் உடன் ஒப்பிடுகையில் இது போன்ற தண்டனை மிக அதிகம்.

நான் அவ்வாறு செய்யவே இல்லை. பின்னால் எச்சில் துப்பும் போது அந்த நடுவர் தவறாகப் புரிந்து கொண்டார் என்று கூறியுள்ளார். இந்த விவாகாரத்தில் குற் றம் சாட்டப்பட்ட வீரருக்கு 2,562 நாள்கள் அதாவது வரும் 2021 ஓகஸ்ட் 8 ஆம் திகதி வரை தடைவிதிக்கப்பட்டுள்ளது. (த)



# விடைபெறுகிறார் ஹெர்னாண்டஸ்

ஸ்பெயின் உதைபந்து அணியின் முன்னணி வீரர்களில் ஒருவரான 34 வயது எக்ஷாவி ஹெர்னாண்டஸ் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று முன் தினம் அறிவித்தார்.
2010ஆம் ஆண்டில் உலகக் கிண்ணத்தை வென்ற ஸ்பெயின் அணியில் முக்கிய பங்கு வகித்த எக் ஷாவி ஹெர்னாண்டஸ், 2008 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய சம்பியன் பட்டத்தை வென்ற ஸ்பெயின் அணியிலும் இடம் பிடித்து இருந்தார்.
ஸ்பெயின் அணிக்காக 133 சர்வதேசப் போட்டிகளில் விளையாடி இருக்கும் இவர், ஸ்பெயின் அணியில் எனக்குரிய காலம் முடிந்து விட்டது.
இன்று முதல் நானும் அந்த அணியின் ஒரு இரசிகராக இருப்பேன் என்றார். (கு)

# இந்தியாவின் கோரிக்கையை நிராகரித்துவிட்டது ஐ.சி.சி.

International Cricket Council

நாட்டிங்ஹாம்டெஸ்டின் போது இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜாவை திட்டி தீர்த்ததுடன் அவரை தள்ளிவிட்டு வம்பு செய்த இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் எந்தவித ஒழுங்கு நடவடிக்கையும் இன்றி தப்பினார்.
இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபை செய்த புகாரின் பேரில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலால் (ஐ.சி.சி) நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையாளர் கார்டன் லீவிஸ் 6 மணி நேரத்திற்கு மேலாக விசாரித்து இருவர் மீதும் தவறில்லை என்று தீர்ப்பு வழங்கினார்.
இந்த தீர்ப்பை எதிர்த்து ஐ.சி.சி.யின் செயல் அதிகாரி டேவ் ரிச்சர்ட்சன் மட்டுமே மேல்முறையீடு செய்ய முடியும் என்பதால் அவருக்கு கடிதம் எழுதிய இந்திய கிரிக்கெட் சபை, தீர்ப்பை எதிர்த்து உடனடியாக முறைப்பாடு செய்யும்படி வலியுறுத்தியது.
இந்த நிலையில் இந்தியாவின் கோரிக்கையை ஐ.சி.சி. நிராகரித்து விட்டது. இது தொடர்பாக ஐ.சி.சி. நேற்று வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், கார்டன் லீவிசின் தீர்ப்பு எங்களுக்கு பரிபூரண திருப்தியை அளிக்கிறது. இந்த ஒழுங்கு நடவடிக்கை விசாரணை நியாயமாகவும் வெளிப்படையாகவும் நடந்தது.
விசாரணையின் போது இரண்டு தரப்பினரும் கேள்விகள் கேட்கவும், தங்களிடம் உள்ள ஆதாரங்களைச் சமர்ப்பிக்கவும் போதிய வாய்ப்பு வழங்கப்பட்டது. இரண்டு தரப்பிலும் 13 பேர் சாட்சியம் அளித்தனர். அதன் பிறகு மிகவும் கவனமாக பரிசீலித்து இந்த முடிவுக்கு கார்டன் லீவிஸ் வந்திருக்கிறார். எனவே இதை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கு எந்தத் தகுதியும் இல்லை. அது மட்டுமின்றி இது போன்ற நடவடிக்கையில் இறங்கினால், அது விளையாட்டின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். எனவே தீர்ப்பை எதிர்த்து ஐ.சி.சி. மேல்முறையீடு செய்யாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# தகாத வார்த்தையில் தொடர்ந்து திட்டுங்கள்



இந்திய வீரர்களை தொடர்ந்து தகாத வார்த்தையில் அன்டர்சன் திட்ட வேண்டும் என்று முன்னாள் இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் வோகன் கூறியுள்ளார்.
அன்டர்சன் இந்திய வீரர் ஜடேஜாவை தள்ளிவிட்டு தகாத வார்த்தையில் திட்டினார், இந்த விவாரம் முடிவதற்குள் மைக்கல் இவ்வாறு கூறியுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
4ஆவது டெஸ்ட் போட்டி பற்றி மைக்கல் கூறுகையில், ஷிகர் தவான், டோனி ஆகியோர் அன்டர்சன், பிராட் பந்து வீச்சில் திக்கித் திணறிவருகின்றனர். அதை நினைவுபடுத்தினாலே போதும், தனிநபர் தாக்குதலில் ஈடுபட வேண்டியதில்லை.
4ஆவது டெஸ்ட் போட்டியிலும் ஜேம்ஸ் அன்டர்சன் இந்திய வீரர்கள் மீது வசையைப் பயன் படுத்தவேண்டும். ஆனால் மீண்டுமொருமுறை அவர்கள் அன்டர்சன் மீது புகார் எழுப்பாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும்-என்று கூறியுள்ளார்.

# மைதான அணுகுமுறை மாற வேண்டியதில்லை



இங்கிலாந்து கிரிக்கட் அணியின் பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன், தமது மைதான அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று, இங்கிலாந்தின் தலைவர் அலஸ்ட்ரயர் குக் தெரிவித்துள்ளார்.
ஜேம்ஸ் அன்டர்சன் மற்றும் இந்திய அணியின் ரவிந்தர ஜடேஜா ஆகியோருக்கு இடையிலான மோதல் கடந்த தினங்களில் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.
எவ்வாறாயினும் இந்த சம்பவத்தில் ஜேம்ஸ் அன்டர்சன் குற்றமற்றவர் என்று சர்வதேச கிரிக்கட் சபையால் அறிவிக்கப்பட்டார்.
இதற்கு எதிராக இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபை மேன்முறையீடு செய்திருந்த போதும், அதனை சர்வதேச கிரிக்கட் சபை நிராகரித்திருந்தது.
இந்த நிலையில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியும் ஏனைய அணிகள் போலவே போட்டி மனநிலையுடன் கிரிக்கெட்டை விளையாட வேண்டும் என்று கருதுவதாக அந்த அணியின் தலைவர் குக் தெரிவித்துள்ளார்.
ஜேம்ஸ் அன்டர்சன் போன்ற வீரர்கள் தங்களின் ஆக்ரோசத்தை மைதானத்தில் வெளிப்படுத்துகின்றனர். இது போட்டித் தன்மையான கிரிக்கெட்டுக்கு முக்கியமானது.
இதனை மாற்றிக் கொண்டு மென்மையான பாணியில் இங்கிலாந்து விளையாட வேண்டும் என்றுதாம் கருதவில்லை என்று குக் தெரிவித்துள்ளார். (கு)

# தவானுக்கு வாய்ப்பளியுங்கள்



கடந்த சில டெஸ்டில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதற்காக தொடக்க வீரர் தவானை நீக்காமல் தொடர்ந்து வாய்ப்பு கொடுக்க வேண்டும் என ரவி சாஸ்திரி கூறியுள்ளார்.
இந்திய அணி இங்கிலாந்துச் சுற்றுப்பயணம்மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந் நிலையில் 4ஆவது டெஸ்ட் போட்டி நேற்று மன்செஸ்டரில் ஆரம்பமானது.
முதல் 3 டெஸ்ட் போட்டிகளிலும் இந்திய அணியின் தொடக்க வீரரான தவான் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. இதைத் தொடர்ந்து இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவரும், வர்ணனையாளருமான ரவி சாஸ்திரி கருத்து தெரிவித்துள்ளார்.
இது பற்றி அவர் கூறுகையில், வெளிநாட்டு மண்ணில் அடுத்தடுத்து வெற்றி பெற வேண்டும் என்ற கனவு முடிந்துவிடக்கூடாது.
அதற்கு ஏற்ற வகையில் இந்திய வீரர்கள் செயல்பட வேண்டும். 20 இலக்குகளை கைப்பற்றும் திறமையுடன் நமது பந்து வீச்சு அமையவேண்டும்.
ரோஹித் சர்மா இடத்தில் அஸ்வினையும், பங்கஜ்சிங் இடத்தில் வருண் ஆரோனுக்கு வாய்ப்பு கொடுக்கப்படலாம் என்று கருதுகிறேன்.
சில டெஸ்டில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதற்காக தொடக்க வீரர் தவானை நீக்கக்கூடாது. தொடர்ந்து அவருக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும்.
இதை டோனி கவனத்தில் கொண்டு செயல்படுவார் என்று கூறியுள்ளார். (கு)



## ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் பற்றிய கலந்துரையாடல்

பான் ஏஷியா வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேலாக வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வரும் ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் பற்றிய கலந்துரையாடல் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரதான மண்டபத்தில் (D.S OFFICE KARACHCHI MAIN HALL) நாளை 09 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இக் கடனின் சிறப்பம்சங்களாவன
- ரூபா 500,000/- வரையான கடன் தொகை
- மிக இலகுவான செயற்படுத்தல்
- பிணைகள், பொறுப்புக்கள் தேவையற்றது
- 70 வயது வரையான கடன் மீளச் செலுத்தும் வசதி

நிபந்தனைகள்
- ரூபா 10,000/- இற்கு அதிகமான ஓய்வூதியம் பெறுபவர்கள் விண்ணப்பிக்கலாம்
- கடன் பாதுகாப்புத் திட்டம் ஒழுங்கு செய்யப்படும்
  (ஒழுங்குகள் அனைத்தும் வங்கியினால் செய்யப்படும்.)

எமது வங்கியில் ஏற்கனவே கடனைப் பெற்றவர்களும் மேலதிகக் கடன் தொகையைப் பெறும் வாய்ப்புக்கள் உண்டு.

இவை பற்றிய மேலதிக விபரங்களை கலந்துரையாடலில் பங்கு பற்றி அறிந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| கலந்துரையாடல் நடைபெறும் இடம் | கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரதான மண்டபம் |
| காலம் | 09.08.2014 - காலை 10.00 மணி |
| மேலதிக விபரங்களுக்கு | பான் ஏஷியா வங்கி,<br>161, கண்டி வீதி, கிளிநொச்சி<br>021 4 925 844, 021 4 925 952/3 |

பான் ஏஷியா வங்கி



இசைக்கலைமணி திருமதி கல்யாணி சுதர்சன் அவர்களின்
கனடா ஏழிசை மதுர சபா வழங்கும்

## சிறப்பு இசையரங்கம்

**இடம் :** இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபம்

**காலம் :** நாளை (09.08.2014) சனிக்கிழமை மாலை 4.00 மணி

**தலைவர் :**
செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன்
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)



### நிகழ்ச்சிகள்



**4.00 மணி :** இசைக் கலைமணி திருமதி கல்யாணி சுதர்சன் அவர்களின் மகளும், மாணவியுமான செல்வி **தீபிகா சுதர்சன்** வழங்கும் வீணை இசை

**5.00 மணி :** கனடா வாழ் சங்கீதவித்துவான் திருமதி **தனதேவி மித்ரதேவா** அவர்களின் மாணவி செல்வி **துர்க்கா சுதர்சன்** வழங்கும் வயலின் இசை



அணிசெய் கலைஞர்கள்
மிருதங்கம் - நல்லை G. கண்ணதாஸ்
கெஞ்சிரா - கலாவித்தகர் K. நந்தகுமார்
முகர்சிங் - கலாவித்தகர் N. சதீஷ்குமார்

**6.00 மணி :** இசையரங்கம்
பாட்டு - இசைமாணி தவநாதன் றொபேட்
வயலின் - செல்வி துர்க்கா சுதர்சன்
மிருதங்கம் - செல்வன் கண்ணதாஸ் இசைநிலவன்
கெஞ்சிரா - கலாவித்தகர் K. நந்தகுமார்
முகர்சிங் - கலாவித்தகர் N. சதீஷ்குமார்

*கலை ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.*

- விழாக் குழுவினர்.


# உள்ளூராட்சி புதிய நியமனங்களுக்கான சம்பள அளவுத் திட்டத்தில் குளறுபடிகள்

யாழ்ப்பாணம், ஓக.8

வடமாகாண உள்ளூராட்சிச் சபைகளில் வெற்றிடமாகக் காணப்பட்ட அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களில் பலர் உரிய வேதனத் திட்டத்தில் வைக்கப்படாததால் பழைய பதவிகளுக்குத் திரும்ப வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பங்களை உள்ளூராட்சிச் சபைகள் கோரியபோது ஏற்கனவே நிரந்தர சேவையில் கடமையாற்றியவர்களும் விண்ணப்பித்திருந்தனர்.

நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்ட இந்த ஊழியர்களுக்கு பதவியுயர்வு அல்லாத பதவி மாற்றமாகவே புதிய நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. இவர்களுக்குச் சம்பளம் வழங்கும்போது தற்போது சிக்கல் எழுந்துள்ளது. ஏற்கனவே வேறு பதவிகளில் பத்து வருடங்களுக்கும்மேலாகக் கடமையாற்றியோர் புதிதாக நியமிக்கப்பட்ட பதவிக்கான சம்பள அளவுத் திட்டத்தை விடக் கூடுதலான சம்பளம் பெற்று வந்துள்ளனர்.

இந்தநிலையில் உள்ளூராட்சிச் சபைகள் வழங்கப்பட்ட நியமனத்துக்குரிய சம்பள அளவுத் திட்டப் பிரகாரம் சம்பளத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டபோது பதவி மாற்றம் பெற்ற ஊழியர்கள் தாம் முன்னர் பெற்ற சம்பள அளவுத் திட்டத்திலிருந்து சம்பளம் வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனை மறுத்த உள்ளூராட்சிச் சபைகள் இந்த ஊழியர்களுக்குபதவி உயர்வுவழங்கப்படவில்லையெனவும் பதவி மாற்றம் மட்டுமே செய்துள்ளதாகவும் இதனால் புதிய பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டத்திலேயே சம்பளம் வழங்கப்படுமெனவும், இதற்கு மறுத்தால் முன்னைய பதவிகளுக்கு செல்வதாக எழுத்து மூலம் தெரிவிக்குமாறும் தெரிவித்துள்ளன. இதுவரை காலமும் அட்டவணைப்படுத்தப்பட்ட மற்றும் அட்டவணைப்படுத்தப்படாத பதவியில் உள்ள ஒருவர் வேறு பதவிக்கு மாறும் போது முன்னர் பெற்ற சம்பளத்துக்கு இணையான படிநிலையில் வைக்கப்பட்டு, மாதாந்த சம்பளம் வழங்கப்பட்டு வருவது வழமையாகும். ஆனால் தற்போதைய உள்ளூராட்சிச் சபைகள் பதவியுயர்வு மற்றும் பதவி மாற்றம் என்னும் சொற்பதங்களைப் பயன்படுத்தி உரிய சம்பள படிநிலையை வழங்க மறுப்பது குறித்து அந்தத் துறையுடன் தொடர்புடைய பலர் கவலை தெரிவித்தனர். (க-9)

# கைதடியில் வாளுடன் ஒருவர் கைது

கைதடி,ஓக.8

கைதடி, நவபுரம் பகுதியில் ஆலயத் திருவிழா நேரத்தில் மோதலில் ஈடுபட முயன்ற நபர் ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் வாளுடன் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஏற்கனவே இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட பகை அன்றைய தினம் மோதலாக உருவெடுத்ததாகவும் குறித்த நபர் தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த வாளை எடுத்து வந்ததை அவதானித்த மற்றைய குழுவினர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, அண்மையில் கைதடிச் சந்தியில் நின்ற இருவர் மீது மேற்கொள்ளப்பட்ட வாள் வெட்டுச் சம்பவத்துக்கும் குறித்த நபருக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாகவும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-288)


## கண்ணீர் அஞ்சலி

தொண்டமானாறு வெளிக்கள நிலைய உபதலைவரும், முன்னாள் கற்கைநெறிப் பணிப்பாளருமாகிய

**மங்கையர்க்கரசி ராஜாராம்**



அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் மன ஆறுதலுக்கும், அவரின் ஆத்மசாந்திக்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி15375) (12.3.6)

பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்.



## கண்ணீர் அஞ்சலி

எமது ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபன (LIC) சாவகச்சேரி கிளைக்காரியாலயத்தின் விற்பனை மேற்பார்வையாளர்

**தனநாயகம் தனப்பிரகாசன்**



அவர்களின் திடீர் மறைவினால் பேரதிர்ச்சியும் பெரும் துயரமும் அடைந்துள்ளோம். அன்னாரின் இழப்பு எமக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பும் வேதனைகள் நிறைந்தவையாகவும் உள்ளது. இத்தருணத்தில் அன்னாரின் குடும்ப உறுப்பினர்கள் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நாமும் இத்துயரில் பங்கெடுத்துக்கொள்வதோடு, அவரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்,
பொதுமுகாமையாளர்கள், முகாமையாளர்கள், ஊழியர்கள்.
LIC (Lanka)Ltd.

(50665) (12.3.6)



## கண்ணீர் அஞ்சலி



**தனநாயகம் தனப்பிரகாஸன்**

ஆயுட் காப்புறுதிக் கூட்டுத்தாபன சாவகச்சேரி கிளையில் விற்பனை மேற்பார்வையாளராகப் பணியாற்றி கடந்த 05.08.2014 செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்த தனநாயகம் தனப்பிரகாஸன் அவர்களின் திடீர் மறைவு குறித்து அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம். அன்னாரின் திடீர் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி15374) (12.3.6)

சாவகச்சேரிக் கிளை LIC (Lanka)Ltd.



## 45ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும் அழைப்பும்



அமரர் அலோசியஸ் வின்சென்ற் மனோராஜ் அன்ரனி

தாயின் மடியில்
27.07.1998

இறைவனடியில்
26.06.2014

எமது அன்புச் செல்வத்தின் இறப்பிலிருந்து இறுதிச் சடங்கு வரையும் எம்முடன் இணைந்து முழுமையாக தங்களை அர்ப்பணித்து செயற்பட்ட எமது பங்குத்தந்தை, அருட் சகோதரிகள், யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், நிர்வாகிகள், மாணவர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (09.08.2014) சனிக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் நன்றித் திருப்பலியிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பாங்க் சுப்பிரமணியர் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.


திருநெல்வேலி.

## 61 ஆவது
## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மதிப்பிற்குரிய வண பிதா அருமைநாயகம்
(யாழ் மாவட்ட, புதுக்குடியிருப்பு, கல்மடு, சாந்த சோலை, வவுனியா, அபயபுர பிரதேசங்களுக்கு பொறுப்பாளராக தேவ பணியாற்றும் மாவட்ட அருட் தந்தை )

இவர் இறைவனின் ஊழியப்பாதையில் என்ன பாடுகள் வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் ஏழைகள், திக்கற்றவர்களை சந்தித்து அவர்களை விசாரித்து தேவ அன்பினை வழிநடத்தும் அருட்தந்தையார் தனது 61 ஆவது அகவையில் (08.08.2014) காலடி வைத்துள்ளார் இவரை இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துகின்றோம்.

(நீதி 9.11) தேவனாலே உன் நாட்கள் பெருகும் உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும்.

வாழ்த்துபவர்கள்,
பிலீவேர்ஸ் சேச் ஊழியர்கள், சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்

**திருமதி காமாட்சி அம்பிகை அம்மா கந்தசாமி ஐயர்**



ஊரெழுவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. காமாட்சி அம்பிகை அம்மா கந்தசாமி ஐயர் நேற்று முன்தினம் (06.08.2014) அன்று சிவபதம் எய்தினார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.

## பெயர் மாற்றம்

வட்டாரம் 09, நெடுந்தீவு மத்தியைச் சேர்ந்த கனகாம்பிகை ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை கமலாம்பிகை என பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

கமலாம்பிகை

(50648) (45.3)

## வான் விற்பனைக்கு

HE xxxx 172 Model Auto Gear Full Option Dolpin விற்பனைக் குண்டு.
தொடர்பு :- 0776050963

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லமுத்து கந்தசாமி



இணுவிலைப் பிறப்பிடமாகவும் டச்சு வீதி, கோப்பாய் தெற்கு கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.செல்லமுத்து கந்தசாமி அவர்கள் நேற்று (07.08.2014) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், கந்தையாபிள்ளை, கனகலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான கணேசு, சுப்பிரமணியம், சரஸ்வதி மற்றும் சோதிப்பிள்ளை, முருகையா, இரத்தினம்மா, காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் யோகம்மா, காலஞ் சென்றவர்களான மீனலோயினி, துரைராசா ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.08.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை செக்கடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சுவீதி கோப்பாய் தெற்கு,
கோப்பாய் (50672)

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் தங்கஜெயமணிராஜா



பருத்தித்துறை, புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது ஆஸ்பத்திரிவீதி, அச்சுவேலி தெற்கை வசிப்பிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் தங்க ஜெயமணி ராஜா நேற்று (07.08.2014) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை பார்வதிப் பிள்ளை தம்பதி யரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்வத்தின் அன்புக் கணவரும், வேணி (லண்டன்), மஞ்சுளா, சுதாகர் (லண்டன்), மேகலா (லண்டன்), சங்கர் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந் தையும், தங்கத்தவமணிதேவி (ஆஸ்திரேலியா), தங்கநவமணிநாதன் (R.D.D. S.T.O ஓய்வூதியர்), பத்மாவதி, கமலதேவி, ராஜலட்சுமி (ஆஸ்திரேலியா), சந்திரா, சூரியகுமார் (லண் டன்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேவகிருஸ்ணன் (லண்டன்), கணேஸ்வரன்(Depot Superintendent, Ceylon Petroliam Stroage terminal Ltd. K.K.S), தயாவதி (லண்டன்), கிருபாதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், சண்முகநாதன் (ஆஸ்திரேலியா), ஸ்ரீதரன், சிவநந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரவீன், ஜனகன், அனுசன், பிரசாந், கிரிஷாந், அபிசன், டிலானி ஆகியோரின் பாசமிகு பேரனும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2014) வெள்ளிக் கிழமை மு.ப. 10.30 மணியளவில் ஆஸ் பத்திரி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி

தகவல்: கோ. கணேஸ்வரன்
தொ.பே- 021 2058010, (மருமகன்) 077 7862039

தொடர்ச்சிகள்

### உணர்வு

றுத்தலான உணர்வுபூர் வ மான சூழலில், அவற்றைத் தீர்ப்பதற்கு பொருத் தமான வழிமுறைகள் கையாளப் படும் என்று நான் உறுதியளிக் கிறேன்." என்று அவர் தெரிவித்துள்ளார்.

பரஸ்பர சட்ட உதவி உடன் பாட்டுக்கு அமைய, கொழும் பிலுள்ள பாகிஸ்தான் தூதரக நுழைவிசைவுப் (விஸா) பிரிவு அதிகாரியான அமீர் சுபைர் சித்திக் பற்றிய விவரங்களை, இந்தி யாவின் தேசிய புல னாய்வுப் பிரிவு இலங்கை அரசிடம் கோரிய நிலையில், குறித்த அதிகாரி இஸ் லாமாபாத்துக்கு திருப்பி அழைக்கப் பட்டுள்ளார். இந்த நிலையிலேயே சையட் அக்பருதீன் மேற் கண்டவாறு கூறியுள் ளார். (ற-5)

### மனித உரிமை

னால் கோபமடைந்த நான், அது குறித்து விசாரித்தபோது புறக்கோட்டை ரயில் நிலையப் பகுதியில் எனது தொலைபேசி இலக்கத்துடன் துண்டுப் பிர சுரம் ஒட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட் டது. அதிலிருந்த மற் றைய தொலைபேசி இலக்கத்தைக் கேட் டதும் அது சுனில் தென் னக்கோன் என்று அறிந்து கொண்டேன். எனது தொலைபேசி எண்ணுக்கு ஒரு சிலரால் மீண்டும் மீண்டும் அழைப்பு ஏற்படுத் தப்பட்டு வளர்ப்பு நாய்கள் விற் பது தொடர்பில் வின வப்பட்டது. இது திட்ட மிட்டு மேற் கொள்ளப் பட்டது"- என்று தெரி வித்துள்ளார்.

இலங்கை மனித உரி மைச் செயற்பாட்டா ளர்களான நிம ல்கா பெர்னாண்டோ மற் றும் சுனில் தென்னக் கோன் ஆகியோர் இலங்கையில் மனித உரிமைகள் நிலைப் பாடு தொடர்பில் தொடர்ச்சியாகக் கண்ட னங்கள் தெரிவித்து வருகின்ற நிலையி லேயே இவ்வாறான சம்பவம் நடந்துள்ளது. (ற)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## ஆடித்தள்ளுபடி

இலத்திரனியல் தராசு.
1 வாங்கினால் 1 இலவசம்
அரச அங்கிகாரம், ஒரு வருட உத்தரவாதம்.
விலை 9900/
சுதா காட்சியறை, திருநெல்வேலி.
077 124 6426

## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி அஞ்சலீனா ஜோசப்



திருச்சிலுவைக் கன்னியர் சபையைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் குருசோ வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய அருட்சகோதரி அஞ்சலீனா ஜோசப் அவர்கள் நேற்று முன்தினம் (06.08.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் - எலிசபேத் அம்மாள் தம்பதிகளின் அன்பு மகளும் ஜோர்ச் மரியதாஸ் (கொழும்பு), லீலா (ஆஸ்திரேலியா), சாள்ஸ் மகேந்திரன் (கனடா) , லைலா (லண்டன்), ஐடா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரேசா, சூரியாதேவி, டன்ஸ்ரன், வசந்தன் காலஞ்சென்ற பங்கிராஸ் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் கடற்கரை வீதியிலுள்ள திருச்சிலுவைக் கன்னியர் மடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (09.08.2014) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : அருட்சகோதரி விக்ரறின் ஜேம்ஸ் (50674)
மாகாணத்தலைவி , திருச்சிலுவை கன்னியர் சபை

## கண்ணீர் அஞ்சலி

எமது பெற்றோலிய தொகைசாலை அதிகாரி
திரு.கோ.கணேஸ்வரன் அவர்களின் பாசமிகு மாமனார்

### சு.தங்க ஜெயமணி ராஜா



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளவதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்
இலங்கை பெற்றோலிய ஸ்ரோறேஜ் ரேமினல் லிமிட்டெட்

தொகைசாலை,
காங்கேசன்துறை (50669)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் பரமேஸ்வரன்



(முன்னாள் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்) )

டச்சு வீதி வீமன் காமம் தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி சங்கானை மத்தி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண் ட ஆறுமுகம் பரமேஸ்வரன் (முன்னாள் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர் ) நேற்று (07.08.2014) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற டில்லிமலர் மற்றும் பிறேமாவதி ஆகியோரின் அன்புக் கணவரும், ரமணன், ராகுலன், பிரியங்கா ஆகியோரின் அன்புத் தந்தையும், கிசாந்தினியின் அன்பு மாமனும், பிருதுவியின் ஆருயிர் அப்பப்பாவும், இராசதுரை, காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், இராசநாயகம் மற்றும் இரா சலிங்கம், பராசக்தி, யோகேஸ்வரி, யோகேஸ்வரன், ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.08.2014) வெள்ளிக் கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கெள்ளவும்

தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கலாவதி தட்சணாமூர்த்தி



அச்சுவேலி தெற்கு விக்கினேஸ்வரா வீதியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாவதி தட்சணாமூர்த்தி நேற்று வியாழக்கிழமை (07.08.2014) இறைவணடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் விக்கினேஸ்வரா வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியக்காக இன்று வெள்ளிக்கிழமை (08.08.2014) நண்பகல் 12 மணியளவில் அச்சுவேலி முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கெள்ளவும்

விக்னேஸ்வரா வீதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (C/15376)

தகவல் : வ.தட்சணாமூர்த்தி
(கணவன்)

## தொடர்ச்சிகள்

### போர்க்குற்ற

1983 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையில் காணாமற் போனவர்கள் தொடர்பில் குறித்த ஆணைக்குழு பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்றுக் கொண்டது.

இதன் முதலாவது பகிரங்க அமர்வு கிளிநொச்சியில் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமானது. அதன் பின்னர் பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்திலும், மார்ச் மற்றும் ஜூன் மாதங்களில் மட்டக்களப்பிலும், ஜூலை மாதம் முல்லைத்தீவிலும் இடம்பெற்றது.

இந்த நிலையில் கடந்த ஜூலை மாதம் 15 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி மூலம் காணாமற்போனோர் விசாரணை ஆணைக்குழுவின் விடயப் பரப்புகளை ஜனாதிபதி விரிவாக்கியிருந்தார். இறுதிக் கட்டப் போரின் போதான சர்வதேச மனிதாபிமான சட்டமீறல்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்பிக்க ஆணைக்குழுவைப் பணித்திருந்ததுடன், இந்த ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு மூன்று சர்வதேச நிபுணர்களையும் நியமித்திருந்தார்.

போர்க் குற்ற விடயப் பரப்புக்களையும் விசாரணை செய்யும் வகையில் ஆணைக்குழு விரிவாக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்றைய தினமே தனது முதலாவது பகிரங்க அமர்வை நடத்துகின்றது. இந்த அமர்வு இன்று காலை 9.30 மணிக்கு மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தில் ஆரம்பமாகவுள்ளது. இதன் போது 13 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 65 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

நாளை சனிக்கிழமையும் மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தில் அமர்வு இடம்பெறவுள்ளதுடன் இதன் போது 22 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 60 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளனர்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் பிரதேச செயலகத்தில் நடைபெறும் அமர்வில் 22 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 60 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். இறுதி நாள் மடு பிரதேச செயலகத்தில் நடைபெறும் அமர்வில் 7 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 45 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அமர்வுகளில் காணாமற்போனோரின் உறவினர்கள் மாத்திரமல்லாமல், இறுதிக் கட்டப் போர் தொடர்பில் சாட்சியமளிப்பவர்களும் சாட்சியமளிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

### நடப்பவை

வன் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். அதனால் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் கல்வி கற்று வரும் தமிழ் மாணவர்களிடையே பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

புதுமுக தமிழ் மாணவ - மாணவியர் 20 பேரின் பெயர் குறிப்பிடப்பட்டு அவர்கள் அனைவரையும் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறுமாறு கொச்சைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஒட்டப்பட்டிருந்தது. அதன் பின்னர் மீளவும் எச்சரிக்கை துண்டுப் பிரசுரம் ஒட்டப்பட்டிருந்தது. இந்த நிலையில் மூன்றாவது தடவையாகவும் எச்சரிக்கை துண்டுப் பிரசுரம் ஒட்ட வந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களால் தமிழ் மாணவனான சுதர்சன் தாக்கப்பட்டிருந்தார்.

மாணவன் தாக்கப்பட்டமை தொடர்பிலான தகவல்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்தது. அத்துடன் பல்கலைக்கழக வளாகத்தினுள் ஒட்டப்பட்டிருந்த துண்டுப் பிரசுரங்களும் ஊடகங்களில் பிரசுரமாகியிருந்தது. இந்த நிலையில் தற்போது அங்கு கல்வி கற்று வரும் தமிழ் மாணவர்களிடம் ஊடகங்களுக்கு தகவல்கள் வழங்கியது யார்? ஒளிப்படங்களை வழங்கியது யார்? என்பது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அங்கு கல்வி கற்று வரும் மாணவர்களின் கைத்தொலைபேசிகளும் சோதனை செய்யப்பட்டுள்ளன. மேலும் இங்கு இடம்பெற்றுவரும் சம்பவங்கள் தொடர்பில் எவருக்கும் தகவல்கள் கொடுக்கக் கூடாது என்றும் மாணவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர். அதனால் அங்கு தற்போது பரீட்சை எழுதி வரும் தமிழ் மாணவர்கள் மத்தியிலும் பதற்றமான நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

### ஆதனங்களின்

சில நொத்தாரிசுகளால் அத்தாட்சிப்படுத்தப்படும் உறுதிகளில் சொல்லப்படும் ஆதனங்களின் பெறுமதி தற்போதைய பெறுமதியிலும் பார்க்க மிகக் குறைந்தளவில் காட்டப்படுவது என்னால் அவதானிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக பாதிக்கப்படும் நிறுவனங்களினாலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே தயவு செய்து ஆதனங்களின் தற்போதைய பெறுமதியைக் குறிப்பிட்டு ஆவணங்களை அத்தாட்சிப்படுத்துமாறு கேட்டுக் கொள்வதுடன் தவறும் பட்சத்தில் காணியின் பெறுமதி தொடர்பாக மதிப்பீட்டுத் திணைக்களத்தினூடாகப் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட பின்பே ஆவணங்கள் பதிவு செய்யப்படும். அத்துடன் மதிப்பீடு செய்யப்படும் போது ஏற்படும் பெறுமதிக் குறைவும் அதற்கான தண்டப் பணமும் அறவீடு செய்யப்பட வேண்டி ஏற்படும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

### வெண்மையாக்கும்

எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளில் அவர்கள் தொடர்ந்து ஈடுபட்டால், வியாபார உரிமத்தை ரத்துச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று பால்மா பொருள்கள், சொக்லேட் என்பனவும் காலாவதியான நிலையில் அதிகளவில் விற்பனை செய்வது இனங்காணப்பட்டுள்ளது. நிறை குறைந்த பாண் விற்பனை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. அதனைத் தடுப்பதற்கு மிக இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதனை விடவும் போலி முகப்பூச்சுக்கள் யாழ்.நகரில் விற்பனை செய்து வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பிரபல முகப்பூச்சு நிறுவனத்தின் பெயரைப் பயன்படுத்தி உள்ளூரில் தயாரிக்கப்படும் முகப் பூச்சுக்களை விற்பனை செய்கின்றனர். இந்த முகப்பூச்சுக்களில் இரசாயனக் கலவை அதிகமாகக் காணப்படுவதால், உடல் நலப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றது.

இவ்வாறு போலி முகப்பூச்சுக்கள் விற்பனை செய்த இரு விற்பனை முகவர்கள் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் இவ்வாறான விற்பனைச் செயற்பாடுகளைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்-என்று குறிப்பிட்டார். (ந-5)

### பொலிஸின்

அதையடுத்து வீட்டுக்குள் இருந்த பெண் கூக்குரலிட, வந்த வழியாகவே ஓட்டம் பிடித்தான் திருடன். ஆயினும் விரைந்து செயற்பட்ட அயலவர்களால் அவன் பிடிக்கப்பட்டு, உரிய கவனிப்பும் வழங்கப்பட்டது. அதன்பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

குறித்த திருடன் பொம்மைவெளியைச் சேர்ந்தவன் என்றும், ஏற்கனவே சாவகச்சேரியில் வீடு உடைத்துத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, அது தொடர்பில் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகின்றது என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-4)

### சொந்தக்

ளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் இதன் மூலம் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக, ஆட்சியுரிமை சட்டத்தின் படி ஓர் இடத்தில் ஒருவர் 10 வருடங்களுக்கு மேலாக தங்கியிருக்கும் பட்சத்தில், அந்த இடத்தின் உரித்து உரிமையாளர்களிடமிருந்து பறிபோய்விடும் என்ற கருத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற பரிந்துரை நல்லிணக்க ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டது. அத்துடன், சட்ட ஆணைக்குழுவும் 2009ஆம் ஆண்டில் மேற்படி கருத்தை வெளியிட்டிருந்தது. அவற்றின் பிரகாரமே நகர்வுகள் இடம்பெற்றுள்ளன. இந்தச் சட்ட நடைமுறையானது ஒரு வருடமே நடைமுறையில் இருக்கும். எனவே, காணிகளை இழந்தோர் இந்தக் காலப் பகுதிக்குள் வழக்குகளைத் தாக்கல் செய்யவேண்டும். இது தொடர்பில் மக்களுக்கு அறிவுறுத்தப்படும். இதற்கான பணிகளை நீதியமைச்சு முன்னெடுக்கும். அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுகின்றன" - என்று தெரிவித்துள்ளார். (ந-சி)

### சுஷ்மாவிடமும்

சர் ஜி.எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

நான் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜுடன் பேசினேன். தவறுகள் நடந்திருக்கி றது என்றும், அதனை மன்னிக்குமாறும் கேட்டுக் கொண்டேன். இது உறவுகளை முறித்து விடாது. நாம் இந்தியாவுடன் வலுவான உறவுகளைக் கட்டியெழுப்பியுள்ளோம்' என்று அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

### ஒன்றுகூடுகின்ற

நாடுகளின் பல்வேறு இராஜதந்திரிகளும் பங்கேற்றிருந்தனர். பிக்குகளால் இடையூறு விளைவிக்கப்பட்டமை தொடர்பில் பல்வேறு நாடுகளின் தூதரகங்களும் இலங்கைக்கு தமது கடுமையான கண்டனங்களை வெளிப்படுத்தியுள்ளன.

இந்தநிலையில் நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூனின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக்கிடம் அது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர், இந்த விடயம் தொடர்பில் நியூயோர்க்கிலுள்ள எமது பொதுச் சபைக்கு விவரங்கள் கிடைக்கவில்லை. ஆனாலும், உலகின் அனைத்து இடங்களிலும், அமைதியாக ஒன்று கூடும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும், அதற்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு - என்று தெரிவித்துள்ளார். (ந-5)

### சிறுமியைக்

2007ஆம் ஆண்டு சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் பதின்ம வயதுச் சிறுமி ஒருவரை, சாவகச்சேரியைச் சேர்ந்த சி.சிவபாலன் என்பவர் தனது நண்பரான க.கமலதாசன் என்பவரின் உதவியுடன் கடத்தியதுடன், சிறுமியை மூன்று நாள்கள் வன்புணர்வுக்கு உட்படுத்தியிருந்தார்.

அது தொடர்பில் சிறுமியின் பாதுகாவலரால் பொலிஸாருக்கு முறையிடப்பட்டதை அடுத்து, சிறுமி மீட்கப்பட்டதுடன் வன்புணர்வுக்கு உட்படுத்திய நபரும் கைது செய்யப்பட்டார். சிறுமியைக் கடத்தியவர், அவருக்கு உடந்தையாக இருந்தவர் ஆகிய இருவருக்கும் எதிராகப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். குறித்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய யாழ்.மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

வழக்கு மேல் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குற்றஞ்சாட்டப்பட்ட சிவபாலன் தன்மீதான குற்றச்சாட்டை மறுத்தார். அதையடுத்து வழக்கு பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. அடுத்த வழக்குத் தவணையின்போது சந்தேக நபர் தன் மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொள்வதாகத் தெரிவித்தார்.

இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குற்றஞ்சாட்டுப் பத்திரம் வாசித்துக் காட்டப்பட்டது. சிறுமியைக் கடத்தியமை, அவரை மூன்று நாள்கள் வன்புணர்வுக்கு உட்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சிவபாலன் மீதும், அவருக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டு கமலதாசன் மீதும் சுமத்தப்பட்டது.

குற்றத்தை சிலபாலன் ஏற்றுக் கொண்டதை அடுத்து, சிறுமியைக் கடத்திய குற்றத்துக்காக 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும், சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டுக்காக 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டதுடன், இந்த இரு தண்டனைகளையும் ஒரே காலத்தில் அனுபவிக்க முடியும் என்றும் நீதிமன்று தெரிவித்தது.

சிறுமியைக் கடத்த உதவிய கமலதாசன் தொடர்ந்தும் தலைமறைவாக உள்ளதால், அவருக்கு மேல் நீதிமன்று பிடியாணையும் பிறப்பித்தது. (ந-4)

### மக்கள்

திக்கு மனுவும் அனுப்பி வைக்கப்பட்டது. இந்தநிலையில், குறித்த போராட்டம் என்ன காரணத்துக்காக முன்னெடுக்கப்பட்டது என்றும் அது தொடர்பிலான விவரங்களை வழங்குமாறும் கோரி ஜனாதிபதி செயலகத்தால் யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

### கடமையைச்

கள் காட்டிப் பயமுறுத்தியதுடன் சுற்றி வளைத்துப் பிடிக்கும் நோக்குடனும் துரத்திச் சென்றனர்.

இந்தக் கும்பலிடமிருந்து தப்பிச் சென்ற அதிகாரிகள் இச்சம்பவம் குறித்து அன்றைய தினமே சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்த போதிலும் கடந்த இரு வாரங்களுக்கு மேலாகச் சம்பந்தப்பட்டவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்க பொலிஸார் முன்வரவில்லை.

பொலிஸாரின் நடவடிக்கை மீது சந்தேகம் கொண்ட பாதிக்கப்பட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் சாவகச்சேரியை சேர்ந்த 25 மீனவர்களுக்குமெதிராக நேற்று முன்தினம் புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள். (த-115)

### சுகாதார

வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகர்கள் சுகாதாரமான உணவுப்பண்டங்களை விற்பனை செய்ய வேண்டும். அது தொடர்பில் விற்பனை நிலையங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அவதானிப்பு நடவடிக்கைகளில் சுகாதார உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். பொது மக்கள் தாம் கொள்வனவு செய்யும் உணவுப்பண்டங்கள் சுகாதாரமானதா என்பது தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டும் - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கிராம ரீதியாக உணவு கையாளும் நிலையங்களை சோதனை செய்யும் நடவடிக்கைகளில் சுகாதார உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். (ந-14)

### ஆயிரம்

டது. யாழ். மாவட்டத்திலுள்ள மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள, ஆயிரம் மாணவ மாணவிகளின் ஆரம்பகல்வியிலிருந்து உயர்கல்வி வரைக்குமான கல்விக்கான செலவீனங்களை தாங்கள் பொறுப்பெடுப்பதாகத் தெரிவித்தனர்.

அத்துடன் அதிபர், ஆசிரியர், மாணவர் ஒவ்வொருவரும் தலா நான்கு மாணவர்களை பொறுப்பேற்பதாகவும் உறுதியளித்தனர். அத்துடன் அவர்களுக்கான சுற்றுலா வசதிகளையும் பொழுதுபோக்கு வசதிகளையும் இலங்கைக்குள் ஏற்படுத்தி கொடுப்பதற்கும் முன்வந்துள்ளார்கள். இந்தத் திட்டம் வடக்கு மாகாண கல்வி அமைச்சருடனும் அமைச்சின் அதிகாரிகளுடனும் இணைந்து முன்னெடுக்கப்படவுள்ளது."- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் பிரான்ஸிலுள்ள ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு ஒன்றியத்துடன் நடத்திய பேச்சில், இங்குள்ள பருத்தியடைப்பு குளத்தினை புனரமைப்பதற்குரிய முழு நிதியையும் தாங்கள் பொறுப்பெடுத்து குறித்த நிதியை பிரான்ஸில் உள்ள மாநகரசபை ஒன்றின் மூலம் பெற்று தரவுள்ளோம் என்றும் குறிப்பிட்டார்.

பருத்தியடைப்பு குளத்திற்குள் கடல் நீர் உட்புகாதபடி தடுப்பணை போடுவதற்கும் குளத்தை ஆழப்படுத்தி மழை நீரை சேகரிப்பதற்கும் அதனூடாக விவசாயிகளுக்கும் கால்நடைகளுக்கும் நீரை பெற்றுத்தரவும் மற்றும் சுற்றுச் சூழலிலுள்ள பொதுமக்களின் கிணறுகள் நன்னீராக மாற வாய்ப்புள்ளது என்றும் - அவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டை தங்களுக்கு வழங்கும் படியும் கோரியிருக்கின்றனர். இந்தத் திட்டத்தினை நான் வடக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன அமைச்சருடனும் அமைச்சின் திணைக்கள அதிகாரிகளுடனும் இணைந்து மேற்கொள்ளவுள்ளேன்.

மற்றும் லண்டனில் உள்ள நெடுந்தீவு ஒன்றியத்தை சேர்ந்த ஒருவர் வழங்கிய நிதியிலிருந்து அனலைதீவு மருத்துவமனைக்கு 25 ஆயிரம் ரூபாவுக்கு மருத்துவ உபகரணங்கள் மற்றும் புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு வைத்திய சாலைகளுக்கும் தலா 25 ஆயிரம் ரூபாவுக்கும் மொத்தமாக ஒரு லட்சம் ரூபாவிற்கு அந்தந்த வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளின் முன்மொழிவுடன் மருத்துவ உபகரணங்களை பெற்று அன்பளிப்பு செய்யப்படவுள்ளன. இவை வடக்கு மாகாண சுகாதார சுதேசிய அமைச்சருடனும் அமைச்சின் திணைக்கள அதிகாரிகளுடனும் இணைந்து முன்னெடுக்கப்படவுள்ளது - என்றும் விந்தன் கனகரத்தினம் மேலும் தெரிவித்தார். (ந-5)

### பெற்றோர்

அவர்கள் திருட்டில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-4)

### உரும்பிராயில்

வீட்டுக்காரர் வீட்டின் பின்கதவைத் திறந்துவிட்டுள்ளனர். அவ்வாறே நித்திரையாகிவிட்டனர். மறுநாள் காலை அவர்கள் நித்திரையால் எழுந்து பார்த்த போதே திருட்டு இடம்பெற்றதனை அறிந்துள்ளனர். அது தொடர்பில் குறித்த வீட்டுக்காரர் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்று பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இது தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ந-4-21-106)

### சிறைச்சாலை

வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கு நிறைவடைந்த பின்னர் மதியம் சிறைக்காலர்கள் அவர்களுக்கு மதிய உணவுப் பாசல் கொடுத்துள்ளனர். ஆனால் குறித்த நபர் அவர்கள் கொடுத்த பார்சலை தூக்கி எறிந்து குழப்பத்தில் ஈடுபட்டுள்ளார். அதையடுத்து அவரை நீதிமன்றப் பொலிஸாரர் கைது செய்து நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். குறித்த நபர் தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு ஒரு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (ந-4)

## எரிகாயங்களுடன் குடும்பஸ்தர் மருத்துவமனையில் அனுமதி

அளவெட்டி,ஓக. 8
எரிகாயங்களுக்குள்ளான நிலையில் 3 பிள்ளைகளின் தந்தை யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மல்லாகம் நரியிட்டான் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் அதேயிடத்தைச் சேர்ந்த கனகரட்ணம், யோகதாசன் (வயது - 34) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.
தன்னிடம் மது அருந்துவதற்குப் பணம் கேட்டதாகவும் அதனைக் கொடுக்க மறுத்ததாலேயே மண்ணெண்ணை ஊற்றி தனக்குத்தானே தீ மூட்டி உயிரை மாய்க்க முயன்றார் என்றும் அவரது மனைவி கூறியுள்ளார்.
குறித்த நபர் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் தெல்லிப்பளை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (வ-36)

# கடும் வறட்சி காரணமாக மிளகு விளைச்சல் வீழ்ச்சி

கொழும்பு, ஓக. 8
இந்த முறை நிலவும் கடும் வறட்சி காரணமாக மாத்தளை மாவட்டத்தில் மிளகுச் செய்கையின் போதான விளைச்சல் நூற்றுக்கு 75 வீதமாகக் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 2012ஆம் ஆண்டின் வருடாந்த விளைச்சல் 4918.67 மெற்றிக் தொன்களாக இருந்தன. ஆனால், இந்தமுறை மிளகு விளைச்சல் குறைவடைந்துள்ளதன் காரணமாக ஒரு கிலோ பச்சை மிளகின் விலை 250 ரூபாவுக்கும் 300 ரூபாவுக்கும் இடையில் காணப்படுகின்றது. ஒரு கிலோ காய்ந்த மிளகின் விலை ஆயிரத்து 200 ரூபாவரை அதிகரித்துள்ளது. போதிய விளைச்சல் இல்லாததன் காரணமாக தமக்கு நிறையவே பொருளாதாரச் சிக்கல்கள் தோன்றியுள்ளதாக மிளகு உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.
பெருமளவில் மிளகுச் செய்கை மேற்கொள்ளப்படும் பல்லேபொல, யட்டவத்த, மாத்தளை, ரத்தோட்டை போன்ற பல பிரதேசங்களில் மிளகுப் பயிர்கள் அழிவடைந்து வருவதால் இந்த நிலை தோன்றியதாக மிளகுச் செய்கையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.
மேலும், வருடாந்தம் ஆயிரம் கிலோ வரையில் விளைச்சலைப் பெற்று வந்துள்ள சிறுமிளகுத் தோட்ட உரிமையாளர்கள் இந்த முறை 50 கிலோ வரையான விளைச்சலையே பெற்றுள்ளனர்.
மழைவீழ்ச்சி குறைவடைந்து கடும் வறட்சி நிலவுவதும், கடும் காற்று வீசுவதும் இதற்கான பிரதான காரணங்களாகும். மேலும் அறுவடைக்குத் தயாரான நிலையில் காணப்படும் மிளகுச் செடிகளின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறுவதுடன் கொடிகள் காய்ந்து கருகிப் போகும் நிலையும் மத்திய மாகாணத்தின் மிளகுப் பயிர்ச்செய்கை நிலங்களில் காணப்படுகின்றது. (க-22)

## மான் வேட்டையாடிய 4 பேருக்குத் தண்டம்

கிளிநொச்சி, ஓக. 8
கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் அரச காட்டுப்பகுதிக்குள் மான் வேட்டையாடிய நான்கு பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.
பூநகரிப் பொலிஸார் கைது செய்து குறித்து நான்கு பேரையும் புதனன்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன் முன்னிலைப்படுத்தினர். அப்போது இந்தத் தண்டம் விதிக்கப்பட்டது. (ஓ-55)



கண்டி எசல பெரஹெரவின் இரண்டாவது ரந்தோலி பெரஹெர நேற்றுமுன்தினம் மாலை 6.56 மணிக்கு ஆரம்பமாகி வீதி உலா வந்தது. பெரஹெர வடமேல் திசை பார்த்து தலதா வீதியினூடாக ஆரம்பித்து டி.எஸ்.சேனாநாயக்க வீதியூடாக கொழும்பு வீதியை வந்தடைந்து பின்னர் யட்டிநுவர வீதியூடாக ரஜ வீதியை அடைந்தது. (ஓ)

## வாய்த்தர்க்கம் கத்திவெட்டில் முடிவு; நால்வர் காயம்

தென்மராட்சி, ஓக. 8
இரு குடும்பங்களுக்கு இடையே ஏற்பட்ட சண்டையில் இரண்டு சிறுவர்களும் இரண்டு பெண்களும் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மீசாலை தெற்கில் இடம்பெற்றது.
பக்கத்து வீட்டுக்கு இரவு டோர்ச் வெளிச்சத்தைப் பாய்ச்சியதில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டுக் கத்தி வெட்டு வரை சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சபேசன் (வயது-17), ஐயம்பிள்ளை தெய்வானை (வயது -75), பிறைசூடி சறோசா (வயது - 56), பிறைசூடி பிறைசன் (வயது - 15) ஆகியோர் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஓ-9)

## மீசாலை விபத்தில் ஒருவர் சாவு; இருவர் காயம்

தென்மராட்சி, ஓக. 8
வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டுவிலகி மதிலுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார், இருவர் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு 11 மணிக்கு ஏ-9 வீதி, மீசாலை ஐயா கடையடியில் இடம்பெற்றது.
இறந்தவரின் சடலம் சாவகச்சேரி மருத்துவமனையில் வைக்கப்பட்டது. காயமடைந்த இருவரும் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது;
மானிப்பாயைச் சேர்ந்த இருவர் பளையில் இருந்து வெளிநாடு செல்லவுள்ள நண்பரை வழியனுப்ப மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.
மீசாலை ஐயா கடையை அண்மித்த பகுதியில் அந்த வழியே சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் கான்ரிலில் வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் கான்ரில் முட்டியதால் இரு மோட்டார் சைக்கிள்களும் தளம்பல் நிலை ஏற்பட்டு ஒரு மோட்டார் சைக்கிள் சரிந்து விழ மற்றைய மோட்டார் சைக்கிள் வீதியோர மதிலுடன் மோதியது. மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த சாவகச்சேரி ஆயுள் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் விற்பனை மேற்பார்வையாளராகப் பணியாற்றும் மானிப்பாய் உடுவில் தெற்கைச் சேர்ந்த தனநாயகம் தனப்பிரகாஸ் (வயது-25) சம்பவ இடத்தில் உயிரிழந்தார். அவருடன் பயணித்த மானிப்பாய் சுதுமலை தெற்கைச் சேர்ந்த சதாசிவம் சர்வானந்தன் (வயது - 31) என்பவருக்கு கால் முறிந்தது. மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த யோகராசா ஆரோக்கிய நாதன் (வயது-36) என்பவருக்கு இடுப்பில் பாதிப்பு ஏற்பட்டது.
மூவரும் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு காயமடைந்த இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (வ-9)

## கைபேசியில் ஆபாசம்; மிருசுவில் வாசிக்கு ரூ.50 ஆயிரம் தண்டம்

கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப் படங்கள் வைத்திருந்த மிருசுவில் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
கொடிகாமம் பகுதியில் பொது இடத்தில் வைத்து ஆபாசப் படங்களைக் காண்பித்துக் கொண்டிருந்த வேளையில் பொலிஸாரினால் இந்த நபர் கைது செய்யப்பட்டார்.
இவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஓ-9)

## உடுப்பிட்டிப் பகுதியில் இரு வீடுகளில் திருட்டு

### அதிகாலை ஜன்னல் கம்பிகளை வளைத்து புகுந்து

உடுப்பிட்டி, ஓக. 8
உடுப்பிட்டிப் பகுதியில் உள்ள இரு வீடுகளில் நேற்றுமுன்தினம் அதிகாலை வீட்டுக்காரர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவேளை வீட்டு ஜன்னல் கம்பிகளை வளைத்து உட்புகுந்த திருடர்கள் பணம், நகை போன்ற பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றிருக்கின்றனர்.
வீட்டுக்காரர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது அதிகாலை வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஒரு வீட்டில் சுமார் 85ஆயிரம் ரூபா பணமும் 2 பவுண் நகைகளும் இவ்வாறு திருடப்பட்டிருக்கின்றன. மற்றைய வீட்டில் சுமார் 50ஆயிரம் ரூபா பணமும் மூன்று பவுண் நகைகளும் அபகரிக்கப்பட்டுள்ளன. இரு வீட்டாரும் வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். சம்பவ இடங்களுக்குச் சென்று பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். (ஓ-109)

# மருந்து விசிறப்பட்ட மீன்கள் பறிமுதல்

### சாவகச்சேரி சந்தையில்




தென்மராட்சி,ஓக. 8
மருந்து விசிறப்பட்டுச் சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி மீன்கள் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி மீன் சந்தையில் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.
பொதுமக்கள் கொடுத்த முறைபாட்டை அடுத்து மீன் சந்தையில் நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் தேடுதல் நடத்தினார்.
அவ்வேளையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மருந்து விசிறப்பட்ட மீன்களைக் கைப்பற்றி எடுத்துச் சென்ற அவர்கள் அவற்றை அழித்துவிட்டனர்.
வடமராட்சி பிரதேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டு சந்தை வியாபாரிகளுக்கு வழங்கப்பட்ட மீன்களே மருந்து விசிறப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## ஓய்வூதிய நிலுவைக் கொடுப்பனவுகளை திணைக்களமே நேரடியாக வழங்கும்

யாழ்ப்பாணம், ஓக. 8
அரச சேவை ஓய்வூதியர்களின் நிலுவைக் கொடுப்பனவுகளில் குறிப்பிட்ட அளவுக்கு மேற்பட்ட கொடுப்பனவுகள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை ஓய்வூதியத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.
அரச சேவை ஓய்வூதியர்களுக்கான மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பிரதேச செயலகங்களின் கணக்குப் பிரிவின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன. ஓய்வூதியம் பெறுவோர் தமது ஓய்வூதியத்தை உரிய காலத்தில் பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் அதன் நிலுவையை உரிய முறையில் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள முடியும்.
அந்த வகையில் கடந்த கால போர்ச் சூழலால் புலம் பெயர்ந்த மற்றும் இடம்பெயர்ந்தவர்களில் ஓய்வூதியம் பெற உரித்துடையோர் மற்றும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியம் பெற தகைமைபெற்றோர் தமது ஓய்வூதியம் மற்றும் நிலுவைகளைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர்.
இவர்களது விண்ணப்பங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக ஏற்கப்பட்டு, பரிசீலிக்கப்படடு நிலுவைத் தொகைக்கான கொடுப்பனவுகள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் நேரடியாக வழங்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை ஓய்வூதியத் திணைக்களம் செய்துள்ளது.
இந்த வகையில் நிலுவைக் கொடுப்பனவுகள் மில்லியன் கணக்கில் வழங்க வேண்டி இருப்பதால் விண்ணப்பிப்பவர்களின் ஆவணங்கள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களுக்கான கொடுப்பனவுகள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் நேரடியாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று ஓய்வூதியத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-11)

Mega Sale

ARPICO

ஆடி தள்ளுபடி

என்றும் எங்கும் கிடைக்காத

அமோக விலை குறைப்பு

மங்களா காட்சியறை

536, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

021 222 8367 - 021 222 8366 0777 286 069

# ஞானசார தேரருக்கு எதிராக ராஜித வழக்குத் தாக்கல்

*1 பில்லியன் ரூபா நட்டஈடு கோரவுள்ளாராம்*

கொழும்பு, ஓக. 8

பொதுபல சேனாவின் செயலாளர் ஞானசார தேரருக்கு எதிராக 1 பில்லியன் ரூபா நட்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மாளிகாவத்தையில உள்ள மீன்பிடித்துறை மற்றும் கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்த ஞானசாரதேரர் பல குற்றங்களைச் செய்தவர். அவருக்கு எதிராக பல முறைப்பாடுகள் பொலிஸில் உள்ளன. மதுபோதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பில் அவருக்கு எதிராக கிராண்பாஸ் பொலிஸில் முறைப்பாடு இருக்கின்றது" என்றும் அவர் தெரிவித்தார்.

தன்னுடைய சட்டத்தரணியின் மூலமாகவே வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

சாரதிகள் தேவை

யாழ்நகரில் தங்கி வேலை செய்யக்கூடிய பார ஊர்தி சாரதிகள் தேவை. (சி.15362) (45.3)

விபரங்களுக்கு: 071 864 3645

"வெற்றி நிச்சயம்"

இறுதி நேரத்தில் வந்துவிட்டது

தரம் – 05 2014

17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு

முற்றிலும் எதிர்பார்க்கக் கூடிய மாதிரி வினாத்தாளும் விடையும்

கொழும்பு எக்ஸ்பிறஸ் வெளியீடு

தொலைபேசி 0113818722, 0750410034, 0778448763

யாழ். மாவட்டத்தில் : அன்னை - யாழ், பூபாலசிங்கம் - யாழ், மோகன்ஸ் - பளை பஸ் நிலையம் அருகில், துர்க்கா - சுன்னாகம், மொடேர்ன் - நெல்லியடி, பாக்கியா - கொக்குவில், செல்லாச்சி - பருத்தித்துறை, அருள் நாயகி - கொடிகாமம், பொதிகை - சாவகச்சேரி.

Arul Study Circle

111, Bonjean Road, Kotahena, Colombo 13,

T.P: 011 2331 495, 011 2470 148

G.C.E. (O/L) 2014

மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு

Free Seminar



| பாடம் | ஆசிரியர்கள் |
|---|---|
| கணிதம் | வே.தேவசேனாதிபதி (L.L.B சட்டத்தரணி)<br>K. வசந்தராஜ் (ஆசிரியர், நாவலப்பிட்டி) |
| விஞ்ஞானம் | வே.சுந்தரேஸ்வரன் (D.G.M National Lotteries Board)<br>V. பிரேம்குமார் (PHI, Jaffna)<br>மணிமாறன் |
| வரலாறு | S. நடராஜா B.A,<br>S. ஐங்கரன் B.A. Hons (Geo), M.A. (Geo), PGDE, PGDE (Adm.), A.C.P.K, M.P.A (J.Pura)<br>செல்வி மேகலா பேர்ணாந்தோ (L.L.B சட்டத்தரணி) |
| தமிழ் | K. திவாகர் B.A Hons. |

இலவசக் கருத்தரங்கு நடைபெறும் இடமும் திகதியும்

ஊர்காவற்றுறை பிரதேச செயலகம்

08.08.2014 (வெள்ளி, காலை 8.30 - மாலை 5.00. இருபாலாரும்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

(தெழுநட்பக்கல்லூரி) 09.08.2014 (சனி, காலை 8.00 - மாலை 5.00. இருபாலாரும்.)

யாழ். வீரசிங்கம் மண்டபம்

10.08.2014 (ஞாயிறு, காலை 6.00 - மாலை 5.00. மாணவிகள் மட்டும்.)

11.08.2014 (திங்கள், காலை 6.00 - மாலை 5.00. ஆண் மாணவர்கள் மட்டும்.)

12.08.2014 (செவ்வாய், காலை 6.00 மாலை 5.00. இருபாலாரும்.)

உருத்திரபுரம் தமிழ் மகா வித்தியாலயம்

13.08.2014 (புதன், காலை 8.00 மாலை 5.00. இருபாலாரும்.)

கற்சிலைமடு அ.த.க. பாடசாலை

14.08.2014 வியாழன், காலை 8.30 மாலை 5.00 வரை.

மன்னார் ஆகாஸ் ஹோட்டல் மண்டபம்

15.08.2014 (வெள்ளி, காலை 8.00 - மாலை 5.00. இருபாலாரும்.)

முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் நூல்கள்

- ★ கணிதம், விஞ்ஞானம், வரலாறு, தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களின் 2009, 2010, 2011, 2012, 2013, ஆகிய வருட க.பொ.த (சா/த) பரீட்சை வினா-விடைப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.
- ★ கணிதம் கடந்த 17 வருட க.பொ.த (சா/த) பரீட்சை வினா - விடைப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.
- ★ அனைத்துப் பாடங்களிலும் மாதிரி வினாக்கொத்து (Tutes) வழங்கப்படும்.
- ★ விஞ்ஞான வினாவிடை நூல் இலவசமாக வழங்கப்படும். (25 வருட கடந்தகால வினாவிடைத் தொகுப்பு)

இலவச கருத்தரங்குக்கான முழு அனுசரணை: வே.தேவசேனாதிபதி L.L.B சட்டத்தரணி

தொடர்புகளுக்கு: பே.இளமுருகன் ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி. தொ.பே.: 077 907 3593

ஊடக அனுசரணை: உதயன் மக்கள் மனம் நிறைந்த நாளிதழ் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/14782)(10.6.3)

## காதலியை குத்திய காதலன்

கொழும்பு, ஓக. 8

கொழும்பு அருங்காட்சியகத்துக்கு அருகில் இளம்பெண் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகிய நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

22 வயதான குறித்த பெண் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம்தொடர்பில் கத்திக்குத்துக்கு இலக்கான பெண்ணின் காதலன் எனக் கூறப்படும் 23 வயதான இளைஞர் ஒருவரை கறுவாத் தோட்டப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (ற)

வேலைவாய்ப்பு



யாழ். மாவட்டத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் தேவை.

முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

சொந்தமாக மோட்டார் சைக்கிளும் சாரதி அனுமதிப்பத்திரமும் இருத்தல் வேண்டும்.

உங்கள் சுயவிவரக்கோவையை கீழ்வரும் முகவரிக்கோ / மின் அஞ்சலுக்கோ அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம்: 5005

மே/பா. உதயன், இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Email: jaffnavacancy@gmail.com (சி.15350)

மலிவு விற்பனை

- பாடசாலை விடுமுறையை முன்னிட்டு மீண்டும் அனைத்து நூல்களுக்கும் 20% விலைக்கழிவு வழங்கப்படுகிறது.
- நீரால் சேதமடைந்த ஒரு தொகுதி நூல்கள் 50% விலைக்கழிவில் விற்பனையாகின்றன.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (f/15295) (4.6.3)

வேலையாள்கள் தேவை

வவுனியா, கிளிநொச்சி, யாழ் மாவட்டங்களில் கட்ட டங்கள் நிர்மாணிப்பதற்குத் தேவையான உபகொந்திராத்துகாரர்களோ, வேலையாள்களோ தேவை.

கம்பி, சட்டறிங், கொங்கிறீட், கல்லுகட்டுவது, பூச்சு, மாபிள் போன்ற வேலைகளுக்கு. (சி.15361)

கிளிநொச்சி- 071 879 2367 கோண்டாவில் - 071 238 7106

வவுனியா - 071 238 7076 யாழ்நகர் - 077 375 1803





மிருசுவில் படித்த மகளிர் திட்டம் "துர்க்காபுரம்"

அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான

அலங்கார உற்சவம் - 2014

ஞானதுர்க்கை அம்மன் அடியார்களே!

அலங்கார உற்சவமானது ஜய வருடம் ஆடி மாதம் 16ஆம் நாள் (01.08.2014) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி இனிது நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. நாளை (09.08.2014) சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு தேர்த்திருவிழா பூசைகள் ஆரம்பமாகி விசேட அபிஷேகங்கள் நடைபெற்று தேர்த்திருவிழாவானது மிகவும் சிறப்பாக நடைபெற இருக்கின்றது. தேர்த் திருவிழாவின் போது ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் ஸவரிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்காதேவியுடன் சேர்ந்து வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

அடியார்கள் இவ்விழாக் காலத்தில் பங்குகொண்டு எல்லாம்வல்ல ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் பாதார விந்தத்தை தொழுது திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின்றோம்.

தேர்த்திருவிழா முற்பகல் 11 மணிக்கு

"இறை பணியே இன்பப் பணி"

"துர்க்காபுரம்" படித்த மகளிர் திட்டம், மிருசுவில்.

ஆலய தர்மகர்த்தா, சிவத்திரு சி.நவரத்தினம் ஐயா

திருவிழா உபயகாரர்கள் :

திரு.திருமதி **கதிர்காமு உதயகுமாரன்** குடும்பம் (மீசாலை வடக்கு, கொடிகாமம்)

திரு.திருமதி **சின்னத்தம்பி செல்லத்துரை** குடும்பம் (மீசாலை வடக்கு, கொடிகாமம்)

திரு.திருமதி **தம்பையா சிவானந்தராசா** குடும்பம் (கொக்குவில் கிழக்கு, கொக்குவில்)

திரு.திருமதி **கந்தசாமி அனுராஜன்** குடும்பம் (வடக்கு மிருசுவில், மிருசுவில் (பிரான்ஸ்)

(60642)(7.6.3)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.